



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ACCESSION NO:
CLASS NO:

# நாம் ஒன்று நினைக்க...!

## (நாவல்)

PUBLIC LIBRARY
KALMUNAI

- ஒலுவில் அமுதன் -

வெளியீடு,
ரக்ஸானா வெளியீட்டகம்
67, புதுப்பள்ளி வீதி,
அக்கரைப்பற்று - 5.
067- 78339

REFERENCE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R 15525

ACCESSION NO: 156625
CLASS NO: 894.8113

ஒலுவில் அமுதன் இதுவரை
வெளியிட்ட நூல்கள்

- மனக்கோலம் - கவிதைத்தொகுதி
- மரணம் வரும்வரைக்கும் - கவிதைத் தொகுதி
- கலையாத மேகங்கள் - சிறுகதைத் தொகுதி
- நாம் ஒன்று நினைக்க... - நாவல்

பதிப்புரிமை : ஆசிரியருக்கே
பதிப்பு : 2000 ஏப்ரல் 18

**NAAM ONTRU NENAIKKA..!**
**OLUVIL AMUTHAN**

விலை / Price } 90/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழம் பெரும் எழுத்தாளரின் பேனாவில் இருந்து

தென்கிழக்கு மண்ணுக்கும் மனிதர்களுக்கும் நான் மிக மிக பிடித்தமானவன். அதுவும் இளைய தலைமுறையினர் என் எழுத்துகளுக்கு கொடுக்கும் மதிப்பு இருக்கிறதே... அது வார்த்தைகளுக்குள் அடங்காது!

இந்த பின்னணியில் ஒரு பொழுதில் ஒலுவில் அமுதன் அவர்களது தொலைபேசித் தொடர்பு...!

என் காதில் விழுந்தது. அதிர்ச்சியை கொடுத்தாலும் ஆனந்தத்தையும் அள்ளி வழங்கியது

அவரது நாவல் ஒன்றுக்கு நான் புகழாரம் சூட்ட வேண்டுமாம்! அப்பாடா ! ஆகக் கடைசியில் அலாவுதீன் என்கிற ஒலுவில் ஊரை பிறப்பிடமாகவும் அக்கரைப்பற்றை வாழ்விடமாகவும் கொண்ட ஒலுவில் அமுதனாவது எனக்கும் படைப்பிலக்கியத்திற்கும் உள்ள பரிச்சயத்தை புரிந்திருக்கின்றாரே !

மகிழ்ச்சி, மிக்க மகிழ்ச்சி ! அபிமானிகளுக்கு ஒன்றை மறக்காமல் சொல்லி விட வேண்டும். நான் ஒலுவில் அமுதனின்' நாவலை படித்தவனல்ல. படிக்காமலே எண்ணத்தை எழுத வேண்டும் என்பதுதான் அவர் ஆசை. இது அநியாயமான ஆசையாக தோன்றவில்லை எனக்கு!

1988 ம் ஆண்டில் 'மனக்கோலம்' கவிதைத் தொகுதியை வெளியிட்டிருக்கிறார். அப்புறம் கடந்த நூற்றாண்டின் இறுதிப் பொழுதுகளில் (1999) 'மரணம் வரும் வரைக்கும்" என்ற மற்றொரு கவிதைத் தொகுதியையும் 'கலையாத மேகங்கள்' என்ற சிறுகதைத் தொகுதியையும் தந்து தன்னை யாரென இளைய தலைமுறையினருக்கு அடையாளம் காட்டி உள்ளார்.

இப்பொழுது இரண்டாயிரத்தில் நாவல்!

நாவலின் நாயகன் - நாயகியை தெரிந்து கொள்ள ஆசை. எந்த பின்னணியில் அவர்கள் உலா வருகிறார்கள் என்பதையும் அறியத் துடிப்பு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாலும் நானும் காத்திருந்து எல்லோரும் அறியும்போதுதான் அறிய முடியும்.

இது புதுமையான அனுபவம்!

எவ்வாறாயினும் இந்த அக்கரைப்பற்று வாழ் மைந்தருக்கு என் ஆயிரமாயிரம் வாழ்த்துக்களை அள்ளி வழங்கி கௌரவிக்கின்றேன்.

கவிதை - கதை - நாவல் என ஒன்றன் பின் ஒன்றாக இலக்கிய படிகளில் ஏற்றம்! அதுவும் ஒரே ஆண்டில் (1999) இரு நூல்களின் அரங்கேற்றம்!

அருமை ! அருமை !


இனி நாடகம் ஒன்றே பாக்கி, அபிமானி அலாவுதீன் (ஒலுவில் அமுதன்) அவர்களுக்கு அதுவும் கைவந்த கலை !

வரட்டுமே வானொலி நாடகத்தொகுதி ஒன்றும்! ஏற்கனவே இவரின் நாடகங்கள் முஸ்லிம் சேவையில் இடம் பெற்றுள்ளன.

வங்கி அதிகாரியாக வயிற்றுப்பாட்டை பார்த்துக்கொண்டு இலக்கிய வங்கியையும் மனக்கோலத்தில் வைத்துக்கொண்டு மரணம் வரும்வரைக்கும் கலையாத மேகங்கள்போல் நடத்திட இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

மிக்க அபிமானத்துடன்
தங்கள்
**மானா மக்கீன்** (தமிழ் மணி)

அஞ்சானா,
பீ - 54 - 1/2
தேசிய வீடமைப்பு மாடி வீடு,
கொழும்பு - 10.
தொலைபேசி 01 - 332225



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பத்திரிகையாளரின் எண்ணத்தில்

நீர்வை, தெளிவத்தை, திக்குவல்லை என்றதும் முறையே பொன்னையன், ஜோசப், கமால் போன்றவர்களின் பெயர்கள் ஞாபகத்துக்கு வருவது போலவே ஒலுவில் என்றதும் அமுதன் என்ற பெயரும் நினைவில் மின்னுமளவிற்கு அண்மைக் காலங்களாக கணிசமான அளவில் இலக்கிய ஈடுபாட்டினைக் காட்டி வருகின்றார் ஆ. அலாவுத்தீன் என்னும் இயற்பெயர் கொண்ட ஒலுவில் அமுதன்.

வாழ்வியலை உயிர்ப்புடன் காணத்துடிக்கும் உத் வேகம் கொண்ட அமுதன் கவிதை, சிறுகதை என பல்லின பரிமாணங்களிலும் அகல கால் பதித்து வருபவர்.

மனக் கோலம், மரணம் வரும் வரைக்கும், கலையாத மேகங்கள் வரிசையில் நான்காவதாக வெளிக்கொணரப்படும் இந்நூல் ஒலுவில் அமுதனின் இலக்கிய பாய்ச்சலை பொறுத்தவரை ஒரு படிக்கல் என்று தாராளமாகக் கூறலாம்.

புலோலியூர்
**ஆ. இரத்தின வேலோன்**
( ஆசிரியபீடம் - தினக்குரல் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வாசகரின் பார்வையிலே

கலையாத மேகங்கள் என்னும் ''ஒலுவில் அமுதன்'' (அலாவுதீன் ) எழுதிய சிறுகதைத் தொகுதியானது அவரால் ஏற்கனவே எழுதி வெளியிட்ட இரு கவிதைத் தொகுதிகளில் இருந்தும் சற்று மாறுபட்ட கண்ணோட்டத்தில், சமுதாயத்தில் புரையோடிப் போய் கிடக்கின்ற உண்மைகளை வெளிக்காட்டும் ஓர் கண்ணாடியாக காணப்படுகின்றது.

பதினைந்து சிறுகதைகளிலும் இடம் பெறும் சம்பவங்களை உற்று நோக்கும் போது இன்றைய காலகட்ட சராசரி மனிதர்களின் முகங்களை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதாக உள்ளது.

சுந்தரம் என்கின்ற ஏழை விதிவசத்தால் பணக்காரன் ஆவதும் அவன் ஏழையாக இருந்த நிலையை மறந்து ஏழைகளை ஒதுக்குவதன் ஊடாக மீண்டும் ஏழையாக மாறுவதும் இன்றைய காலகட்டத்தில் இடம் பெறும் ஒரு சம்பவமே! குடும்ப நிலை காரணமாக வறுமையைக் காரணம் காட்டி இன்று எத்தனையோ பெண்கள் வெளிநாடு செல்லும் நிலை இருக்க தன் அழகை மூலதனமாக்கி தன் கணவனின் அனுமதியின்றி வெளிநாடு சென்று சீரழிகின்ற பெண்களை ஆசிரியர் ''பெண்ணின் பணி '' எனும் சிறுகதையின் ஊடாக காட்டி இருப்பது நவநாகரிக உலகில் பெண்கள் பாரதிகண்ட புதுமைப் பெண்ணாகவும் இருக்க வேண்டும். அதே நேரம் குடும்ப பெண்ணாகவும் வாழ வேண்டும் என்பதையும் கோடிட்டுக் காட்டி உள்ளார்.

ஆசிரியரின் ''நேர் கோடுகள்'' சிறுகதை கூட இன ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டாக உள்ளது. ரஸீகா, சலீம் இருவரையும் இறுதி வரை நண்பர்களாகவே விட்டிருக்கலாம் என்ற எண்ணம் எனக்கு எழுந்தாலும் ஒலுவில் அமுதனோ யதார்த்தத்தை உணர்ந்து கதையை முடித்திருப்பதும் வரவேற்கத் தக்கதே!

''கலையாத மேகங்கள் '' அவரது சிறுகதைத் தொகுதியின் ஒரு சிகரம் என்றே கூறலாம். நாட்டு நடப்பை அப்படியே படம் பிடித்து காட்டுகின்றது. அரசும் புலிகளும் நினைத்தால் மக்கள் சந்தோஷமாக வாழலாம் என்பதை துணிவாக சொல்கிறார் ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய உணர்வு இன்றைய எழுத்தாளர்களிடையே தீவிரமாகத் தோன்றி வளர்ந்து வருகின்ற இன்றைய காலகட்டத்தில் தனது படைப்புக்கள் மூலம் எழுத்துலகில் கால் பதித்த ஒலுவில் அமுதன் அவர்களின் சிறுகதையை வாசிக்கும் வாசகர்களுக்கு ஒன்று மட்டும் நிச்சயமாக புலப்படும். அனைத்துத் துறைகளிலும் அவருக்கிருந்த அறிவார்ந்த ஈடுபாடு, மனிதநேயம், ஒரு விடயத்தை எழுத முன் அதனை அனுபவித்த தன்மை என்பவற்றையே அவரது கதையை வாசிக்கும் போது எம்மால் உணர முடிகிறது.

அவரது தனித்துவமான நடை, சொல்ல வந்தவற்றை துணிவுடன் கூறுகின்ற பாங்கு, ஒரு சாதாரண மனிதன் கூட இலகுவில் விளங்கிக் கொள்ளும் வகையில் எழுதப்பட்ட விதம் இவற்றினால் நான் கவரப் பட்டுள்ளேன் என்றுதான் கூற வேண்டும்.

இன்று எத்தனையோ ஆசிரியர்கள் சிறுகதைகளை வெளியிட்டாலும் காலத்தை உணர்ந்து யதார்த்தத்தை உணர்ந்து தனது ஒவ்வொரு கதைகளிலும் சொல்லி இருக்கின்ற பாங்கு உண்மையில் வரவேற்கத்தக்கதாகும்.

இத்தனை சிறப்புக்களுக்கும் உரித்தான ''ஒலுவில் அமுதன்'' எனும் புனைப் பெயரில் எழுதும் ஜனாப் .ஆ. அலாவுதீன் தொடர்ந்து துணிவுடன் எழுதுவார் என்று நிச்சயம் நம்பலாம். ஓர் எழுத்தாளனின் பேனாமுனை ஆயுதமுனையை விட கூர்மையானது என்பதை நிரூபிக்க வேண்டுமெனக் கூறி பணி தொடர வாழ்த்தி விடை பெறுகிறேன்.

**செல்வி சிவப்பிரகாசம் யதர்ஷினி**
வாடி வீட்டு வீதி,
கல்முனை.

PUBLIC LIBRARY
KALMUNAI.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொஞ்சம் நில்லுங்கள்

விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சில இலக்கிய எதிரிகளை பெற்றாலும் அதிகளவான அபிமான வாசகர்களை கொண்டவன் நான் என்பதை சொல்லி தெரியவேண்டிய அவசியமில்லை! என் புத்தக விற்பனையே அதற்குச் சான்று!

புத்தக கடைகளிலும் முகம் தெரியாத வாசகர்கள் பலர் எனது புத்தகங்களை வாங்கி சென்றுள்ளார்கள். எனது வெளியீடுகளை வாங்கி மேலும் மேலும் என்னை எழுதத் தூண்டும் அன்பு நெஞ்சங்களே............... உங்களுக்காக என் பேனா ஓய்வின்றி உழைக்கும்.

சிலர் நினைத்திருக்கலாம் ஒரு புத்தகத்துடன் நின்று விடுவார் என்று! நானும் எழுதவேண்டும். இலக்கிய உலகில் என் பெயர் நிலைத்து நிற்க வேண்டும். மற்ற எழுத்தாளர்கள் கவிஞர்களை விட சளைத்தவனல்ல இந்த 'அமுதன்' என்று சொல்லும் அளவிற்கு நான் வளர வேண்டும். எழுத்துத் திறமையால் மற்ற எழுத்தாளர்கள் சொல்லாத விடயங்கள், நோக்காத சம்பவங்கள் பலவற்றை துணிவுடன் தருவேன். இது எனது நான்காவது வெளியீடு.

வருடம் ஒரு புத்தகம் எழுதி வெளியிடுவது எனது பணி. கவிதை, கதை, கட்டுரை, நாடகம், பாடல் என்று எனக்கு விதிவிலக்கு கிடையாது. எல்லாவற்றிலும் எழுதி திறமையை நிரூபிப்பேன்.

எழுத்தின் மீதுள்ள காதலுடன் எனது எதிரிகள் வரையும் தபாலட்டைகளுமே என்னை மேலும் மேலும் வழர்த்தது. அட்டைகள் வரைந்தவர்கள் தும்புக்கட்டைகளாகி இலக்கிய உலகில் இருந்து இறந்து வருகின்றார்கள். காலப்போக்கில் கால்பட்ட இடமும் தெரியாது போய்விடும்.

நல்ல இலக்கியவாதி காலக்கண்ணாடியாக என்றும் ஒளி தருவான்.

''அநீதிகளையும் அக்கிரமங்களையும் துணிந்து எழுதுபவன்'' என்று ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டிருந்தேன். இலக்கியவாதிகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரமே அதனை அனுப்பினேன். அவர்களில் இரண்டொருவருக்கு பொருளே விளங்க வில்லை என்றால் அவர்களை விட எனது அபிமான வாசகர்கள் எவ்வளவோ மேல்.

அநீதிகளையும் அக்கிரமங்களையும் துணிந்து எழுதுபவன். ஆமாம்; நல்லவர்கள் போல இருந்து கொண்டு அவர்கள் செய்கின்ற அநீதிகளையும் அக்கிரமங்களையும் வெளிச்சத்துக்கு கொண்டு வருபவன். இப்போது தான் அந்த அரைகுறை இலக்கியவாதிகளுக்கு பொருள் புரிந்திருக்கும்.

பொதுச்சேவை புரிவதாக மார்தட்டும் பலர் சுய நலவாதிகளாகவும், போலிகளாகவும் ஏன் திருடர்களாகவும் இருக்கிறார்கள்! இவர்களை எல்லாம் இனங்காட்டுவது என் பணி. சில கவிஞர்கள் இருக்கிறார்கள். யாரையும் தாக்கி எழுதுவதில்லை என்கிறார்கள். இப்படியான கவிஞர்களால், கவிதைகளால் யாருக்கு என்ன பயன்?

அக்கிரமங்களை தட்டிக் கேட்கின்றவனே புரட்சி இலக்கியவாதி, புதுமைப் படைப்பாளி, துணிச்சல் நிறைந்தவன், அழகை வர்ணிப்பவர்களால் ஆவது ஏதுமில்லை!

இலக்கியத்துக்காக மக்கள் அல்ல. மக்களுக்காக இலக்கியம் இருக்க வேண்டும். மக்கள் நலனில் அக்கறை கொண்டவையாவே என் இலக்கியம் இருக்கும்.

அடுத்த வருடம் புதுமையான கருக் கொண்ட புத்தகத்தை எதிர்பாருங்கள், மீண்டும் ஒரு வெளியீட்டில் சந்திப்போம்!


- *ஒலுவில் அமுதன்* -

**(ஆ. அலாவுதீன்)**

67, புதுப்பள்ளி வீதி, அக்கரைப்பற்று - 05.

T.P. 067 - 78339


**எனது அன்புத் தந்தையின் இரண்டாவது நினைவுதினத்தில் இலக்கியப்படைப்பை காணிக்கையாக்குகின்றேன்.** *ஆசிரியர்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 01

தென்றல் காற்று மேனியைத் தொட்டு விளையாடியது. மெய் சிலிர்த்த வதனா பிடவையை எடுத்து போர்த்திக்கொண்டாள், கற்பனை உலகில் கன்னியர்களுக்கு கரை ஏது?

''சந்திரன் பெயருக்கேற்ற அழகு நிலா! பேச்சுக்கள் எனது காதில் தேன்வார்க்கும். அவரை அல்லது அவரைப் போன்ற ஒருவரை வாழ்க்கைத்துணையாக அடைந்தால்.., அதைவிட பெரிய இன்பம் எதுவாக இருக்கும்?'' என்று எண்ணி இன்புற்றாள் வதனா.

வதனாவும் சந்திரனும் ஒரே அலுவலகத்தில்தான் தொழில் புரிகின்றார்கள். இருவரும் மிக பண்பாகத்தான் பழகுவார்கள்.

''சந்திரன் என்னை காதலிப்பவராக இருந்தால் எனது எதிர்காலம் ஒளிமயமாகிவிடும். என்னை காதலிக்கமாட்டாரா? சந்திரன் எதுவும் சொல்கிறார் இல்லையே! பெண்ணான நான் எப்படி துணிந்து சொல்வது?'' எனப்பல நினைத்தாள் வதனா.

சந்திரனின் வீட்டருகே உள்ள இள யுவதிகள் கூட ''சந்திரன் என்னை விரும்பமாட்டாரா?'' என்று தவித்தார்கள். ஒரு பெண் ஒரு ஆணை விரும்புவதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று தொழில், வருமானத்திற்கு ஏதும் இடம் உண்டா என்பது. அடுத்து அங்கக்குறைபாடில்லாத அழகு. இவை இரண்டும் இருந்தால் எந்த மகளிரும் கண் வைப்பார்கள்தானே! எவர் கண்வைத்தாலும் சந்திரன் மனம் வைக்க வேண்டுமே!

உடம்பு சற்று களைப்பாக இருந்ததினால் அன்று சிறிது முன்னதாகவே வீடு சென்றான் சந்திரன்.

''என்ன மகன்? நேரத்தோட வந்திற்றீங்கே'' என மூர்த்தி கேட்டார்.

''ஆம் அப்பா, உடம்பெல்லாம் வலியாக இருக்கு ஆறுமாசமா லீவும் எடுக்கல்லே. தொடர்ந்து வேலை'' என்றான் சந்திரன் ''ஒருநாள் லீவுபோட்டு ரெஸ்ட் எடு மகன்'' என்று தந்தை மூர்த்தி கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அடுத்த கிழமை எடுக்கத்தான்'' என்று கூறிய சந்திரன் தாயார் கொடுத்த தேனீரை அருந்தத் தொடங்கினான். மூர்த்தி கடைத்தெருவுக்கு கிளம்பினார்.

''மகன் நீங்க கல்யாணம் முடிக்கிற வயசுக்கு வந்திற்றீங்க. ஆனா தங்கையின்ர கல்யாணத்தை செய்து போட்டு முடிக்கிறது தான் நல்லது'' தாயார் மலர்விழி சந்திரனிடம் கூறினாள்.

''என்ர கல்யாணத்தைப் பற்றி ஏனம்மா இப்ப கதைக்கிறீங்க? எனக்கு முதல் என்ர தங்கச்சி வாழணும். அதுக்கு முன்ன எந்த மகாராணி வந்தாலும் கல்யாணம் முடிக்கமாட்டேன். பயப்படாதீங்க அம்மா'' என்று உறுதியாக சொன்னான் சந்திரன். ஆறுதலடைந்தாள் மலர்விழி.

''தங்கையின் திருமணத்தின் பின்னர் என் திருமணத்தை பற்றி சிந்திப்போம்'' என்று சந்திரன் கூறி இருந்தாலும் இளமை நினைவுகளில் எதிர்கால கற்பனை ராஜ்ஜியம் உருவாகாமலா இருக்கும்?

சந்திரனின் மனத்திரை விரிந்தது. ''ஏழையாக பிறந்தால் எவ்வழியிலும் கஷ்டம்தான்! படித்து பரீட்சை தேறி பதவி பெற்றாலும் கஷ்டம்தான்! இன்பமான எண்ணங்களுக்கே முடிவுரை இல்லாமல் இருக்கின்றது! பெற்றோர் வசதி உள்ளவராக இருந்தால் தங்கையின் திருமணம் என்றோ... நடந்திருக்கும். வேலை கிடைத்த கையோடு எனக்கும் திருமணம் நடந்திருக்கும். ஏழையாக பிறந்தால் தங்கையின் சுமையும் வந்து சேர்ந்து விடுகிறது. கூடப்பிறந்த அன்புத் தங்கையை வாழவைக்க வேண்டும்.'' என்றெண்ணிக் கொண்டான் சந்திரன்.

நாட்கள் நகர்ந்த வண்ணம் இருந்தன. சந்திரனுக்கு தங்கையின் வாழ்வைப் பற்றிய எண்ணம். அலுவலக ஊழியர் வதனாவுக்கு தனது எதிர் காலத்தைப்பற்றிய ஏக்கம்! மனித மனங்களில் ஏதோ ஒரு தேக்கம் இருக்கத் தான் செய்யும்!

அலுவலகத்தில் சந்திரனை சந்தித்து உரையாடும் போதெல்லாம் ஒருவித புத்துணர்வு பெறுவாள் வதனா. சுருக்கமாக 'ஆம், இல்லை' என்று சொல்ல வேண்டிய பதிலுக்கு சுற்றி வளைத்து சொல்வாள். தன்னுடன் பேசுவதை வதனா மிக விரும்புகிறாள் என்பதை சந்திரனும் அறியாமல் இல்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று ஐந்து நிமிடம் முன் கூட்டியே அலுவலகம் சென்றாள் வதனா. அலுவலகத்தில் அரைவாசிப்பேர் வரவில்லை. கடமையில் கவனமுள்ள சந்திரன் எல்லோருக்கும் முதல் வந்திருந்தான். சந்திரன் தாமதித்து வேலைக்கு வந்ததே கிடையாது. அவன் வேலைக்கு வர தாமதமாகிவிட்டதென்றால் அவனுக்கு ஏதோ 'விபத்து' ஏற்பட்டுவிட்டது என நினைக்க வேண்டியதுதான்! அவனை நன்கு உணராத புதிய அதிகாரி ஒரு நாள் சந்திரன் தாமதமாகி வந்ததிற்கு அழைத்தார். அவர் வாய் திறக்க முதல் ''அம்மாவை ஒஸ்பிடலில் அட்மிட் பண்ணிட்டு வாறன்'' என்றான்.

அதிகாரி வாய்திறக்க முடியாத நிலை. அவர் எதுவும் பேசவில்லை, சந்திரன் வந்து தனது இருக்கையில் அமர்ந்தான்.

சில ஊழியர்கள் இருக்கிறார்கள். விடிந்தும் எழும்பாமல் உறங்கிவிட்டு சூரியனைக் கண்டு விழித்து அரைகுறையாக காலைக்கடனை முடித்துவிட்டு எட்டரை மணி கடந்த பின் அலுவலகம் செல்வார்கள். இவர்களுக்கு மேலதிகாரி தினமும் 'ஏச்சுப்பேச்சு' கொடுத்து அலுத்துப் போய் விட்டார். அவர்களுக்கோ சூடு, சொரனை கொஞ்சமும் கிடையாது.

பிளாஸ்கில் இருந்து தேனீர் ஊற்றிக் குடிக்கத் தொடங்கினாள் வதனா.

சந்திரன் காலை ஆகாரம் சாப்பிட்டுக்கொண்டிருந் தான். சிற்றுண்டிச் சாலையில் வதனாவையும் சந்திரனையும் தவிர வேறு எவரும் இருக்கவில்லை!

சந்திரன் சாப்பிட்டு முடிந்து கையை கழுவினான்; ''உங்களுக்கும் தேத்தண்ணீர் தரட்டா?'' என வதனா கேட்டாள்.

சந்திரனால் மறுக்க முடியவில்லை ''சரி, தாங்களேன்...! நல்ல ருசியான தேனீர். உங்க கைபட்டா எல்லாம் ருசியாகத்தான் இருக்கும்! என்ன வதனா?'' ''என்றான் சந்திரன்.

வதனா தலைகுனிந்துநின்றாள். நான் சொன்னதிலே தப்பு இருந்தால் மன்னிச்சிக்கங்க.'' என்றான் மீண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீங்க தப்பு செய்தாத்தானே மன்னிக்க! உங்களின் புகழுரையாலே பெருமிதம் கொண்டேன்.'' என்றாள் வதனா. சில நிமிடம் மௌனம் நிலவியது. சந்திரன் மௌனத்தை விரட்டினான்.

''தொழிலும் உங்களுக்கு கிடைச்சிற்று. ஏன் இன்னும் திருமணம் செய்யாம இருக்கீங்க'' சந்திரன் கேட்டான்.

''தொழில் கிடைப்பது போல நல்லதுணையும் கிடைக்கணுமே! எல்லாரும் சீதனம்தான் எதிர்பார்க்காங்க. சீதனம் இல்லாம முடிக்க வாறவனை பார்த்தா ஏதோ ஒரு குறை உள்ளவனா இருக்கான், சீதனம் இல்லாம நல்லவன் எப்ப என்னை மணம் முடிக்க வாறானோ அப்ப செய்துக்குவன். ஆண் பிள்ளைதானே. நீங்க ஏன் திருமணம் செய்யாம இருக்கீங்க? ''என்றாள் வதனா''

''என்னை நம்பி என் தங்கையொருத்தி இருக்கிறா, அவவை ஒருத்தண்ட கையிலே பிடிச்சி கொடுத்த பொறகுதான் எனது திருமணத்தை பற்றி யோசிக்கலாம். என் தங்கையின் திருமணத்துக்கும் சீதனம்தான் தடையாக இருக்கு.'' எனக் கூறினான் சந்திரன்.

''மாற்றுத் திருமணம் செய்துக்கலாமே'' என்றாள் வதனா,

''ஐயோ வேணாம். தங்கை வாழத்தான் வேணும், அதுக்காக நான் அடிமையாகி வாழலாமா? என் நண்பன் ஒருவனும் இப்பிடித்தான் சீதனமில்லாமல் மாப்பிள்ளையின் தங்கையை திருமணம் செய்தான். மாப்பிள்ளை தங்கைக்கும் தொல்லை கொடுத்தான். நிம்மதி இல்லா வாழ்வு. மாப்பிள்ளையின் தங்கை அண்ணனை அடிமையாக்கி நடந்தாள். இந்த நரக வேதனை வேணா! நானும் தங்கையும் ஏன் கண்ணீர் விட வேணும்? இன்னம் ஒரு வருஷம் போனா தங்கைக்கு சீதனம் சேர்த்திருவன். கல்யாணத்தை முடிச்சிருவன். அதுக்கு பொறகுதான் என்னைப்பற்றி சிந்திப்பன்'' என்றான் சந்திரன்.

''அப்ப ஒரு வருஷம் போனாப் பிறகு பார்ப்போம்'' என்று கூறி கன்டீனை விட்டு புறப்பட்டாள். கடமையில் ஈடுபட்டாள்.

''ஒரு வருஷம் போன பிறகு பார்ப்போம் என்றாளே வதனா! அவள் என்னை விரும்புகிறாள். ஒரு பெண் எப்படி துணிந்து சொல்வாள்'' என்றெண்ணினான் சந்திரன் பின்னர் கடமையில் ஈடுபட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான் சொன்னதிலிருந்து சந்திரனை நான் விரும்புவது அவர் அறியமாட்டாரா? இன்னும் விளக்கி சொல்ல வேண்டுமா?" என மனதோடு கேட்டுக் கொண்டாள் வதனா.

பகல் போசத்தின் போது சந்திரனின் முகக்குறியை நோக்க வேண்டுமென்று தீர்மானித்தவளாய் கடமையில் கவனம் செலுத்தினாள். வதனாவுக்கு நேரம் போவது மிக கடினமாக இருந்தது.

அன்று அலுவலகத்தில் வேலை அதிகமாக இருந்தது. வாடிக்கையாளர்களும் தங்கள் வேலையை முடித்துக் கொள்வதிலேயே மும்முரமாக இருந்தார்கள். மனிதர்கள் மொய்த்துக் கொண்டு நின்றதால் நேரே இருக்கும் சந்திரனை நோட்டமிடுவதும் முடியாத காரியமாக இருந்தது வதனாவுக்கு! சந்திரனை மறைத்துக் கொண்டு நின்றார்கள் மாந்தர்கள்!

சூரியன் நடுவானில் தலை நிமிர்த்தினான். படிப்படியாக மனிதர்கள் கலையத் தொடங்கினார்கள்.

சூரியன் நடுவானிற்கு வந்து விட்டால் போதுமே! வான் உலகின் மகாராஜாதான்! கம்பீரமாக புவியை நோக்குவார். அதுதான் நமக்கெல்லாம் வியர்வையையும் புழுக்கத்தையும் ஏற்படுத்துகின்றன போலும்!.

இப்போது சந்திரன் தெரிபட்டான். வதனாவை நிமிர்ந்து பார்த்தான். வதனாவும் சந்திரனை பார்த்தாள். இருவர் பார்வையும் சந்தித்தன. வதனா புன்னகைத்தாள். சந்திரனும் மெல்லிய புன்னகையை தூவினான். வதனாவின் உள்ளத்தில் புதுவித உணர்வு மின்சாரமாய் புகுந்து விளையாடியது.

இருவரின் புன்னகை, தனியான உரையாடல் ஆகியவற்றை சில ஊழியர்கள் கவனித்தார்கள். காதல் என்று நினைத்தார்கள். காதலாக எண்ணி உறவாட சந்திரனின் குடும்ப பாரம் தடையாக இருந்தது. ஆனால் நட்பு இறுக்கமாகி விட்டது. அவர்களின் தனியான உரையாடலுக்கு ஊழியர்கள் தடையாக இருப்பதில்லை!

மதிய போசனத்துக்காக சந்திரன் சிற்றுண்டிச் சாலைக்குள் நுழைந்தான்; இதனை எதிர்பார்த்து காத்திருந்த வதனா தனது உணவுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதியையும் தூக்கிக் கொண்டு பின்னால் ஓடினாள்.

சிற்றுண்டிச் சாலையில் ஒரேயொரு சாப்பாட்டு மேசை தானே உள்ளது. சந்திரனின் பக்கத்தில் அமர்ந்து பொதியை விரித்தாள். மீன் பொரியலில் ஒரு துண்டு எடுத்து சந்திரனின் சாப்பாட்டு பொதியில் வைத்தாள். சந்திரன் இறால்கள் இரண்டு வதனாவுக்கு கொடுத்தான்.

இருவரும் பேச்சுக்கள் ஏதுமின்றி சாப்பிட்டார்கள் சந்திரன்தானே ஏற்கனவே சொல்லி விட்டான். ஒருவருடம் முடிந்த பிறகு தான் காதலைப் பற்றி நினைக்க முடியும் என்று சந்திரனைப் போன்றவர்களுக்காக இன்னும் எத்தனை வருடங்கள் என்றாலும் வதனா காத்திருக்க தயார்.

வேலை முடிந்து பஸ்தரிப்பிடத்துக்கு விரைந்தாள் நேரத்தை பார்த்தாள்; ஐந்து மணியாகி இருந்தது. வேலை அதிகமானால் நேரம் போவதே தெரிவதில்லைதான்! நாலு நாற்பத்தைந்து பஸ் போய் விட்டது. அடுத்த ஐந்தரை மணி பஸ் வரும் போது மனிதர்கள் நிறைந்து விடுவார்கள். அதன் பிறகு பஸ் கிடையாது என்பதால் எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு ஏறுவார்கள். ஒருவரோடு ஒருவர் அப்பினால் போல்தான் நிற்கவேண்டும். என்ன செய்வது? வீட்டுக்கு போய் சேரவேண்டுமே!

வதனாவிற்கு, வீட்டருகே இறங்கும் போது பாதி உயிர் பிரிந்தாற் போலாகி விட்டது. இரண்டு பஸ்களில் ஏறக் கூடியவர்கள் ஒரு பஸ்ஸில் அல்லவா சொருகிக் கொள்கிறார்கள்!

உடைகளை மாற்றிக் கொண்டு குளியலறைக்கு போனாள் வதனா. உடம்பை கழுவிக் கொண்டு வந்தால்தான் அவளுக்கு ஒருவித ஆறுதல் கிடைக்கும். அதன் பிறகு தாயார் லட்சுமி கொடுக்கும் சூடான தேனீரில் பாதி உயிர் மீண்டு வந்துவிடும்.

அம்மாவின் தேனீரை புகழ்ந்தவாறு அருந்தினாள். ''வதனா ... நீ வலியவாற திருமணத்தையும் தட்டிவாறாய். நீ விரும்புவதாக சொல்றவனும் இப்ப.... திருமணத்தை நெனைக்கானில்லே...............! போன காலம் திரும்பாது. நான் இப்ப சொல்றவனை மணம் முடிக்க நீ சம்மதிக்கணும்'' என்றாள் வதனாவின் அம்மா லட்சுமி.

அதிர்ச்சிக்கு உள்ளானாள் வதனா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மாப்பிள்ளை ஏழைதான். ஏழைக்குத்தான் சீதனம் வாங்காம முடிக்கிற தைரியம் இருக்கு. உத்தியோகத்தனாக இல்லாவிட்டாலும் தினம் சம்பாதிப்பவன். மாப்பிள்ளை யார் தெரியுமா? ராமையாட மகன் முத்துலிங்கம்'' என்றாள் லட்சுமி.

''முத்துலிங்கமா........? அவனை உங்களுக்கு தெரியா அம்மா.... நான் சொல்றதை கேளுங்க. அவன்......'' என்று இழுத்தாள் வதனா. தொண்டை அடைத்தது. சொருமிக் கொண்டு வாய்திறந்தாள்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 02

''முத்துலிங்கத்தின்ர தொழில் என்னென்டு தெரியுமா அம்மா?'' என்று அம்மா லட்சுமியிடம் கேட்டாள் வதனா.

''அது எங்களுக்கு தெரியாது. சின்னத் தொழில் ஏதும் செய்யிறான் போல'' என்றாள் லட்சுமி.

''சின்னத் தொழில் இல்லே..! கொள்ளை தொழில். பிக்பக்கட். சென்ற கிழமையும் பஸ் ஸ்டான்டில் பொக்கட். அடிச்சி பிடிபட்டு பொலீஸ் உதைச்சி கொண்டு போனானுகள்.'' என்றாள் வதனா.

''அதுதான் போலும் நாலைஞ்சு நாளா அவரை காணல்லே..! இது எனக்குத் தெரியாதே. நீ பயப் படாதே அம்மா! அப்பாக்கு சொல்றேன். போயும் போயும் ஒரு திருடனையா உனக்கு திருமணம் முடிச்சி கொடுப்பேன்?'' என்றாள் லட்சுமி.

வதனாவுக்கு நிம்மதியாக மூச்சு வந்தது!

''திருமணம் முடிக்க சேதி அனுப்புறாரு. எனக்கு முன்னாலே எத்தனையோ பேர் நொறுக்கி இருக்கானுகள். உழைக்கத் தெரியா. பெண் தேவைப்படுது. உங்களை முடிக்கிறதை விட ஆயுள் முழுக்க தனியா வாழலாம்'' எனப் பொரிந்தாள் வதனா. அவளுக்கு சக அலுவலக ஊழியர் சந்திரனை பிடித்துப் போய் விட்டது. அடுத்த வருடம் வரைக்கும் எந்த மகானையும் மணம் முடிக்க வதனா தயாரில்லை. அடுத்த வருடம் சந்திரன் மணம் முடிக்காவிட்டால்தான் வேறுயாரையும் அவள் மணம் முடிக்க விரும்புவாள்.

காலமாற்றங்கள் வேறு என்னென்ன மாற்றங்களை கொண்டு வருமோ?

சந்தைக்குப் போன வதனாவின் அப்பா ராகவன் விரைவாக வந்தார்.

''லட்சுமி முத்துலிங்கத்தையாவது மணம்முடிக்க மாட்டாளாமா? தேடிவந்த சீதேவி! என்ன சொல்றாள்?'' ராகவன் கேட்டார்.

''சத்தம் போடாதீங்க. அவன் சரியான கள்ளப்பயல். பஸ் ஸ்டான்டில் கொள்ளை அடிக்கிறதும் பொலிஸால அடிவாங்கிறதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு பழக்கமானதாம்! இப்படியான கள்ளனா நமது வதனாவுக்கு தேவை?" எனக்கேட்டாள் லட்சுமி.

"அப்படியா சங்கதி! அவனுக்கு பெண்ணா? செருப்பால அடிக்கனும்" என்றார் ராகவன்.

"நம்ம மகளுக்கு ஒரு ஆண்துணை கிடைக்கிறதே பெரும்பாட இரிக்கி. ஏதோ நாலுகாசு சம்பாதிக்கிறவனுக்கிட்ட போனாலும் சீதனம் காணா என்டுதான் நிக்கான். வாழ்வளிக்கப்போறன் என்டு வாறவனுகளை பார்த்தா கள்ளன், குடிகாரன், காவாலிகளா இரிக்காணுகள் எப்பதான் அவளுக்கு துணை கிடைக்கப்போகுதோ? என் மகளும் வாழ்றதை கண்குளிர பார்க்க வேணாமா?" ஏமாற்ற பெருமூச்சி விட்டாள் லட்சுமி.

"எனக்கு அந்த ஆசை இல்லாம போகுமா லட்சுமி? நானும் கண்டவன் நிண்டவன் எல்லாரிட்டயும் என்னத்தை கதைக்கன்! நம்ம மகளுக்கு கெட்ட குணமில்லாத மாப்பிள்ளை ஒருத்தன் கிடைக்கமாட்டானா என்றுதானே விசாரிக்கன். எப்ப கிடைப்பானோ எப்ப என் மகள் வாழ்வாளோ" என்று கூறும்போது கண்ணீர் சிந்திவிட்டார் வதனாவின் அப்பா ராகவன்.

இந்த உரையாடல் வதனாவின் காதுகளுக்கும் எட்டியது. அவளும் கண்கலங்கிவிட்டாள்.

"ஒருவருடம் முடிந்து, சந்திரனின் தங்கைக்கும் திருமணம் முடிந்து விட்டபின் சந்திரன் என்னை விரும்பலாம்" என்ற நம்பிக்கையோடு இருந்தாள் வதனா.

அவள் உறங்கச் செல்கிறபோது நிறைய கற்பனைகளோடும் எதிர்பார்ப்புக்களோடும்தான் செல்வாள். சில நாட்களில் வெகுநேரமாக சிந்தித்தபடி கட்டிலில் புரள்வாள். நள்ளிரவிலும் தூங்கியும் தூங்காமலும் விழித்ததுண்டு. அன்றும் நீண்ட நேரமாக சிந்தித்தபடி கட்டிலில் படுத்திருந்தாள். பக்கத்துவீட்டு வானொலி சௌந்தராஜனின் தத்துவப்பாடலை இசைத்தது!

"கனவுகளே கனவுகளே...
காலமெல்லாம் வாரீரோ
நினைவுகளே நினைவுகளே
நிம்மதியை தாரீரோ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கண்ணதாசனின் தத்துவ வரிகளுக்கு நிகராக எந்த கவிஞனால் எழுதமுடியும்?' என்ற வினாவை மனதில் அசைபோட்டாள் வதனா. சிலவரிகள் அவளது உள்ளத்தையும் தைத்தது.

●

'சந்திரன் எங்களது பிள்ளையாக பிறந்ததற்கு பெரும் தவம் செய்திருக்கவேண்டும்! என்று நினைத்துக்கொண்டார் சந்திரனின் தந்தை மூர்த்தி.

'இன்றுள்ள நிலையில் அநேக இளைஞர்கள் பெற்றோர்களை பார்க்கின்றார்களா? கூடப்பிறந்தவர்களை பார்க்கின்றார்களா? தொழில் ஒன்று கிடைத்துவிட்டால் ஒருத்தியை கரம்பிடித்துக்கொண்டு போய்விடுகிறார்கள். அந்த வகையில் பார்த்தால் எவ்வளவோ மேல் சந்திரன்!' என்று மூர்த்தியின் மனம் எண்ணியது.

''மலர்விழி கொஞ்சம் தண்ணீ.... தாவன்'' மூர்த்தி தனது மனைவி மலர்விழியிடம் கேட்டார்.

''இந்த மனுஷன் கொஞ்சத்துக்கு கொஞ்சம் கலன் கணக்கிலே தண்ணீதான் குடிப்பாரு. இந்தாங்க'' என்று கூறி தண்ணீர் பாத்திரத்தை நீட்டினாள் மலர்விழி.

''தண்ணீ.. குடிச்சாலும் கூடாதா? என்ர வயசுக்காரர்கள் பலர் போதைவரும் தண்ணி அல்லவா குடிக்காணுகள்'' என்றார் மூர்த்தி.

''இன்னமும் தண்ணீயை போட்டுட்டு தலைகீழா நடக்க போறீங்களா? மகன் இரிக்கான். மறந்திடாதீங்க'' என்றாள் மலர்விழி.

''நானென்ன தண்ணீ போடப்போறன் என்டா சொன்னன்? பச்சை தண்ணீர்தான் குடிக்கிறேன் என்டேன். அது கிடக்கட்டும். புரோக்கர் பொன்னுசாமி வந்தானா?'' மூர்த்தி கேட்டார்.

''அவன் எங்க வந்தே? அங்க மாப்பிள்ளை இரிக்கி, இஞ்ச மாப்பிள்ளை இரிக்கி என்டு சொல்வான். வாறவனுகள் சீதனம் போதா என்று ஓடி விடுவானுகள். சீதன மாப்பிள்ளை கொண்டு வாறதுக்கு ஒரு புரோக்கர் தேவையா? அவனோட நீங்க சொல்லி நம்ம காரியம் முடியவா போகுது? நம்ம மகனும் எப்படியோ வீட்ட இணக்கிப் போட்டான். வாற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசம் பெயின்ட் பண்ணுவான், இன்னும் பதினையாயிரம் காசு சேர்த்தா ஐம்பதாகி விடுமாம். நல்லகுணமான ஒருத்தனை மாப்பிள்ளையாக எடுக்கேலுமாம் என்று மகன் சந்திரன் சொன்னான். அப்படியே நல்லபடியா முடியட்டும்." என்றாள் மலர்விழி.

"இந்த காலத்திலே குடை தைக்கிறவனும் நல்ல சீதனம் கேட்கிறானுகள். நம்மால என்ன செய்ய ஏலும்? புரோக்கர்தான் என்ன செய்வான்? நம்ம மகன் வாற வருஷம் எப்படியும் திருமணம் செய்து வைப்பான்." என்று நிம்மதி பெருமூச்செறிந்தார் மூர்த்தி.

பெற்றவர்களுக்கு பெண்பிள்ளை ஒரு சுமைதானே! வாழ்வு அமைந்த பின்னர் நிம்மதி வரும் தானே!

சந்திரன் வீட்டுக்கு வந்து கால்களை அலம்பிக் கொண்டு தாயார் கொடுத்த தேனீரை அருந்திவிட்டு பத்திரிகையை புரட்டினான். எந்த பத்திரிகையை புரட்டினாலும், கொலை, கொள்ளை, பாலியல் துஷ்பிரயோகம் இவைகளாகத்தான் மலிந்திருந்தன. இவைகளை பார்வையிட சந்திரனின் மனம் நாடவில்லை.

புதிதாக வந்த மேலதிகாரி தன்னோடு பாம்பும் கீரியுமாக பழகுகிறாரே! என்ன காரணம் என்பதனை ஆராய்வதிலே சந்திரனின் மனம் தாவியது.

"அவருக்கு எந்த அநியாயமும் நான் செய்யவில்லையே! என்னோடு ஏன் எதற்கும் எரிந்து விழுகிறார்? அவர் தருகின்ற வேலையை ஒழுங்காக செய்து முடிக்கிறேன் தானே! எவ்வளவு பேர் கடைக்கென்றும் வடைக்கு என்றும் போய விடுகிறார்கள். அவர்கள் அலுவலக நேரத்தை பாதயாத்திரைக்கு பலியிடுகிறார்கள். இப்படியானவர்களை ஏன் என்றும் கேட்கிறாரில்லையே! நான் ஒரு முறை சற்று தாமதித்து வந்ததிற்கே எவ்வளவு கதைத்தார். மேலதிகாரி என்பதற்காக பொறுத்து வருகிறேன். பொறுமைக்கும் ஒரு அளவு உண்டு. ஒரு நாளைக்கு செம்மையாக ஏசத்தான் இருக்கிறேன்.

அவருக்கு பிடித்தமானவர்கள் நான்கு ஐந்து பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் செல்லபிள்ளை மாதிரி. தலைக்கும் மூளைக்கும் சம்பந்தமில்லாத, வருத்தப்படாத வேலைகள். ஒரு நாளைக்குள் செய்து முடிக்கக்கூடிய வேலையை ஒரு வாரத்திற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுத்தடிக்கலாம். எத்தனை மணிக்கும் தாமதித்து வரலாம். தொலைபேசியை எடுத்து சொல்லிவிட்டால் சரி. எதுவும் கேட்கமாட்டார். ஊழியர்களை இருவகைப்படுத்தி பாகுபாடு காட்டும் மேலதிகாரி இருக்கின்ற அலுவலகம் எந்த அபிவிருத்தியையும் காணமாட்டாது. சிறந்த சேவையையும் மக்களுக்கு ஆற்றமுடியாது. இப்படியான மேலதிகாரி பதவிக்கே தகுதியில்லாத ஒரு பொம்மை என்று சொல்லலாம்.

''அவரோடு வேலை செய்வதற்கு முன் நான் வைத்திருந்த அவரைப்பற்றிய நல்ல அபிப்பிராயம் காற்றில் போய்விட்டது. எவ்வளவுக்கு அதிகமாக கடவுள் பக்தியை கொண்டிருந்தாலும் அதைவிட அதிகமான கெட்ட கொள்கைகளையும் கொண்டவராக அவர் இருக்கிறார். நான் பத்து வருடங்களுக்கு மேலாக கடமை புரிந்திருக்கிறேன். இவரைப்போன்ற பாகுபாடு காட்டும் மேலதிகாரியை நான் காணவேயில்லை.! இனி என் வழியில் வரட்டும்.'' என்று எண்ணினான் சந்திரன்.

''என்ன மகன் கடுமையா யோசிக்கிறாய்.'' தந்தை மூர்த்தி கேட்டார்.

''ஒன்டுமில்லை அப்பா. தங்கையின் திருமணத்தை நெனச்சுத்தான்..'' என்று சமாளித்துக்கொண்டான் சந்திரன். மூர்த்தி அப்பால் நகர்ந்து போய்விட்டார்.

நேரம் மாலை ஆறுமணியைத் தாண்டியது. மேற்கு வானில் சூரியன் மறைந்து ஒளிப்பிரவாகம் இயற்கைச்சித்திரங்களை அழகுற வரைந்து தள்ளியது. எத்தனை நிறங்கள்! எத்தனை காட்சிகள்! ஓவியர்கள் இயற்கையிடம் பிச்சை வாங்க வேண்டும். கற்பனையில் எண்ணும் உருவங்கள் எல்லாம் வானில் உயிர்பெற்றன. ஓவியர்கள் வரையும் உருவங்கள்தான் நம் கண்ணுக்கு புலப்படும். இயற்கை எண்ணுகின்ற உருவங்களை இதயம் குளிர தரும்.

இந்த இயற்கை வனப்பில் இலயித்து சிறிது நேரம் கவலையின்றி பொழுதை நகர்த்தினான் சந்திரன்.

கடிகாரத்தைப் பார்த்தான். ஆறுமுப்பதுக்கு ஐந்து நிமிடங்கள் தான் இருந்தது. ஆறுமுப்பதுக்கு தொலைக்காட்சியில் தமிழ்ச்செய்திகள் ஒளிபரப்பாகும் நேரம்.

''தொலைக்காட்சியில் நடக்கிறதெல்லாம் சொல்லுகிறார்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமில்லாதவற்றைச் சொல்லித்தொலைப்பார்கள். சொல்லுவதையாவது கேட்போம்'' என்று நினைத்தவாறு தொலைக்காட்சிப்பெட்டியின் பட்டனை அழுத்தினான் சந்திரன். விளம்பரங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. வியாபாரத்துக்காக விளம்பரங்களை என்ன யுக்தியாக செய்கின்றார்கள்? தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகளை விட விளம்பரங்கள் விறுவிறுப்பாக இருக்கின்றனவே'' என்று சந்திரன் மீண்டும் நினைத்துக்கொண்டான்.

செய்திகள், ஒளி, ஒலிபரப்பாகின. செய்திகள் என்பதை விட அமைச்சர்களின் திருவிழா காட்சிகள் என்று தலைப்பிடலாம். அவர்கள் எங்கு போனாலும் வந்தாலும் காட்டுவார்கள். என்ன செய்தாலும் செய்யாவிட்டாலும் ஏதாவது சொல்லுவார்கள். திட்டம் தரைமட்டம் ஆனாலும் கொட்டம் அடிப்பார்கள்.

புளித்துப்போன காட்சிகள் போய்க்கொண்டிருந்தன. பொறுமையோடு பார்த்துக்கொண்டிருந்தான் சந்திரன். இன்னும் ஐந்து நிமிடங்களின் பின்னர் அவனது அபிமான தொடர்நாடகம் ஒளிபரப்பாகவிருக்கிறது. பிறமொழியாக இருந்தாலும் உணர்ச்சி பூர்வமான கட்டங்கள், உருக்கமான நடிப்பாற்றல், சிறந்த காட்சியமைப்பு, முற்போக்கு கதை அமைப்பு, எல்லாம் நிறைந்த, பார்த்து ரசிக்கக்கூடிய அருமையான நாடகம். அந்த நாடகத்தின் இடையிடையே டசின்கணக்கில் போகின்ற விளம்பரத்தை பார்க்கின்ற போது அதிகம் பேர் இந்த நாடகத்தை பார்க்கின்றார்கள் என்பது உறுதியாகின்றது.

நாடகம் தொடங்கியது. கதாநாயகியின் கனிவான முகம் இளைஞர்களை சுண்டி இழுத்தது.

அந்த கதையின் கதாநாயகி ஏழை, ஆனால் பூரிப்பான அழகு. காதலன் பணக்காரன். பெற்றோர்களுக்கு பயந்தவன். செல்லப்பிள்ளை. திருமண நாளுக்கு நாயகி ஏங்குகிறாள். ஆனால் காதலனோ நாட்களை நீட்டுகிறான். இடையிலே போராட்டங்கள் சோகமாக இருந்தது.

இந்த போராட்டத்துடன் தன்னையும் ஒப்பிட்டுக் கொண்டான் சந்திரன்.

தங்கை உமாவின் ஏக்கம் ஒரு புறம். வதனாவின் நினைவு மறுபுறம், உறங்கச் சென்றவன் இருவரையும் மாறி மாறி நினைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டான். நீண்ட நேரத்திற்கு பின்னர் உறக்கம் கண்ணை அணைத்துக் கொண்டது.

சந்திரனின் மடியில் தலைவைத்து படுத்திருந்தாள் வதனா. சந்திரனின் உடலெங்கும் இன்பவெள்ளம் கரை புரண்டோடியது. மெதுவாக அவளது கன்னத்தை தடவினான். கரத்தைப் பிடித்து முத்தமிட்டாள் வதனா.

''இருங்க டீ கொண்டாறன்'' என்று குசினிப் பக்கம் போனாள் வதனா.

திடுக்கிட்டு கண்ணை விழித்தான். சந்திரன் கண்டது எல்லாம் கனவு என்பதை உணர்ந்தான். வெகு நேரம் கற்பனை பண்ணினான். இக்கனவும் கற்பனையின் விளைவு என்பதை அவன் அறியாமல் இல்லை. நீண்ட நேரத்திற்கு பின்னர் மீண்டும் உறங்கச் சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 03

கடமைக்கு உரிய நேரம் போய் விடுவாள் வதனா. தாமதமாவதோ லீவு எடுப்பதோ குறைவுதான்!

கடமையை உரிய நேரம் போய் செய்வதும் மனதுக்கு ஒரு ஆறுதல் தானே! அவளை எத்தனையோ பேர் விரும்புகிறார்கள், அவர்களையெல்லாம் மணம் செய்ய வதனாவுக்கு மனமில்லை. சந்திரனின் மனமும், அழகு உருவமும் அவளுக்கு பிடித்து விட்டது.

'உங்களது தங்கையின் திருமணம் முடிந்த பின்னர் தான் எனது திருமணமும்' என்று மேலோட்டமாக சொல்லி இருந்தாள் வதனா.

அதன் உள் அர்த்தத்தைப்பற்றி சந்திரன் சிந்திக்க வில்லை, சிந்திக்க வேண்டிய அவசியமுமில்லை!

காலை தேனீருக்காக கன்டீனுக்குள் புகுந்தான் சந்திரன்; தனது பிளாஸ்கையும் தூக்கிக் கொண்டு பின்னால் சென்றாள் வதனா. கன்டீனுக்குள் எவரும் இருக்கவில்லை.

''இந்தாங்க சந்திரன், கோதுமை ரொட்டி, ருசியாக இருக்கும்'' என்று நீட்டிய ரொட்டியை வாங்கி கடித்தான் சந்திரன்.

''ரொட்டி ருசியா? இல்ல உங்க கைபட்டதும் ருசியா?'' எனக்கேட்டான் சந்திரன்.

''ருசியா இருந்தா சரி '' என்றாள் வதனா. நீண்ட நாட்களாக கேட்க எண்ணிய கேள்வியை கேட்டான் சந்திரன்.

''எனக்கு தங்கை இருக்கு. உங்களுக்கு தடையாயாரும் இல்லே. ஏன் திருமணம் செய்யாம இரிக்கீங்க?''

''சந்திரன். கல்யாண சந்தையில் மாப்பிள்ளைகள் விலை அதிகம். சும்மா திருமணம் முடிக்க வாறவங்களும் தகுதி இல்லாம இரிக்காங்க. அடுத்த வருஷம் உங்க தங்கையின்ர திருமணம் முடிந்திடும். பிறகு உங்கடதானே! எனக்கு சொல்ல வெட்கமா இரிக்கி உங்களை.. உங்களை விரும்புகிறன். நீங்கதான் எனக்கு....'' அதுக்கு மேல வதனாவால் பேச முடியவில்லை. தொண்டை அடைத்தது.

நிமிர்ந்து சந்திரனை நோக்கவும் சக்தியற்றவளாக தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குனிந்தாள்.

''எனக்கும் உங்களை.. திருமணம் செய்ய விருப்பம்தான் கொஞ்சம் பொறுப்பம்'' என்றான் சந்திரன்.

கன்டீனை விட்டு புறப்பட்டு, கடமையில் ஈடுபட்டாள் வதனா. அவள் எவரையும் நிமிர்ந்து நோக்கவில்லை. அச்சம் தடுத்தது; சந்திரன் அடிக்கடி வதனாவை பார்த்து ரசித்தான்.

''அடுத்த வருஷம் தங்கையின் திருமணம் என்று சொல்லி சொல்லி இன்னும் ஐந்து மாதங்கள்தான் இருக்கின்றன. எப்படியோ முடித்துவிட்டேன் என்றால் நான் சீதனத்தை எதிர் பார்க்க போறதில்லை. அன்பும் பணிவும் கொண்ட வதனாவை கரம்பிடித்துக் கொள்வேன். அவளை கரம்பிடிப்பதன் மூலம் எனது வாழ்வு வளமாக இறைவன் துணை தருவான்'' என்றெண்ணினான் சந்திரன்.

சந்திரனின் மனமும் வதனாவை சுற்றி விரியும். அவளும் அடிக்கடி அவனை நினைத்து மகிழ்வாள்; காதலுக்கு பிரிவேது; தூக்கம் ஏது?

அலுவலகத்தில் இந்தக் கதை கசியத் தொடங்கிற்று. 'ஆம்' என்று துணிந்து கூறினான் சந்திரன். அப்படிக் கூறிய பின் வதனாவிற்கு என்ன தயக்கம்?

காதலர்களாகவே பழகத் தொடங்கினார்கள். மற்றவர்கள் வாய்மூடி மௌனமானார்கள்; இருள்திரை கதிரவன் வரவு கண்ட பின் மறைந்து விடும். அதே போல் வதனாவின் கவலைரேகை சந்திரனின் வருகையின் பின்னர் மறைந்து விடும். சந்திரன் அலுவலகத்திற்கு வர ஐந்து பத்து நிமிடங்கள் தாமதித்தாலும் 'ஏதோ என்னவோ என்று பயந்து விடுவாள் வதனா.

வீட்டிலிருந்து வரும்போது விசேடமாக தயாரிக்கப்பட்ட தீன்பண்டங்கள், பழவகைகள் இருந்தால் எடுத்து வருவாள். யாருக்கும் தெரியாமல் உண்ண கொடுப்பாள்.

அவள் கொடுக்கும் தீன்பண்டங்கள் இருக்கிறதே எவ்வளவு சாப்பிட்டாலும் சந்திரனுக்கு திகட்டுவதில்லை. ருசியை மனதார புகழ்ந்த வண்ணம் உண்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
15425

'பணவசதி இருந்திருந்தால் என்றோ வதனாவுடன் இன்பமாக வாழத்தொடங்கி இருப்பேன்' என்று அடிக்கடி நினைத்துக் கொள்வான்.

அன்று வதனாவிற்கு கடிதம் ஒன்று வந்திருந்தது. சுமையாகி கனத்தது நான்கு ஐந்து தாள்களில் எழுதி இருக்கவேண்டும்.

''நேரில் கதைக்க தயங்கிய விடயங்கள் சிலவற்றை மடலாக சந்திரன் எழுதி இருக்கிறார் போலும்! அவரைத் தவிர வேறு யார் எனக்கு எழுதுவார்" என்று அசைபோட்டவாறு கடிதத்தை கைப்பையினுள் திணித்தாள்.

''வீட்டிற்குபோய் ஆறுதலாக வாசித்து பார்ப்போம்" என்ற முடிவுபோலும்! ''நீங்கள் கடிதம் போட்டீர்களா?" என சந்திரனிடம் கேட்கவும் அச்சம் விடவில்லை! பெண்ணல்லவா!

அலுவலகத்தில் ஆசையாக ரசித்து படிக்க முடியாதே வீட்டில் என்றால் சாய்வு நாற்காலியில் அமர்ந்து கொண்டு ஒரு வரியை மூன்று தரத்திற்குமேல் வாசிக்கமுடியுமே! கடிதம் கிடைத்த இன்ப நினைவில் கவலை மறந்து கடமை புரிந்தாள்.

காதலர்களின் எண்ணங்களுக்கு ஒரு கடிவாளம் கிடையாதே! மனக்கட்டுப்பாடும் இராது.

மாலை ஐந்து மணி பஸ்ஸில் தொங்கி ஏறினாள் வதனா. பெண்கள் பிந்தி வந்தாலும் பரவாயில்லை! எழுந்து ஆசனம் கொடுக்க எவராவது இருப்பார்கள்.

ஏறி ஒரு சீட்டை தாண்டி செல்லும் போது அடுத்த ஆசனத்தில் இருந்த இளைஞன் எழும்பி ''இதிலே இரிங்க......" என்று வதனாவை விரலால் தட்டி சொன்னான்.

அவன் விரலால் தொட்ட விதம் அவளுக்கு பிடிக்கவில்லை! ஆசனம் கொடுத்தவனல்லவா! கோபத்தை அடக்கி உட்கார்ந்தாள். எத்தனையோ வயோதிப மாதுகள் இருக்க இடமின்றி முறிந்து கொண்டு நின்றார்கள். இடம கொடுப்பார் யாருமில்லை. வதனாவிற்கு வந்தவுடன் இடம் கிடைத்து விட்டது. அவளுக்கு சந்தோஷம் தான்! ஆனால்.......!

அந்த இளைஞன் வதனாவின் தோளருகே உராய்ந்தவாறு அசையாமல் நின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை தள்ளிப்போய் நிற்க எப்படி சொல்ல முடியும்? அசையவும் இடமில்லை! பஸ்ஸில் மனிதர்களை ஏற்றவில்லை! வாய்பேசா ஜீவன்களை அள்ளி அடைத்தவாறு பஸ் நகர்ந்தது.

இன்னும் சற்று தள்ளி உட்கார்ந்து கொண்டாள் வதனா இருந்தாலும் அந்த இளைஞனும் நெருங்கி வந்து விட்டான். வதனாவின் தோளருகே அவனது அடித்தொடை உராய்ந்தது. இதற்கு மேல் அவளால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. சத்தம் போடவுமில்லை. நாகரிகமாக நடந்து கொண்டாள்.

பக்கத்து ஆசனத்தில் அமர்ந்திருந்த வயோதிபரை தனது சீட்டில் உட்காருமாறு சொல்லிவிட்டு வயோதிபர் அமர்ந்திருந்த ஆசனத்தில் போய் அமர்ந்தாள் வதனா. ''வாந்தி வருவது போல இருக்கிறது'' என்று பொய் சொல்லியே போய் அமர்ந்தாள்.

தன்னோடு உரசிக் கொண்டிருந்த இளைஞனைக் காணவில்லை! வயோதிபர் வந்து அமர்ந்தபின் அவன் மறைந்து கொண்டானோ அல்லது இறங்கிச் சென்று விட்டானோ தெரியாது? வெட்கம் அவனை விழுங்கி இருக்க வேண்டும்.

இலங்கையை பொறுத்தவரை வேலைக்கு போய் வருவது சிரமமில்லை! இந்த பஸ்ஸில் ஏறி இறங்குவது இருக்கிறதே தொல்லைகள் பல நிறைந்த நரக வேதனை தரும் பயணமாகும். இறங்கும் போது பாதி உயிர் போய் விடும்.

வீட்டிற்கு வந்தவள் வேகமாக மேனியை கழுவிக் கொண்டாள். தாயார் கொடுத்த தேனீரை மடமடவென குடித்தாள். சாய்வு நாற்காலியில் அமர்ந்து கடிதத்தை எடுத்தாள். பிரித்தாள், ஆரம்பமே அவளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பெயர் குறிப்பிடாமல் யாரோ ஒரு இளைஞன் எழுதியிருந்தான்.

அன்பான வதனா, இது யாரோ அறிமுகமில்லாதவன் எழுதும் ஆவேசக் கடிதம் என்று எண்ணிவிடாதீர்கள். நன்கு சிந்தித்து முடிவெடுங்கள்.

உங்கள் நலனில் அக்கறைகொண்டு தான் எழுதுகிறேன். உங்கள் அலுவலகத்தில் உங்களோடுதான் பணிபுரிகின்றேன். நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரென இப்போது கேட்காதீர்கள் கடிதத்தை முற்றாக படித்தபின் சிந்தியுங்கள் அதன் பின்னர் சந்திரனை மறப்பதாக இருந்தால் மட்டும் பதில் வரையுங்கள். ஆத்திரப்படாதீர்கள்.

விடயத்தை நான் இன்னும் விளக்கவில்லையே! சந்திரன் தாய்க்கொரு ஆண் பிள்ளையாக பிறந்தவன். தங்கையின் திருமணப் பாரம் அவனுக்கிருப்பதால் அவன் நினைப்பதுபோல உன்னை திருமணம் செய்ய முடியாது.

அது மாத்திரமல்ல, இந்த ஜென்மத்தில் தங்கைக்கு திருமணம் செய்து வைக்கவும் அவனால் முடியாது. அவனை நம்பி உங்கள் இளமைப் பருவம் வீணாகிப் போய் விடும். அதனால் சிந்தித்து பாருங்கள். நான் சொல்லப் போவதை கேளுங்கள.

என்னை நம்பி எவரும் இல்லை, என் தந்தை தேடிய சொத்து நிறைய உண்டு. சந்திரனுக்குள்ள தகுதிகளுடன் அவனுக்கில்லாத செல்வம், புகழ், செல்வாக்கு ஆகியவையும் உண்டு.

வதனா... காலத்தை வீணாக கண்ணீருடன் கழுவாதே! இறைவன் தந்த அறிவைக் கொண்டு இனிதாக வாழ்வை அமைத்துக் கொள். வெறும் வாய்ப் பேச்சை நம்பி வாடிய மலர் ஆகிவிடாதே! காலம் பொன்னானது. ஒவ்வொரு பொழுதையும் இன்பமுள்ள பொழுதாக மாற்றலாம்.

சந்திரனின் தங்கைக்காக இன்பமாக இருக்க வேண்டிய காலத்தை கனவுகளுக்கும் கற்பனைகளுக்கும் கொடுத்து விட்டு பெரு மூச்சிற்கு இரையாக வேண்டாம். இனிய வதனா. எதையும் உன்னிடம் எதிர் பார்க்கவில்லை. உங்கள் அன்பையும் உறவையும் விரும்புகின்றேன்.

சில கவிஞர்கள் இருக்கிறார்கள். கவியரங்குகளில் மார்தட்டுவார்கள்.

''சீதனம் வேண்டேன் - எந்தன்
ஆதனம் உன் உறவொன்றே
அதற்காக வாழ்கிறேன் - கிளியே
எனக்காக நீ உயிர் வாழ்வாய்!

மக்களின் கரகோஷத்திற்குத்தான் அந்த பாக்கள்! கல்யாண சந்தையிலே அப்படியான சில கவிஞர்களும் விலைபேசப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்கப்பட்டவர்கள்! அவர்களைப் போல என்னை எண்ணிவிடாதே! அவர்கள் ஏழையாக பிறந்தாலும் பணத்தின் மீது குறிவைத்தவர்கள். நான் பணவசதி உள்ளவனாக இருந்தும் பணத்தை எதிர் பார்க்காதவன்.

வதனா.........! கவலையோடு இதுவரை இருந்த உன்னை களிப்பாக வாழவைப்பேன். கண்ணீரில் இருந்த உன்னை பன்னீரில் குளிப்பாட்டுவேன். உனது எண்ணங்கள் அனைத்தையும் செயலாக்கி காட்டுவேன்.

ஏன் பொன்னான காலத்தை மண்ணாக்க வேண்டும்? நமது சந்தோஷ வாழ்விற்கு அத்திவாரம் இடு.

அலுவலக ஊழியர்களில் திருமணம் செய்யாதுள்ள எட்டுப் பேர்களில் யார் இந்த மடலை எழுதியதென குழம்புவாய். குழப்பத்தை விடு. 'சந்தோஷமாக வாழ சம்மதம்' என்ற கடிதத்தை எழுதி உனது மேசை லாச்சியில் வைத்து விட்டு செல். அப்புறம் "உன் கணவன்" யாரென்பதை பதில் கடிதத்தில் பகர்வேன்.

எங்களூரில் முகுந்தன் என்றொருவன் இருந்தான். சந்திரனைப் போல சுந்தரி என்ற பெண்ணை காதலித்தான். இருவரும் உயிருக்கு உயிராக இருந்தார்கள். சந்திரனைப் போன்று முகுந்தனுக்கும் திருமணத்திற்கு தங்கை தடையாக இருந்தாள். வருடங்கள் பல கடந்ததே ஒழிய தங்கையின் திருமணம் நடக்கவுமில்லை. முகுந்தனின் திருமணம் நடக்கவுமில்லை.

ஈற்றில் பணக்காரன் ஒருவன் முகுந்தனை தனது மகளுக்கு பேசி முடித்தான். அவன் கொடுத்த பணத்தில தங்கையின் திருமணத்தை நடத்தினான். சுந்தரி இன்று வரை மண நாளை காணாமல் 'காதலித்து கைவிடப்பட்டவள்' என்ற பட்டத்துடன் இருக்கின்றாள். அந்த நிலை உனக்கு வரக் கூடாது என்று விரும்பி எழுதி உள்ளேன்.

சிந்தித்து சிறப்பான முடிவை எடு. காதலெல்லாம் வாழ்வாகாது. வாழ்வை அமைக்க வழியைத் தேடு இதற்கு மேல் எதனையும் எழுத விரும்ப வில்லை, முடிக்கிறேன்.

அன்புடன்
உனக்காக இருப்பவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதத்தை படித்து முடித்தவளுக்கு தலை சுற்றியது "சுந்தரிக்கு நேர்ந்த கதி எனக்கு நேரக்கூடாது. சந்திரன் எப்படியும் இந்த வருடம் தங்கையின் திருமணத்தை நடத்தி முடிக்க வேண்டும். கடவுள் அதற்கு உதவ வேண்டும்." என நினைத்தாள் வதனா.

இந்தக் கடிதத்தை யார் எழுதியது? இந்த வினா அவளது மனதை குடைந்து, சந்திரனை மறக்க அவளால் முடியவில்லை! கடிதத்தை எழுதியது யாராக இருந்தால் என்ன? அவரின் உறவை தொடர கனவிலும் அவள் நினைக்கவில்லை.

கடிதத்தைப் பற்றி சந்திரனிடம் எதுவும் கூறக் கூடாது என தீர்மனித்தவளாய் சுக்குநூறாக கிழித்து வீசினாள். ஆனால் அதிலுள்ள விடயங்களை வீசி விட முடியவில்லை! எண்ணங்கள் அதில் குறிப்பிட்ட சம்பவங்களை மேய்ந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 04

''லட்சுமி உனக்கு ஒண்ணும் விளங்கமாட்டேன் என்குதே! சந்திரன் எப்பதான் தங்கச்சிக்கு மாப்பிள்ளை எடுக்கப் போறானோ? எப்பத்தான் நம்ம புள்ள வாழப்போகுதோ! நமக்கேண்ட ஒருத்தனை எடுப்பம் என்டா நீயும் உன்புள்ளையும் விரும்புறேங்க இல்லியே..! நான் என்ன செய்ய? காலம் போகுது'' என்று மனைவி லட்சுமியை நொந்து கொண்டார் வதனாவின் தந்தை ராகவன்.

''மகள் வாழணும் என்கிற ஆசை எனக்கில்லையா? கொஞ்சம் பொறுக்கிறதால ரெண்டு பேரும் நல்லா வாழ்வாங்க. ஒருத்தரை ஒருத்தர் மனமார விரும்புறாங்க. அவனும் ஒரு ஒபிஸர்; நம்மட பிள்ளைக்கு ஏத்த ஒபிஸர்; ஒபிஸரை வேலைக்காரன்ட கையில கொடுக்கிறதா? குரங்கிட கையிலே பூமாலையா? '' என்று கேட்டாள் லட்சுமி

''நீ சொல்றதும் சரிதான். பணமில்லாட்டா பொறுமையாக இரிக்கணும் '' என்று தனக்குத்தானே ஆறுதல் சொல்லிக் கொண்டார், ராகவன்.

வேலைக்கு வெளிக்கிட பாத்ரூம் பக்கம் போனாள் வதனா.

இரவு நீண்ட நேரத்திற்கு பின்னர்தான் அவளுக்கு உறக்கம் வந்தது. இன்னும் தூங்க வேண்டும் போலிருந்தது! கடமைக்கு செல்ல வேண்டுமே! கண்கள் வீங்கி சிவப்பேறி இருந்தது. சிந்தனை அவளது நெஞ்சைவிட்டு அகலவில்லை.

குளிக்கும் போதும் இடை இடையே சிந்தனை வந்து சித்திரவதை செய்தது.

''சந்திரனுக்கு வசதி இல்லாமல் போகலாம். ஆனால் என்னை அவர் ஏமாற்றமாட்டார். என்னைத் தவிர எவளையும் மணம் முடிக்கமாட்டார். பணத்துக்கு அடிமையாகும் கோழைத்தனம் கொண்டவரல்ல அவர். பார்க்க பலருக்கு தீயவராக தெரியலாம். உண்மையில் நல்ல உள்ளம் கொண்ட உத்தமர். பணக்காரர், பெரும்பதவியில் உள்ளவர்கள் கூட பிழைவிட்டால் துணிந்து சொல்லக் கூடிய துணிச்சல் மிக்கவர். தவறுகளை சுட்டிக் காட்டுவதால் கெட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் எடுத்தவர்." மன ஆறுதலை வரவழைத்துக் கொண்டாள் வதனா. அத்தோடு மொட்டைக் கடிதத்திற்கு பதில் வரைய வேண்டும் என்றும் நினைத்துக் கொண்டாள்.

சந்திரனை மறப்பதாக இருந்தால் மட்டும் பதில் கடிதம் எழுதி மேசை லாச்சியினுள் வைக்கச் சொல்லியிருந்தான் அந்த மொட்டை வாசி.

சந்திரனை மறக்காமலே கடிதம் எழுதி வைக்கத்தீர்மானித்தாள் வதனா. அந்த மொட்டை வாசி பதில் கடிதத்தை பார்த்து வேதனைப் பட வேண்டும் என்று விரும்பினாள் வதனா.

கவலைகளை களைந்து எறிந்தாள். களிப்புடன் குளித்தாள்; வந்து உடைகளை மாற்றும் போது ''என்ன வதனா........... இரவெல்லாம் கனவில் அழுகையும் ஒப்பாரியும்! ஞாபகம் இருக்கா?" என்று கேட்டாள் தாயார் லட்சுமி

''கனவு காண்பதுக்கு காரணமும் வேணுமா?" என்று பட்டென பதிலிறுத்தி வினாக்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தாள் வதனா.

மொட்டைவாசிக்கு உறைப்பான கடிதம் எழுதினாள். பெயரில்லாத மொட்டையே,

உன்னை யாரென தெரிந்தால் காறி உமிழ்வேன் யாரையாவது நீ காதலிக்கப் பார். இன்னொருத்தனின் காதலியை, மனைவியை விரும்புவதை விட்டுவிடு. இல்லையானால் வேளைவரும்போது செருப்படியும் வாங்குவாய்.

எங்கள் காதல் புனிதமானது. சந்திரன் பணத்துக்கு அடிமையாகும் பூதமல்ல. அவருக்காக எத்தனை வருடங்கள் என்றாலும் காத்திருப்பேன். அவர் திருமணம் செய்வதென்றால் என்னை மட்டுமே திருமணம் செய்வார் என்று உனக்கு சவால் விடுகிறேன். இருந்து பார். இனி உன் கோழைத்தனத்தை காட்டாதே! பகற்கனவு கண்டு குதிக்காதே.

இப்படிக்கு,<br>
கோழையின் எதிரி

இதனை ஒரு கடித உறையில் வைத்து மூடினாள். அவள் வேலை முடிந்து வீட்டுக்குப்போனபின் 'தன்னை விரும்பி எழுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறாள்' என்று விரும்பி உடைத்து படிப்பான் பெயர் குறிப்பிடாதவன். பின்னர்தன் முகத்தில் கரிபூசியது விளங்கும்.

கடமையில் ஈடுபட்டாள் வதனா. யாரும் நோக்காத வேளைபார்த்து சந்திரன் சிக்னல் கொடுத்தான் வதனாவிற்கு! அவள் புன்னனகைத்து கொண்டாள்.

பெயர்குறிப்பிடாமல் தனக்கு எழுதப்பட்ட கடிதத்தை சந்திரனிடம் சொல்வதில்லையென முடிவுகட்டினாள். சொன்னால் கடிதத்தைக்கேட்பான். எவ்வளவோ அவனை புண்படுத்தும் வாக்கியங்கள் உள்ளன. அது மாத்திரமல்ல மற்றவர்களை சந்தேகித்து வீண் சண்டையும் எழலாம்! இவைகள் ஏற்பட வதனா இடம் விடவில்லை.

அவள் பகல் சாப்பாட்டிற்கு இறால் சமைத்து வந்திருந்தாள். அதற்காக சந்திரன் சாப்பிட வரும் வரைக்கும் காத்திருந்தாள். வழியை பார்த்திருந்தாள். எல்லோருக்கும் கடைசியில்தான் சந்திரன் சாப்பிடுவான்.

சந்திரன் சாப்பிட போகும் போது பின்னால் போவாள் வதனா. அப்படி பின்னால் வதனா வந்துவிட்டால் ஏதோ சுவையான கறி வகைகள் கிடைக்கப் போகுது என்று அர்த்தம்.

''இன்று என்ன விசேஷமோ?'' சந்திரன் கேட்டான்.

''மட்டக்களப்பு இறால் இருக்கு. சாப்பிட்டா மறக்க மாட்டீங்க'' என்றாள் வதனா.

''என்னத்தை மறக்க மாட்டேன். இறாலையா? உங்களையா?'' விடாமல் கேட்டான் சந்திரன்.

''இரண்டையும்தான்'' என்று கூறி தப்பித்துக் கொண்டாள் வதனா. சிறிது நேர மௌனம் நிலவியது. அது இருவர்களினதும் கற்பனையின் பிரதி பலிப்பாகும். சந்திரன்தான் மீண்டும் மௌனத்தை விரட்டினான்.

''நாளை சனிக்கிழமை டவுனுக்கு ஷோ பாக்கப் போவமா? எனது அபிமான நடிகர் ரஜனிகாந்தின் சுப்பர்ஹிட் சோ ஓடுது'' என்றான் சந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''முந்தியும் ஒரேயொரு முறை படம் பார்த்தோம். நம்ம ஊரவர்களும் சிலர் வந்திருந்தாங்க. வெட்கமாயிருக்கும்'' என்றாள் வதனா.

''ஏன் வெட்கம்? நாம திருமணம் செய்யப் போறவங்கதானே! இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் இதுக்கெல்லாம் வெட்கப்படத் தேவைல்ல'' என்றான் சந்திரன்.

''காலை பத்தரை மணி மெட்னி ஷோவுக்கு போவம்'' என்றாள் வதனா.

''நீங்க சொன்னா சரி.'' என்று கதைக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு கைகளை கழுவிக் கொண்டு அலுவலக ஆசனத்தில் போய் அமர்ந்தான். கடமைகளை கவனித்தான்.

வதனாவும் வந்து வேலையை ஆரம்பித்தாள். அலுவலகத்தில் வேலை கூடும் போது நேரம் நகர்வது தெரிவதில்லை. பஸ் ஏற வேண்டியவர்கள் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். நேரம் நான்கு முப்பதை தாண்டியது. வதனாவும் புறப்பட்டாள். பதில் கடிதத்தை பைலுக்குள் வைத்து விட்டு போனாள். மோட்டார் சைக்கிளில் செல்ல வேண்டியவர்கள் இன்னும் கொஞ்ச நேரம் வேலை செய்வதாக முடிவு எடுத்து செய்தார்கள்.

தனது மொட்டக் கடிதத்திற்குரிய பதில் கடிதத்தை எடுத்து படிக்க வேண்டும் என்ற அவா சண்முகத்தின் நினைவில் எல்லாம் நிறைந்து வழிந்தது.

யாரும் நோட்டமிடாத வேளை பார்த்து பைலை புரட்டி கடிதத்தை எடுக்க வேண்டும் என்று தீர்மானித்து மெதுவாக செயற்பட்டான். கண்டீனுக்குள் போய் கடிதத்தை விரித்தான். அவனது முகமெங்கும் கரி பூசி பழைய செருப்பால் அடித்தாற் போலிருந்தது. சும்மா கிடந்த சங்கை ஊதி கெடுத்த கதைதான்!

''நல்ல காலம் எனது பெயரை எழுதவில்லை. அந்தவகையில் வெட்கப்பட வேண்டிய அவசியமில்லை. ஆனால் துக்கம் என்னை கொல்கின்றதே...! எண்ணம் கனவாகியதே'' என்று நினைத்துக் கொண்டான் சண்முகம். கோழைகளுக்கு வரும் நிலை இதுதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வாரம் சனிக்கிழமை விரைவில் வராமல் நீண்டு கொண்டு போனது சந்திரனுக்கு! நகரத்துக்குச் சென்று மெட்னி பார்க்க வதனாவுக்கு அழைப்பு விடுத்து அவளும் ஏற்றுக் கொண்டாள். ஒரு கிழமை ஒரு மாதம் போல கடந்தது.

நீல டீ சேட், கறுப்புக்காற்சட்டையுடன் பஸ்தரிப்பை அடைந்தான் சந்திரன். நேரம் ஒன்பது மணி வதனா வரவில்லை. தெருவைப்பார்த்துப்பார்த்து சந்திரனின் கழுத்து வலித்தது. ''இன்று ஏமாற்றப்போகிறாளோ அல்லது எதிர்பாராத விபத்து நடந்துவிட்டதோ'' என்று அவனது மனம் குழம்பிற்று.

ஒன்பதரை மணி போல் சிவப்பு நிற பூப்போட்ட சாரி அணிந்து அழகுச் சிலையாக அசைந்து வந்தாள் வதனா. பட்டுப்போன்ற கன்னங்கள் பழுத்தது போல் சிவப்பாக தோன்றியது. அவளைக்கண்டதும் அனைத்துக்கவலையும் பறந்தது சந்திரனுக்கு.

மனதுக்கு உகந்த காதலி, எதிர்கால நாயகி அருகே மூன்று மணித்தியாலங்கள் இருக்கப்போகின்றான் என்றால் சந்தோஷத்திற்கும் குறைவு உண்டா?

விடுமுறை நாட்கள் என்றால் பஸ்ஸிற்கும் கொஞ்சம் விடுமுறை தான். காரணம் பஸ்ஸில் ஆட்கள் குறைவாகத்தான் காணப்படுவார்கள். சந்திரனும் வதனாவும் ஒரு ஆசனத்தில் போய் அமர்ந்தார்கள்.

''பார்த்தீர்களா? திருமணம் செய்யமுதல் ஊர்சுத்துறாங்க. காலம் கெட்டுப்போச்சு. இப்படி சுத்தின ஆக்கள் எல்லாம் திருமணம் முடிச்சிருக்காங்களா? ஆம்புளைக்கென்ன! யாரையும் முடிச்சுக்குவான். பொம்பள கஷ்டம்தான்'' என்று ஒரு வயோதிபர் அடுத்தவரிடம் சொன்னார்.

''உனக்கென்ன அப்பு! இப்படி சுத்தினவங்க திருமணம் செய்து வாழ்ந்தும் இருக்காங்கதான்! தெருக்கதை நமக்கெதுக்கு!'' என்று மற்றவன் சொல்லிக் கொண்டான். யார் என்ன சொன்னால் என்ன? சந்திரன், வதனா காதுகளுக்கு கேட்காமல்தான் எல்லாக் கூற்றும்!.

''நமதூர் பெயித்து. கொஞ்சம் நிமிர்ந்து பாருங்க வதனா!. படம் பார்க்க மட்டுமா? உங்களோட பேசி மகிழவும்தானே இந்த ஏற்பாடு''. என்றான் சந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘‘சும்மா பேசாம இரிங்க. பஸ்ஸிக்குள்ளே தெரிஞ்சவன்கள் யாராவது திடீரென ஏறிருவானுகள். தியேட்டருக்கே போய் பேசுவோமே” என்றாள் வதனா.

‘‘உங்களைத் தெரியாதா! அங்கு போனபின் அன்னா தெரிஞ்சவன் நிக்கான். இன்னா தெரிஞ்சவன் பாக்கான் என்டு சொல்லி தலையை குனிஞ்சிட்டு இரிப்பீங்க. படம் பார்த்ததுமில்லே. கதைச்சதுமில்லே. காசு போனதுதான் மிச்சம்” என்று அலுத்துக்கொண்டான் சந்திரன்.

‘‘தியேட்டரிலே பேசிறன் பாருங்க அதுவரை சைலஞ்சா இரிங்க” மீண்டும் வலியுறுத்தினாள் வதனா.

பஸ் காத்தான்குடியை கடந்து கல்லடியை ஊடறுத்தது. இன்னும் பதினைந்து நிமிடங்களில் மட்டக்களப்பு மாநகரம் அவர்களை கண்சிமிட்டி வரவேற்கப்போகிறது. இருவரின் உள்ளங்களிலும் ஒருவித இன்ப உணர்வு பிரவாகித்து ஓடியது. பஸ் சாரதியும் தனது வேகத்தை இரட்டிப்பாக்கிக்கொண்டார். ‘‘கட கட” சத்தம் காதை செவிடாக்கியது.

‘‘அப்பாடா” என்று பெருமூச்சுவிட்டவாறே இறங்கினான் சந்திரன். அவனைத் தொடர்ந்து வதனாவும் இறங்கினாள்.

‘‘இனி தெரிஞ்சவங்களும் இல்லே. கண்ட முகங்களும் இல்லே. நாம ரெண்டுபேரும் இனி சொந்த முகங்கள்தானே. வாங்க ஒரு கூள் ரிங்ஸ் எடுத்திட்டு போவோம்” என்றான் சந்திரன்.

இரண்டுபேரும் ஒரு கூள் ஸ்பொட்டை நெருங்கினார்கள். ஓடர் பண்ணினான் சந்திரன். தாகம் தீர இருவரும் அருந்தினார்கள். சந்திரன் வதனாவை இலேசாக முறைத்துக் கொண்டான். வதனா புன்னகைத்தாள்.

இருவரும் சாந்தி தியேட்டரை நோக்கி நடந்தார்கள் பத்தரை மணிக்கு பத்து நிமிடங்கள்தான் இருந்தன. ஓட்டமும் நடையுமாக சென்றார்கள். பல்கனிக்கு அனுமதிச்சீட்டு வாங்கி ஓரமாக பார்த்து உட்கார்ந்தார்கள்.

சந்திரன் இடதுபக்கமாக திரும்பி பார்த்தான். அவனுக்கு தெரிந்த முகம். யாரென தெரிந்து கொள்ளமுதல் மின்சார பல்புகள் அணைக்கப்பட்டன. படம் தொடங்கியது. அவனது மனதில் கலவரமும் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 05

இடைவேளை. மின்சார விளக்குகள் ஒளியை உமிழ்ந்தது மெதுவாக இடது பக்கம் திரும்பி பார்த்தான் சந்திரன்.

அங்கே, அவனது ஊரைச்சேர்ந்த ராமநாதன் அமர்ந்திருந்தான். இவர்களை கண்டுகொண்டால் போதும். சும்மா மென்றவாய்க்கு அவல் கிடைத்த மாதிரி இருக்கும். ஊரில் ஏதாவது சம்பவங்கள் நிகழ்ந்தால் அக்குவேறு ஆணிவேறாக தெருத்தெருவாக விற்று திரிபவன்தான் ராமநாதன். இவர்களை கண்டு கொண்டால் ஒரு காவியமே பாடி முடிப்பான்.

''வதனா.. இடது பக்க பின்புற நாலாவது வரியில் வம்பன் ராமநாதன் இரிக்கான். நம்மை கண்டா போதும். நாக்கும் மூக்கும் வைச்சு கதை சொல்லி திரிவான். முகத்தை திருப்பி பின்னாலே பார்க்காம இரி. முன்னுக்கு யாரும் வந்தா குனிஞ்சு முகத்தை மூடிக்கி இரி." என்றான் சந்திரன்.

வதனா பயந்து போய் இருந்தாள். தலை நிமிரவே இல்லை. மீண்டும் மின்சார விளக்குகள் அணைக்கப்பட்டன. இருவரும் பயம்நீங்கி பரவசமடைந்தார்கள்.

சந்திரன் வதனாவின் கன்னத்தை கிள்ளினான் ''ஐயோ.. கன்னத்தையும் கையையும் கிள்ளி கிள்ளி புண்ணா வலிக்குது." என்று சிணுங்கினாள் வதனா.

''வலிக்கட்டும். இது என்ன வலி! திருமணம் ஆனபொறகு இருக்கு வலி. தீராத வலி" என்றான் சந்திரன். முகத்தை மூடிக்கொண்டாள் வதனா. இருவரும் திரைப்படத்தில் கவனம் செலுத்தினார்கள்.

காதலன் காதலியோடு உயிராக இருக்கின்றான். இவர்களை ஒன்று சேரவிடாமல் தடுப்பதற்கு வில்லன் குழு செயற்படுகின்றது. காரணம் அந்த வில்லன்களில் ஒருவன் அவளை விரும்புகிறான். ஆனால் அவளோ அவனை விரும்பாமல் இந்த காதலனை தேர்ந்தெடுத்தாள். கதை சுவாரஸ்யமாக போய்க்கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியில் காதலன் வில்லனை அடித்து நொறுக்கும் காட்சியை அற்புதமாக படமாக்கி இருந்தார்கள். தொழில்நுட்ப உதவியைக்கொண்டு எவ்வளவு ஆர்டிபிஸலாக காட்சியை அமைக்கிறார்கள் என வதனா நினைத்துக்கொண்டாள்.

அவர்களின் காதல் திருமணத்தில் முடிந்தது. அத்துடன் படக்காட்சி நிறைவடைந்தது. மின் விளக்குகள் ஒளியைப் பரப்பியது.

''வதனா... வம்பன்ராமநாதன் இரிக்கான். இன்னும் வேறு யாரும் இரிக்கலாம். மற்றவங்க போனபிறகு கடைசியிலே போவோம்'' வதனாவின் காதுக்குள் சந்திரன் சொன்னான். வதனாவும் தாமதித்தாள்.

இறுதியாக வெளிவந்தார்கள்.

''வதனா.. ஒரு கப் டீ குடிச்சிட்டு போவோமே'' அழைப்பு விடுத்தான் சந்திரன்.

''டீ யும் வேணாம். வடையும் வேணாம். வாங்க வீட்டுக்கு போய் சேருவோம். இன்னும் அவனும் இவனும் கண்டுகிட்டு வித்து திரிவானுகள். ஊர்ப்புத்திகள் போகாதே! எப்பதான் அவனுகள் திருந்தப்போறானுகளோ! அதுதான் திருமணம் செஞ்சி ஊரில வாழாம கொழும்பில வாழ பலர் ஆசைப்படுகிற'' என்றாள் வதனா.

''அவுனுகள் பஸ்ஸில ஏறி போனாப்பிறகு, அடுத்த பஸ்ஸில நாம போவம். இன்னும் அரைமணி நேரம் நிக்கத்தான் வேணும்.'' என்றான் சந்திரன்.

''இனி படம்கிடம் என்று கூப்பிடாம பல்லை கடிச்சிக்கு இரிங்க. பத்துமாதங்களிலே திருமணம் செய்யப்போறம்தானே'' என்றாள் வதனா.

''பல்லை கடிச்சிக்கு இரிக்க இருந்தா உங்களை ஏன் கூப்பிடுறன்'' என்றான் சந்திரன்.

''போதும் உங்கட கிண்டல்'' கதைக்கு முற்றுப்புள்ளி வைத்தாள் வதனா. நிறைந்த ஜனங்களுடன் பஸ் புறப்பட்டுவிட்டது. அடுத்த பஸ்ஸிற்காக காத்து நின்றார்கள்.

●

''நாடே கெட்டுப்போச்சுடி. மலர்விழி பேப்பர் வந்திருக்கு வாவன். நாட்டிலே நடக்கிற சமாச்சாரத்தை கேளன்.'' என்று தொண்டை கிழிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தினார் வதனாவின் தந்தை ராகவன்.

''பேப்பர் கொண்டு வந்தா எனக்கும் வாசிச்சி காட்டினாத்தானே உங்களுக்கு தூக்கம் போகும். வந்திற்றன். வாசிங்க பார்ப்பம்" என்றுகூறி கணவன் மூர்த்தி உட்கார்ந்திருந்த கதிரைக்கு பக்கத்தில் கீழே அமர்ந்தாள் லட்சுமி.

''இஞ்சப்பாரு. அரசியல்வாதியெல்லாம் ஏமாற்றுப்பேர்வழிதான். நான் வந்தா ஏழு கிலோ உணவு தருவேன். நான் வந்தா ஐந்து ரூபாக்கு பாண் தருவேன் என்பாங்க. ஆட்சிக்கு வந்தா எல்லாம் மறந்திடும். பத்து ரூபாக்குத்தான் பாண்கிடைக்கும். தெரியும்தானே...! அதேபோல எதிர்க்கட்சி உறுப்பினர் என்ன சொல்கிறார். எங்க கட்சி ஆட்சிக்கு வந்தா சமாதானம் ஏற்படும் என்று சொல்றார். இதற்கு முன்ன இருந்த ஆட்சி அவர்ர கட்சி ஆட்சிதானே...! எங்கே சமாதானம்? எல்லாம் வாய்ச்சவடால். அதை விடு.

பண்டாரவளையில் கன்னிப்பெண் தற்கொலை காதல் தோல்வி காரணம். படுமுட்டாள் ஆச்சே. கெட்டவன் ஏமாற்றி போயிற்றா நீ ஏன் சாகணும்? இன்னொருத்தன் வருவான்தானே! அதுவரை பொறுக்க வேண்டியதுதானே...!" என்று சொன்ன ராகவன் சுருட்டை இழுத்து ஊதினார்.

''நீங்க பேப்பர் பார்க்கிற நேரம் அந்த சுருட்டை தூக்கி வீசவேண்டியதுதானே" என்றாள் மனைவி லட்சுமி.

''அந்த சுருட்டாலதானே செய்தியே சுவையா வருது அடுத்த விசயம். அண்ணன் தங்கைக்குள் காணித்தகராறு. இரண்டுபாகம் அண்ணனின் காணி தங்கையால் சுவீகரிப்பு. விடயம் கோடுவரை சென்று விட்டது. பாருடி மலர்விழி. ஊரானை நம்பலாம். இந்தக்காலத்திலே கூடப்பிறந்ததுதானே குழிபறிக்குது. பேராசைக்கு ஒரு முடிவில்லையா? காலம் கெட்டுப்போனதுக்கு இதைவிடவேறு என்ன ஆதாரம் வேணும்?

இந்த அமெரிக்கன் என்ன கெட்டவனா இரிக்கான். பணம் இரிக்கிற அளவு பண்பில்லை. அவனுக்கு விருப்பமில்லாத நாட்டுக்கு என்ன அநியாயம் செய்யிறான்! ரெண்டு நாடு சண்டை போடுற நேரத்திலே அவனுக்கு விருப்பமில்லாத நாட்டை குண்டுபோட்டு அழிக்கான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதி இருக்கிற தைரியம். கடவுள் நெனைச்சா பிறகு ஒருகாலத்திலே பெரும்பிச்சைக்கார நாடாக ஆக்கி காட்டுவான். அப்போது மத்த நாடு அமெரிக்காக்கு குண்டு போடும். ஈராக்கிலே மருந்து வசதிகள் இல்லாமல் தினமும் இருபது குழந்தைகள் இறக்குதாம்.! நோய், பசியை உண்டாக்கி இறக்கவைக்கும் கொடியவன். சுயநலவாதி.

கடவுள் எல்லாத்தையும் பார்த்துக்கொண்டுதான் இரிக்கிறார். எப்பதான் கண்திறக்கப் போறாரோ.?

பேப்பரை பார்த்தா ஒரு நல்ல செய்தி இல்லியே! சமாதானத்துக்கு வாங்க என்று அரசு சொல்லுது. புலி இயக்கமும் சொல்லுது. ஆனால் ரெண்டு பேரும் ஓய்வின்றி அடிச்சுக் கொண்டிருக்காங்க.

இப்பிடி இருந்தா எப்படி சமாதானம் வரும். இதுக்கு மேல பேப்பரை படிச்சா பைத்தியம்தான் புடிக்கும். சூடா ஒரு தேத்தண்ணி கொண்டு வா" என்று மனைவிக்கு கட்டளை இட்டு மௌனமானார் ராகவன்.

சில நிமிடங்களில் தேனீருடன் வந்தாள் லட்சுமி.

"இப்படி அடிக்கடி தேயிலை மட்டும் குடிப்பதாலே ஒழுங்கா சாப்பிடுறதும் இல்லே. இன்னாங்க" என்று கூறி கொடுத்தாள் லட்சுமி.

"லட்சுமி... அந்தா... மகள் வதனாவும் வருது. இண்டைக்கு விஷேஷ வேலையாமா? " ராகவன் கேட்டார்.

அவருக்கு சினிமா பார்த்து விட்டு வரும் கதை தெரியாது. லட்சுமி சொல்ல வில்லை. சொன்னால் இதற்கெல்லாம் விடமாட்டார்.

"யாரோ சினேகிதிர வீட்டுக்கு போய் வாறா. வயது வந்த புள்ளையை இதற்கெல்லாம் விடாது கட்டுப்பாடு போடுற அவ்வளவு நல்லதில்லை. திருமணம் செய்து கொடுக்கவும் வழியில்லை நமக்கு! அவளை காதலிக்கிற சந்திரன் முடிக்கு மட்டும் பார்த்துக்கிருக்கம்." என்றாள் லட்சுமி.

ராகவனால் எதுவும் பேசமுடியவில்லை. தேனீரை மடக்கு மடக்கு என குடித்தார்.

வதனா ஆடையை மாற்றினாள். லட்சுமி பகல் போசனத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REFERENCE

தயார் செய்து வைத்திருந்தாள்.

வதனா உணவு மேசையை நாடும் போது பின்னால் சென்றாள் தாயார் லட்சுமி.

''வதனா... சத்தம் போடாதே. அப்பா கேட்டாரு. அரியஸ் வேலையாம். போயிருக்கான்னு பொய் சொன்னேன். எதுக்கும் அங்க இங்க போறத குறைச்சிக்க. யாராவது தியேட்டரில, பீச்சிலே உங்கள் மகளைக் கண்டன் என்று சொன்னா என்னையும் தொவச்சி போடுவாரு. அடுத்த வருஷம் கல்யாணம் முடிச்சா எங்கெண்டாலும் நீங்க திரியலாம். கேட்பாரில்லை. அது வரைக்கும் கொஞ்சம் கட்டுப்பாடு வேணும். ஊர் வாயை மூட உலை மூடி இல்லம்மா'' என்றாள் லட்சுமி.

''நாகரிகம் வளர்ந்தாலும் மனிச மனம் வளரல்ல. தன்ர பிழைகளை மறந்திடுவான். மத்தவங்கட பிழையைத்தான் பேசித்திரிவான். எப்ப மனிசன் தன்ர பிழையை உணர்ந்து கொள்ளுறானோ.... அப்ப உலகத்திலே எந்த பிரச்சினையும் இரிக்காது.'' என்றாள் வதனா.

''என்ன தாயும் மகளும் கசபுசக்கிற? என்ன சங்கதி? எனக்கும் சொல்லுங்க'' என்றார் வதனாவின் தந்தை ராகவன்.

''பேசாதே'' என்று மெதுவாக சொல்லி விட்டு வெளிவிராந்தைக்கு வந்தாள் லட்சுமி. வந்ததும் வராததுமாக ''பிள்ளையோட வாய் திறக்கவும் விடமாட்டீங்க'' என்று மூடுமந்திரம் போட்டாள் லட்சுமி.

''ம்... பேசு. ஏதோ... பிரச்சினை போல தெரிஞ்சுது. அதான் கேட்டன். பிரச்சினைகளை எப்பிடி சமாளிப்பது என்பது எனக்கு தெரியும். பிரச்சினை இல்லாட்டி சரி '' என்றார் ராகவன்.

''சந்திக்கடை சவரி முத்து....'' என்று இழுத்தாள் லட்சுமி.

''சவரி முத்துக்கு என்ன? '' ஆவலுடன்கேட்டார் ராகவன்.

''சொல்ல முதல் குதிக்கிறீங்க. வாயை மூட முதல் நீங்க திறப்பீங்களே...! சவரி முத்துட மூத்த மகள் செல்வராணி பொரிங் போனாளே.... அவள் வந்திருக்காளாம். ஊசி மாரி உடம்பு. எருமை மாரி கொழுத்து வந்திருக்காளாம். ஜனங்களெல்லாம் போய் பார்க்குது. நானும் பின்னேரம் போய் பார்த்து வர இருக்கன்.'' என்றாள் லட்சுமி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆ...ஹா.... நீ பார்த்து வா. தின்க இல்லாம கெடந்ததுகள் அங்க மிருகங்களுக்கு போடும் தீனியையும் சாப்பிட்டிருக்கும். அங்க மலசல கூடங்கள் சுத்தி செய்யுது. அழுக்குத் துணி கழுவுது. அடுப்பிலே வேகுது. இஞ்ச வந்தா டீச்சர் நெனப்பு கீழ்சாதிகளுக்கு! என்னதான் இருந்தாலும் தன்ர நிலமையை மறக்கப்போடா.

அவன்ட இவன்ட காலை பிடிச்சி கடன் வாங்கி சவூதிக்கு, துபாய்க்கு போயிருவாங்க. அங்கு போய் ஆயாக்களாகவும் அரபிகளுக்கு வைப்பாட்டியாகவும் இருந்திற்று வந்து என்ன லெவல்! சும்மாவா சொன்னாங்க. குதிரைட வேகமறிஞ்சுதான் கொம்பு இல்லாம போயிச்சென்று! சில பொம்புளைகள் புருஷனை விட்டுப் போட்டு மாதக்கணக்கிலே நின்றா ஆசை உணர்வு எழத்தானே செய்யும். இலங்கையிலே இருந்து போன ரைவர், டெயிலர், வேலைக்காரனோடு தொடர்பு வைத்து அவர்களுக்கு பெண்டாட்டியா இருக்காங்க. இஞ்ச புருஷனுக்கு என்ன? பணம் மாதா மாதம் வருது. அவனொரு வைப்பாட்டிய வைச்சுக் கொண்டு பணத்தை மண்ணாக்கிறான். பாவம். பிள்ளைகள்ள எதிர்காலம்தான் நாசமாகுது.'' என்றார் ராகவன்.

'' ஊர் வம்பு வேணாம்'' என்றாள் லட்சுமி.

''வெளிநாட்டுக்கு போய் வந்த பொம்புளைகள் நிறையப்பேர்ர கதை நாறிப் போயிருக்கு. நீ மறந்திற்றாய். ஞாபகம் ஊட்டுறன். மாலாவும் வரதனும் காதலிச்சு மணம் செய்தாங்க. நகமும் சதையுமாக வாழ்ந்தாங்க. வறுமையை போக்க மனைவியை சவூதிக்கு அனுப்பினான். இரண்டு வருஷத்தாலே வந்தாள். உழைச்சுக் கொண்டு வந்ததை எட்டுமாதங்கள் சாப்பிட்டாங்க. மாலாவுக்கு திரும்பவும் சவூதிக்கு போக வேண்டி வந்தது. இரண்டு வருஷத்திலே வருவாள் என்று வரதன் எதிர் பார்த்தான். நாலு வருஷமாகியும் வரவில்லை.

வரதன் கூலி வேலை செஞ்சி வாழ்ந்தான். மாலா இந்திய சாரதி ஒருத்தனை மணம் முடிச்சி இந்திய பிரஜையாகிற்றாள். ''வெளிநாட்டுக்கு போய் வந்த பெண்களுக்கு என்ன துணிச்சல்? காமப் பேய்கள்'' என்றார் ராகவன்.

மகள் வதனா வெளிவிராந்தைக்கு வருவது தெரிந்தே கதையை நிறுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதனா பத்திரிகையை புரட்டினாள். அதில் மனம் செல்ல வில்லை. சந்திரனோடு சினிமா பார்த்து பொழுது போக்கிய சம்பவங்கள்தான் நெஞ்சில் நிழற்படமாக நிறைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 06

மழை வெழுத்து வாங்கியது. அந்த ஊரில் கொஞ்சம் மழை பெய்தாலே போதும். தெரு வெள்ளமாக தெரியும். ஒரு வாரத்திற்கு மேல் ஓயாத மழை பெய்தால் எப்படி இருக்கும்?

தண்ணீர் ஓடிச் செல்ல வழி இல்லை. நாட்கணக்கில் நின்றுதான் வற்ற வேண்டும். நடக்கவும் முடியாது. வாகனத்தில் செல்வதும் சிரமம். சிரமத்திற்கு மத்தியில்தான் மக்கள் இருக்கிறார்கள். கிறவல் வீதி ஒரு வகை இளஞ்சிவப்பு திரவத்தை கரைத்து போட்டாற் போல் தெரிந்தது. இப்படியான காலத்தில் வேலைக்கு செல்பவர்கள் வேண்டா வெறுப்புடன்தான் செல்வார்கள்.

சந்திரன் பதுங்கி பதுங்கி பஸ் தரிப்பை அடைந்தான். மழைக்கும் பஸ்ஸிற்கும் தொடர்பில்லை. இருந்தாலும் மழை பெய்தால் சற்று தாமதமாகித்தான் பஸ் வரும்.

அலுவலகம் குறிப்பிட்ட நேரத்துக்கு இயங்க ஆரம்பிக்கும் பஸ் சாரதி பிரேக்கில்லை. கியேர் இல்லை என்று எதையாவது சொல்வார்.

''வதனா அழகா இருந்தாலும் மிக மானம் மரியாதையும் உள்ளவள். கையைத் தொட்டு பேசுகின்ற போதும் எவ்வளவோ கூச்சப்படுகின்றாள். கட்டிக் கொள்ளப் போகின்றவன் என்று சொன்னாலும் கட்டிய பின்னர் எல்லாம் என்று வரம்பு கட்டுகின்றாள். அவளருகே அமர்ந்து படக காட்சி பார்க்கின்ற போது என்ன சுகமாக இருந்தது.'' என்று எண்ணிக் கொண்டிருந்த போது பஸ் வந்தது.

ஏறி நின்று கொண்டான் சந்திரன்.

பெண்கள் அமரும் ஆசனத்தில் ஆண்கள், ஆண்கள் அமரும் ஆசனத்தில் பெண்கள். இப்படி மாறி மாறி அமர்வதிலும் ஒரு இன்பம் போலும்! அதுதான் ஆணுக்கு பக்கத்தில் பெண். பெண்ணுக்கு பக்கத்தில் ஆண் அமர்ந்து சமத்துவத்தைக் வெளிக்காட்டுகிறார்கள்.

வயோதிபர்கள் வந்தால் இடம் கொடுக்க மாட்டார்கள். குமரிகள் வந்தால் எழும்பி பக்கத்தில் நின்று கொள்வார்கள். உலகம் திருந்தாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்கு வேறு என்ன ஆதாரம் வேண்டும் என தன்னைத்தானே வினவிக் கொண்டான் சந்திரன்.

''தங்கை உமாவின் கல்யாணவிடயமாக ராஜகோபாலிடம் இன்றைக்கு பின்னேரம் கதைக்க வேண்டும்.'' என்று நினைத்தவனாக அலுவலகத்திற்குள் காலை வைத்தான்.

வதனாவின் கண்கள் சந்திரனை மொய்த்தது. சந்திரன் மெதுவாக கண்சிமிட்டினான். வதனா புன்னகை வீசினாள்

தேனீர்ச்சாலைக்குள் இறுதியாகத்தான் வருவான் சந்திரன். அதன் பின்னர் தான் வதனா வருவாள். ஆகாரப் பண்டமாற்று நடக்கும்.

''ஏய்... கண்டீனுக்குள் காதல் பாடம் நடக்குது.'' என்று ஒருவருக்கொருவர் மறைமுகமாக பேசி மகிழ்வார்கள்.

''என்டாலும் சந்திரனின் பாடு கொண்டாட்டம்தான் காலை, பகல் உணவு. பக்கத்தில் நின்றாலே மணம் கமகமக்கும். ஆண்டவனின் உலகத்திலே ஏண்டவனின் சமத்து! தம்பி சந்திரா.... நீ நடத்து காதல் பாடத்தை. வயிறு நிறைய தின்னு ஓசிச் சாப்பாடை. இனி பேசாதே அவன் வந்திரப் போறான்'' என்றார் கிளாக்கர் பொன்னையா.

''என்ன சந்திரன் பலமான யோசனை? ''

''யோசிக்கத்தானே வேணும் வதனா? தங்கையின் திருமண விஷயமாக மாப்பிள்ளை ராஜகோபாலிடம் இன்றைக்கு போய் பேச வேணும். ஹாப்டே லீவு போட்டிட்டு போறன்'' என்றான் சந்திரன்.

''அது சரி.. மாப்பிள்ளை என்ன தொழில் பார்க்கிறார்? வதனா கேட்டாள்.

''டீச்சிங்'' என்றான் சந்திரன்.

''பரவாயில்லை. ஹாப்டே லீவு போட்டிட்டு போங்க. தங்கையின்ர விஷயத்தை முடிச்சாத்தானே நம்ம விஷயமும் முடியும்'' என்றாள் வதனா. சந்திரனது தங்கையின் திருமண பந்தம் நெருங்கி வருவதை அறிந்து வதனா மிக சந்தோஷப்பட்டாள்.

''இன்னும் கொஞ்சம் வேல இருக்கு முடிக்கிற போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனிரெண்டரை மணியாகி விடும். போகக்க சொல்லிப் போக அவகாசம் இல்லே. மற்றவன்களும் நரி மாரி முழிக்காணுகள். நான் சொல்லாம போயிருவன்'' என்றான் சந்திரன்.

''நான் கண்ணாலே பேசுவேன்'' என்றாள் வதனா.

இருவரும் போய் வேலையைத் தொடர்ந்தார்கள்.

●

இருவரையும் பற்றி கிண்டலாக பேசியவர்கள் எதுவும் தெரியாத மாதிரி தலை குனிந்து வேலை செய்தார்கள்.

''லட்சுமி... செல்வராணியை பார்த்தியா? '' முன் விராந்தை நாற்காலியில் அமர்ந்தவாறு கேட்டார் ராகவன்.

''ஆமப்பா.... வெளிநாட்டுக்கு போய் வெள்ளைக்காரி மாரியல்லவா வந்திருக்காள். நீங்க போய் பார்த்தா மயங்கிடுவீங்க.'' மனைவியே ராகவனை கிண்டலாகப் பேசினாள்.

''கொழுத்தது மட்டுமல்ல. சென்ட் மணம் ஊடெல்லாம் அடிக்குது. மதமதப்பாக இரிக்காள். சிலோன்ல இனி இரிக்க முடியா. ரெண்டு மாசத்திலே சவூதி போகணும்னு சொல்றாள்.'' லட்சுமி நிறுத்தினாள்.

''இனி எப்படி இங்க இரிக்க ஏலும்? தின்க இல்லாதவளுக்கு நல்ல சாப்பாடு. திருமணமே செய்துக்க ஏலாதவளுக்கு சவூதிக்காரனின் சகவாசம். இங்க இரிக்க உடுமா? நாலைஞ்சு வருஷம் வைச்சிருந்து போட்டு அனுப்பிருவானுகள். வேறு குட்டிகளை புடிப்பானுகள். அஞ்சு வருஷம் போனாத்தான் இவக்கு விளங்கும். தின்கவும் வழியில்லாம திரிவா'' என்றார் ராகவன்.

''என்னை கதைக்க விடறீங்க இல்லியே! சொட்டு மூச்சு விட்டா வாயைத் திறந்திருவீங்க. செல்வராணி நீண்ட கவுண் போட்டு இரிக்கா. சாரியே உடுக்கிறல்லியாம். அப்...பா... தலையிலே வெள்ளி தங்க நிறத்திலே கிளிப்பும் பூக்களும் கணக்கில்லே. மணிக்கட்டு முதல் முழங்கை வரை வெள்ளியும் தங்கக்காப்பும் கலகலக்குது. கால்களுக்கு சின்ன சின்ன சங்கிலியள்.

சட்டையிலே முன்பக்க அரைவாசி உடல்பகுதி வெளியிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியுது. பொடியன்மார் நின்டு புதினம் பாக்காறுகள். கூலி வேலை செய்யிறவனை முடிக்க மாட்டேன் பொறகு உத்தியோக காரனத்தான் முடிப்பேன் என்றாள்." என்று நிறுத்தி உமிழ் நீரை துப்பினாள் லட்சுமி.

''இப்படி உத்தியோககாரனை முடிப்பன் என்டு சொன்னவங்க நிறையப் பேரை பார்த்திருக்கன். கடைசியிலே மண்வெட்டி பிடிக்கிறவனும் கெடையாம சுருண்டு போறாங்க" என்றார் ராகவன்.

''சும்மா சருகுக்க கெடந்தவளுகளெல்லாம் வெளியே போய் வந்து என்ன நடப்படிக்காளுகள். அதுதான் ஆண்டவன் குதிரைட வெஷம் அறிஞ்சு கொம்பை இல்லாமாக்கினான். வெளியே போய் வந்தா பட்டம் பதவி வருதா? இல்லியே. காணி பூமி வருதா? இல்லியே. அதுதான் போகட்டும் காசாவது கட்டியா இரிக்கா? இல்லியே! கொஞ்ச காசை கொண்டு வாறாங்க. நாலைஞ்சு மாசம் ஏதோ சாப்புடுறாங்க. பிறகு வேதாளம் மீண்டும் முருங்கை மரத்திலே...! செல்வராணியை பார்த்த உடனே எனக்கும் அவளோட கோபம் வந்திற்று. தன்ர நிலயை மறந்து கதைக்காளே" என்றாள் லட்சுமி.

''இலங்கை கெட்டுப் போனதுக்கு வெளிநாட்டு பயணமும் ஒரு காரணம். அடக்க ஒடுக்கமா இரிந்தவளெல்லாம் வெளியே போய் வந்து அடங்காபிடாரிகளா இரிக்காளுகள். அடக்கமுள்ள பெண்களுள்ள நாடு என பெயரெடுத்த இலங்கை அல்லிராணிகளின் ராஜ்யமாகி விட்டது." என்றார் லட்சுமியின் கணவன் ராகவன்.

●

அரை நாள் லீவு போட்டு ஆசிரியர் ராஜகோபாலின் வீட்டுக்குப் போயிருந்தான் சந்திரன்.

ராஜகோபால்தான் சந்திரனின் தங்கை உமாவை மணம் முடிக்க சம்மதித்தான்.

''புது வீடு கட்டி இரிக்கீங்க. அதை முடிச்சி கதவு ஜன்னல் போட்டு பெயின்பண்ணி தாங்க. உங்க தங்கைக்கு போடுற தங்கத்தை போடுங்க. நான் மிச்சமா ஏதும் கேட்கல்ல. ஒரு ஐம்பதினாயிரம் ரூபா பணமா தாங்க" என்று ஏற்கனவே கேட்டிருந்தான் ஆசிரியர் ராஜகோபால்.

''மச்சான் நீங்க கேட்ட மாதிரி வீட்டை கட்டி முடிச்சிட்டன். பெயின் பண்ணுறதான் பாக்கி. கல்யாணத்துக்கு கிட்டவா அதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யிறன். காசு ஐம்பதினாயிரம் ரெடி. கல்யாணச் செலவுக்கு இன்னும் இருபது தேவைப்படுது. ரெண்டு மாசம் கழிச்சு தேதி குறிப்பம். என்ன சொல்றீங்க மச்சான்? " சந்திரன் கேட்டான்.

ராஜகோபால் சிந்தித்தான்.

''வழியில்ல என்பதாலதான் இப்படி குறைச்சி கேட்டன். நான் நெனைச்சா லட்சக்கணக்கிலே வாங்கி முடிப்பன். உங்க தங்கை மேல கொண்ட விருப்பத்தாலேதான் முடிக்க சம்மதித்தேன். மூன்று மாசத்திலே கல்யாணத்தை வைச்சுக்குவம்." என்றார் ராஜகோபால்.

''சரி மச்சான்." என்றான் சந்திரன்.

''அம்மா...! எங்களுக்கு டீ கொண்டு வாங்க அம்மா" என்றான் ராஜகோபால்.

சிறிது நேரத்தில் ஆவிபறக்கும் பால் தேனீருடன் வந்தாள் ராஜகோபாலின் அம்மா...!

''தம்பி மூன்று மாதங்களுக்குள் திருமணத்தை செய்து போடுங்க. வயசு போன எனக்கு இன்னும் இவருக்கு பணிவிடை செய்ய முடியுமா? " என்றார் ராஜகோபாலின் அம்மா.

''அதுக்குத்தானே மாமி நான் வந்தே. மூன்று மாதங்கள்ளே எல்லாம் முடிச்சிருவன் " என்றான் சந்திரன். சிறிது நேரம் மௌனம் நிலவியது.

''அப்ப மச்சான் நான் வரட்டா " ராஜகோபாலிடம் விடைபெற்றுக் கொண்டு எழுந்தான் சந்திரன். வெளிக்கேற்று வரை வந்து வழி அனுப்பினான் ராஜகோபால். மனதில் ஆயிரம் எண்ணங்களுடன் வீடு நோக்கி நடந்தான் சந்திரன்.

'இன்னும் மூன்று மாதங்களில் தங்கையின் திருமணம் நடக்கும். அதன் பின்னர் மூன்று மாதங்களில் உன்னை திருமணம் செய்வேன் என்று வதனாவிடம் சொன்னால எவ்வளவு சந்தோஷப் படுவாள் வதனா. நாளைக்கு அவளை சந்தோஷப்படுத்த வேண்டும். அதற்கு முன் இப்போது பெற்றோரையும் தங்கை உமாவையும் சந்தோஷப்படுத்த வேண்டும். காலம் நெருங்கி வருகின்றது.' என்று தீர்மானித்தவனாய் வீட்டுக்குள் காலடி வைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன மகன் மாப்பிள்ளை என்ன சொன்னார்?" வினாக்கணை தொடுத்தார் தந்தை மூர்த்தி"

"நான் பயந்துதான் இருந்தேன். இப்படி எத்தனையோ பேரை பேசியிருக்கம். காசை சேர்த்து எடுங்க என்று நம்மிடம் சொல்லி விட்டு கூட சீதனம் கேட்டுவாற இடத்திலே கல்யாணம் செய்திற்று போறானுகள். ஆனால் ராஜகோபால் அப்படியில்லை. உமாவை திருமணம் செய்ய என்டுதான் இருக்கார். அவர்ர பேச்சுல வித்தியாசமும் இல்லை. சொன்ன மாதிரி ஐம்பதாயிரம் தந்தா போதுமாம். மூன்டு மாதத்திலே திருமணம் செய்துக்க சம்மதிச்சிற்றார்" என்றான் சந்திரன்.

"எல்லாரும் நம்ம மகளை எடுத்தெறிஞ்சு போனா யாராவது ஒருத்தன் விரும்பி வரத்தானே வேணும். கடவுளை நம்பினேன் மகன். நீங்கெல்லாம் வாழத்தானே வேணும் " என்றார் சந்திரனின் தந்தை மூர்த்தி.

இந்த உரையாடலை கேட்டுக் கொண்டிருந்த உமாவின் இதயம் இன்பத்தால் நிரம்பி வழிந்தது. பருவத்தின் உணர்ச்சிகளுக்கு யாரும் விதி விலக்கல்லவே!

மாலை வேளை. மேற்கு வானில் இளஞ்சிவப்பு நிறத்திலும் மஞ்சல் நிறத்திலும் இயற்கை காட்சிகளை இறைவன் தீட்டி வைத்திருந்தான். கற்பனை கொண்டு நோக்குவோருக்கு அது கணக்கற்ற உருவங்களைக் கண் முன்னே காட்டும். கற்பனை இல்லாதவர்களுக்கு வெறும் வண்ணக் கோலங்கள் தான்! கற்பனை மிகையாக உள்ளவர்களுக்கு இயற்கை ஓவியத்தின் எழிற்கோலங்கள் நெஞ்சை நிறைத்து நெகிழ வைக்கும். வான வீதியில் உயிரினங்கள் உயிர் பெற்று உல்லாச நடைபயிலும்.

நதி ஒரு புறம் ஊடறுக்கும். கடல் அலை பொங்கி எழுந்து நதியை இழுத்தெடுக்கும்.

இருள் வர முன்னர் தங்களது இருப்பிடத்தை நாடி வந்த பறவைகள் சங்கீதம் பாடின.

புரோக்கர் பொன்னுச்சாமி வதனாவின் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 07

வதனா புரோக்கர் பொன்னுச்சாமியைக் கண்டதும் ''விலையாகாத மாப்பிள்ளை மாடுகளை விலையாக்கத் திரிகிறார். நல்லவர்கள் கூறாமலே விலை போய் விடுகிறார்கள்'' என்று நினைத்துக் கொண்டாள்.

''மகள்... அப்பா இருக்கிறாரா? வரச் சொல்லுங்க'' என்றார் புரோக்கர் பொன்னுச்சாமி.

அப்பா ராகவனிடம் ஓடி வந்து மெதுவாகச் சொன்னாள்.

''ஒன்றுக்கும் சரிப்பட்டுவராத ஆண்களை பேசி வருகிறார். இனி... எனக்கு மாப்பிள்ளை பார்க்கத் தேவல்ல என்று சொல்லுங்க அப்பா. இன்னும் நாலைஞ்சு மாதத்திலே எனக்கு கல்யாணம் முடிஞ்சிடுமே'' என்றாள் வதனா.

''எதுக்கும் யாரை பேசி வந்திருக்கிறார் என்டு பார்ப்போம். அதுவும் ஒத்து வராட்டி இந்தப் பக்கம் வராதே என்டு சொல்றன்.'' என்றார் ராகவன்.

''எனக்கென்று சந்திரன் இருக்க வேறு யாரும் எதுக்கு? நாலைஞ்சு மாசத்திலே கல்யாணம் முடிப்பார்.'' என்று கூறினாள் வதனா.

''இரு பார்க்கிறேன்'' என்று சொன்ன வதனாவின் அப்பா ராகவன் முன் விராந்தைக்கு சென்றார்.

''பொன்னுச்சாமி. இரு. என்ன விஷயம்? இந்தப் பக்கம்'' என்றார் ராகவன்.

''நல்ல ஒரு பொருத்தம் வந்திருக்கு ராகவன். நீங்க விரும்பினா சரி. சீவரெத்தினத்தின் மகன் சுரேஷ் மாஸ்டர் தெரியும் தானே!... சீதனமே தேவல்ல என்கான்.'' என்று கதையை நிறுத்தினான் பொன்னுச்சாமி.

''சீவரெத்தினத்தின் மகனா...? நல்ல புள்ளையாயிற்றே...''

''அதுதான் சொல்ல வந்தேன். நல்ல பொருத்தம். தட்டிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிராதீங்க'' என்றார் பொன்னுச்சாமி.

''புரோக்கர்...'' என்றழைத்தவாறு வந்தாள் வதனா.

''நல்லவரின் பிள்ளை உண்மை. புரோக்கர் உங்களுக்கு தெரியாம இரிக்கலாம். எனக்கு தெரியும். ஊரறிந்த குடிகாரன். அதனால அவனுக்கு யாரும் பொண் குடுக்கல்லே. அதுக்கு என்னை பலிக்கடா ஆக்கப் போறியே பொன்னுச்சாமி! இனி இந்த வீட்டுப் பக்கமும் வராதே. நாலு மாசத்திலே எனக்கு கல்யாணம் நடக்கும். அழைப்பிதழ் அனுப்புவேன். வா'' என்றாள் வதனா.

பொன்னுச்சாமியின் முகத்தில் கரி பூசினாற் போலாகியது. யாருக்கும் சொல்லாமல் எழுந்து நடந்தார். யாரின் வீட்டை நோக்கி நடக்கின்றாரோ?

''புரோக்கர்மார் வயிற்றுப் பாட்டுக்காக இந்த தொழிலை செய்கிறாங்க. எத்தனையோ பெண்களை, ஆண்களை பொய் சொல்லி முடிச்சு வைச்சிருப்பாங்க. அவங்களுக்கு பொழைப்பு. குடும்பங்களுக்கு தவிப்பு. திருடன், கொலை காரனை நல்லவன் என்று சொல்வது மாபெரும் ஏமாற்றம்தானே. அப்படி எத்தனையோ ஏமாற்றங்கள் செய்திருக்கிறார் புரோக்கர் பொன்னுச்சாமி.

''ரோஷமுள்ள ஆளா இருந்தா இனி இஞ்ச வரமாட்டார். வந்தா பார்த்துக்குவேன். வருஷக் கணக்கில இருந்திட்டம். இனி சில மாதங்கள்தானே!'' என்று தந்தைக்கு சொன்னாள் வதனா. ராகவன் மௌனமானார்.

மகளுடன் லட்சுமியும் சேர்ந்து கொண்டாள். ''அஞ்சு வருஷமா மாப்பிள்ளை பார்த்தது போதும். வதனாட கல்யாண நாள் நெருங்கி வருது. அதுக்குரிய ஆயத்தங்களை செய்ய பாருங்க. பொய் பேசி பொக்கட்ட நிரப்புவான் பொன்னுச்சாமி. நாமதான் கண்ணீரிலே மிதக்கணும்'' என்றாள் லட்சுமி.

''சரி... இனி புரோக்கர் வரமாட்டான். வந்தா நான் ஏசி வெரட்டுறன். நேரமாகுது. மாக்கட்டுக்குப் போய் கறி புளி வாங்கிற்று வாறன்'' என்று சொல்லி போய் விட்டார். வதனாவின் தந்தை ராகவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி கேட்க வேணுமா! அம்மாவும் மகளும் பக்கத்து வீட்டுக்காரியின் மகளது போக்கை அலச ஆரம்பித்தார்கள். அதிக பெண்களின் தொழில்களில் ஒன்று இதுதானே!

''அம்மா பாவம் சுகந்தியின் கணவன்! கௌரவமான குடும்பத்து வாலிபன். வேறு யாரும் என்டா எப்போ ஓடிருப்பான். அவன் மகளின் எதிர்காலத்துக்காக பார்த்து பார்த்து இரிக்கான். சுகந்தி நன்றி கெட்ட பெண்ணா இரிக்காள். அவன்ட கைகால புடிச்சி மயக்கி கல்யாணம் செய்தாள். கலியாணம் செய்யும் வரைக்கும் அவனின் அடிமையா நடந்தாள். பொறகு அம்மாவின் முட்டாள்தனமான பேச்சை கேட்டு புருஷனை ஆட்டி வைக்காள்.

''பக்கத்து ஊட்டு ஜனங்களுக்கு கண் இல்லே என்டு நெனைக்கா போல! ஊர் காறித்துப்புர அம்மாவுக்கும் மகளுக்கும் தெரியல்லே! அவுட குடும்ப நெலைக்கு இப்படியொருத்தனை மாப்பிள்ளையாக எடுக்க கனவிலும் முடியா. நன்றி கெட்ட பிறவியளுக்கு எப்பருந்தும் இறைவன் தண்டனை குடுப்பான்.'' என்றாள் வதனா.

''சரியா சொன்னாய் வதனா. அரசன் அன்று கொல்வான். தெய்வம் நின்று கொல்லும். சில நேரம் சமைச்சுக் கொடுக்கிறல்லியாம். அவன் கடையில சாப்பிடுவானாம். ஒரு நாள் அவன் கடையிலே சாப்பிட்டத உன் அப்பாவும் கண்டாராம். நன்றி கெட்ட சுகந்தி. அவன்ட சாமானை எடுத்து அம்மாக்கு கொடுத்து சமைச்சு தின்பாளாம். இப்படிப்பட்ட கெட்டவளுக்கு நல்ல குணமுள்ள கணவன் கெடைச்சிருக்கானே....

''கணவனோட நீ, நான் என்டு பேசுவாளாம். கோபம் வந்தா டேய் என்டும் பேசுவாளாம். பாவம்! அந்தப் பொடியன் தனிய இருந்து அழுவானாம். சுகந்திக்கு நிம்மதியான வாழ்வு அமைச்சு கொடுத்தான். தேவையான நகை, நட்டு வாங்கி கொடுத்தான். வீடு நெறைய சாமான் வாங்கி கொடுத்தான். அவனால எல்லாத்தையும் அனுபவிச்சிட்டு நன்டி மறந்து நடக்கிறாளே... கடவுள் புழுவா துடிக்க வைப்பான்'' என்றாள வதனாவின் அம்மா லட்சுமி.

''இதையெல்லாம் விட முக்கிய விஷயம் சுகந்தியின் அம்மா சாப்பாடு கறி புளிக்கே கஷ்டப்பட்டவ. இப்ப சோறு கறி மகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்காவாம். ஓசியிலே சாப்பிட்டு மகளுக்கும் மருமகனுக்கும் இடையே சண்டை மூட்டுற வழிகளைத்தானாம் சொல்லி கொடுப்பாவாம். நன்றி மறந்த சுகந்தி ஒரு மிருகத்துக்குதான் சமன்." என்றாள் வதனா.

"அவள்ட அம்மாவுக்கு மூளை இல்லியா? " லட்சுமி கேட்டாள்.

"மூளை இருந்தா புருஷனோட ஒழுங்கா வாழ்ந்திருப்பாளே! நன்றி மறந்ததுகள் " என்றாள் வதனா.

"ஊர்க்கதை நமக்குத் தேவைல்ல. நம்ம கதைக்கு வருவம். சந்திரன் இன்டைக்கு வேலைக்கு வந்தாரா?" லட்சுமி கேட்டாள்.

"ஆம் அம்மா. அந்த உத்தமரு வந்தாரம்மா. மூன்று மாசத்திலே தங்கையின் திருமணம் முடிஞ்சிருமாம். அதென் பொறகு எங்கட திருமணம் நடக்குமாம் என்ற சந்தோஷமான செய்தியை சொன்னாரு. இவ்வளவு காலமும் இருந்து போட்டு கள்ளனுக்கும் குடிகாரனுக்கும் கழுத்தை நீட்டலாமா? எனக்குத்தானே என்னை நம்பி சந்திரன் இரிக்காரே! பொறுத்ததுக்கு அப்படி ஒரு நல்லவரையும் உத்தியோக காரனையும் எனக்கு தர கடவுள் துணிஞ்சிட்டார்." என்று கூறி உளம் மகிழ்ந்தாள் வதனா.

"உன்னைத் தவிர நம்ம குடும்பத்திலே உத்தியோகம பார்க்கிறவங்க யாரும் இல்லை. மாப்பிள்ளையும் உத்தியோக காரனா இருக்கிற எவ்வளவு பெருமைக்குரிய விஷயங்கள். உன்ர மாமாட மக்கள் என்ன படிய படிச்சாங்க விடிய விடிய படிச்சாங்க. சோதனையே பாஸ் பண்ண முடியாம காரையும், வேனையும் ஓட்டுறாங்க. கடையிலும் நிக்காங்க. அவுகளுக்கு என்ன நடப்பு. யார் அவுகளுக்கு சீதனம் கொடுத்து எடுக்கப் போறாங்க." என்றாள் லட்சுமி.

"மாமாட மக்கள் காட்டின நடப்புக்குத்தான் ஒரு உத்தியோக காரன் என்னை முடிக்க வாறான். அவங்களுக்கு யாரும் பெண் கொடுக்கப் போறல்ல. கொட்டாவி விட்டுத் திரிய வேண்டியதுதான்" என்று உணர்ச்சி பொங்க கூறினாள் வதனா.

கடிதம் எழுதவிருப்பதாக அம்மா லட்சுமிக்கு சொல்லி விட்டு உள்ளே போனாள் வதனா. சிறிது நேர கற்பனைக்கு இடமளித்தாள். வாழ்க்கையின் எதிர்பார்ப்புகளையும் விருப்புக்களையும் எழுத்துருவில் எழுதினாள் வதனா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை பக்கத்து வீட்டு சிறுவன் ஒருவனிடம் கொடுத்து அனுப்பினாள். சந்திரன் அவ மேலிட மடலை பிரித்தான் சந்திரன். காதலி கடிதம் எழுதினால் படிப்பதற்கு தாமதிக்க மனம் விடுமா? என் உயிரின் உருவே.

இருவரும் இன்னும் மூன்று மாதங்களின் பின்னர் இணையப் போகிறோம் என்பதனை உங்கள் வாயால் சொன்னதைக் கேட்டவுடன் என்னுள்ளத்தில் தேனை அள்ளி கொட்டினாற் போலிருந்தது.

சில விடயங்களை நேரில் சொல்வதற்கு ஆண்களே தயங்குகின்ற போது பெண்ணான நான் தயங்காமல் இருப்பேனா? அதற்காகத்தான் இச்சிறு மடல் உங்களை தரிசிக்கின்றது.

சும்மா சொல்லக் கூடாது. நீங்கள் பலசாலி. தியேட்டரில் பார்த்து விட்டேன். தொட்டதே இரும்பால் அடித்தாற் போலிருந்தது. கோபம் வந்து அடித்தால் எப்படி வலி இருக்கும்? திருமணத்தின் பின்னர் பிழை செய்தால் அடித்து விடாதீர்கள்.

நான் யாரையும் காதலித்ததில்லை! நீங்களும்தான்! காதலித்தவரை மணம் முடிப்பது பெரும் பாக்கியம் என்று தான் சொல்ல வேண்டும். அந்த வகையில் நானும் ஒரு பாக்கியசாலி தான்!

என்னை சந்தோஷக் கடலில் ஆழ்த்தி இன்ப வெள்ளத்தில் மிதக்க வைத்து உள்ளம் குளிர வாழ வைப்பீர்கள் என நம்பித்தான் உங்கள் உறவை விரும்பினேன். சந்திரன் உங்களை என் உயிராக நினைத்து பணி விடை செய்வேன். சில பெண்கள் இருக்கிறார்கள் காதலிக்கின்ற போது அன்பை சொரிவார்கள். திருமணத்தின் பின்னர் எடுத்தெறிந்து பேசுவார்கள். கணவன் என்ற அந்தஸ்தை காற்றில் பறக்க விட்டு அடிமை என்று வதை செய்ய முனைவார்கள். பக்கத்து வீட்டு சுகந்தி கூட அப்படித்தான்!

ஆனால் நான் அப்படியல்ல. மூச்சு இருக்கும் வரை உங்கள் அடிமை. உங்கள் மனதுக்கு சிறு நோவினை கூட வரவிடமாட்டேன்.

என்னுயிரே... நீங்கள் சொன்னது போல தங்கையின் திருமணம் முடிந்த மறு மாதமே நாம் இணைவோம். ஏன் இருமாதம் தாமதிக்க வேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது எதிர்பார்ப்பு என் கணவன் எனக்கு அன்பைச் சொரிய வேண்டும். என்னில் உயிராக இருக்க வேண்டும். நானும் அதுபோல் உயிராக இருப்பேன்.

நமது ஒற்றுமை வாழ்வைக் கண்டு நமது எதிரிகள் வெட்கப்பட வேண்டும். முதியவர்கள் பாராட்ட வேண்டும். வாழ்விற்கு இலக்கணமாகத் திகழ வேண்டும். எனது எதிர்பார்ப்பு இதுதான். சொத்து சுகங்கள் அல்ல. இந்த எதிர்பார்ப்புக்கு துணையாக இருந்தால் சரி.

உங்களோடு வாழ்வு. இல்லையேல் சாவு என்று எத்தனையோ திருமணங்களை தட்டி விட்டேன். உங்கள் உறவு கிடைத்திராவிட்டால் வாழத் தெரியாதவரை முடித்து நான் சாகாமல் செத்திருப்பேன்.

இதற்கெல்லாம் முடிவு கட்டிய என் இதயத்து விளக்கே, நீங்கள் என்றும் நோயற்று நூறாண்டு காலம் வாழ வாழ்த்துக்கள். எனக்கு உலகமே நீங்கள் தான்! உங்கள் விருப்பு வெறுப்புக்களை அறிந்து நடப்பேன். நீங்கள் விரும்பாத ஒன்றை ஒரு நாளும் செய்ய மாட்டேன். உங்களைக் கேட்டுத்தான் எதனையும் செய்வேன்.

காலை, மாலை, பகல், இரவு என்று ஒவ்வொரு பொழுதிலும் உங்களை நினையாத நாளில்லை. உங்கள் நலத்துக்கு கடவுளை வேண்டாத நாள் இல்லை. என் இதயம் உங்களின் பெயரைச் சொல்லிச் சொல்லியே துடிக்கின்றது. நாம் இணையும் நாள் வெகுவிரைவில் வர இறைவன் உதவி புரிவானாக. உங்கள் தங்கையின் வாழ்வும் நிம்மதி நிறைந்த வாழ்வாக அமைய வாழ்த்துகிறேன்.

இன்னும் மூன்று மாதங்களுக்குள் தங்கையின் திருமணம். அதன் பிறகு நமது திருமணம் என்று சொன்னீர்களே! அக் கூற்றுக்கு பிறகு வேதனையான கட்டத்திலிருந்து விடுதலையாகி விட்டேன் என்ற நினைப்பு கவலையை கொன்று விட்டது. எனது சந்தோஷத்தை எழுத்திலும் வடித்தேன். அவ்வளவுதான்! நீங்களும் மகிழ்ந்திருப்பீர்கள். இத்துடன் முடித்து விடை பெறும்

உங்கள் வதனா.

இதனை படித்த சந்திரனுக்கு வதனா மீது மேலும் அன்பு, பற்று ஏற்பட்டது. பொறுத்ததுக்கு பொருத்தமானவளை கடவுள் தந்து விட்டார் என்று மகிழ்ந்து கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 08

இளம் மஞ்சல் நிறத்தில் தங்கை உமாவின் வீட்டுக்கு பெயின்ட் பண்ணி இருந்தான் சந்திரன்.

அதன் பிறகு வீடு கவர்ச்சியாகவும் அழகாகவும் இருந்தது. 'இப்போது வீட்டைப் பார்த்தால் மச்சான் ராஜகோபால் கூட சந்தோஷப் படுவார்' என்று நினைத்துக் கொண்டான் சந்திரன்.

சனிக்கிழமை விடுமுறையில் தந்தையையும் அழைத்துக் கொண்டு மாப்பிள்ளை ராஜகோபாலின் வீட்டுக்கு போவதென தீர்மானித்திருந்தான் சந்திரன். முன் கூட்டியே இதனை ராஜகோபாலுக்கு தெரியப்படுத்தி இருந்தான். ராஜகோபாலுக்கு தந்தை இல்லை. அம்மாதான் எல்லாம்.

திருமணத்துக்கு இன்னும் இரண்டு மாதங்கள்தான் இருந்தன!

''தம்பி சந்திரன்...நாம் முடிஞ்ச வரை இரண்டு மாதங்களுக்குள் திகதி குறிக்கனும். இழுபட்டு போக இனி விடக் கூடா. நம்மட எல்லா வேலையும் தானே முடிஞ்சிற்று'' என்றார் சந்திரனின் தந்தை மூர்த்தி.

''சரியப்பா... வாங்க போவோம்.'' என்றான் சந்திரன்.

இருவரும் ராஜகோபாலின் வீடு நோக்கி விரைந்ததார்கள். வருகையை எதிர்பார்த்திருந்த ராஜகோபாலின் தாயார் வெளிக் கதவை திறந்து விட்டார். உள்ளே சென்றார்கள். ராஜகோபால் இருக்கவில்லை.

''உட்காருங்க'' ராஜகோபாலின் தாயார் முகம் மலர கூறினார்.

''எங்க மகன்? அவரும் கதை பேச்சுக்கு இரிக்கனுமே'' என்றார் மூர்த்தி.

''இன்னா வந்திருவார். பக்கத்து கடைக்குத்தான் போனார்'' என்றாள் ராஜகோபாலின் தாயார். சிறிது நேரத்தில் ராஜகோபாலும் வந்து சேர்ந்தான்.

''ஆ... இருங்க '' என்று சொன்னவாறு தானும் அமர்ந்து கொண்டான் ராஜகோபால். அவனின் அம்மாவும் பக்கத்தில் நின்று கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நாம இனி பேசிப்பேசி இருக்கப் போறல்ல. கல்யாணத்தை செய்யனும். என்ன? சொல்லுங்க.'' என்றார் சந்திரனின் அப்பா மூர்த்தி.

''விஷயத்துக்கு வாங்க. எல்லா ஆயத்தமும் முடிஞ்சு தானே... எப்ப செய்வம்? '' என்று கேட்டாள் ராஜகோபாலின் அம்மா விசாலாட்சி.

''இரண்டு மாசம் கழிச்சு வாற பத்தாம் திதி சனிக் கிழமை. அன்று திருமணத்தை வைச்சுக்குவோம் '' என்றான் சந்திரன்.

இது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

''சரிதானே மதினி? ரெண்டு மாதம் கழிச்சு வாற ஏழாம் மாதம் பத்தாம் திகதி கல்யாணம் விளங்குதுதானே?'' சந்திரனின் தந்தை மூர்த்தி கேட்டார்.

''ஓ விளங்குது. சீதனம் ஐம்பதினாயிரம் சரிதானே...?'' ராஜகோபாலின் அம்மா விசாலாட்சி கேட்டாள்.

''நீங்க கேட்ட எல்லாம் சரி. வீட்டை கட்டிமுடிக்கச் சொன்னீங்க. முடிச்சம். பெயின்டும் பண்ணினன். காசு ஐம்பதினாயிரம் கேட்டீங்க. அதுவும் சரி. வாற கிழமை மச்சாண்ட கையிலே கொடுத்து மோதிரமும் போடுவோம். பெண்ணுக்கு நகை நட்டும் போட்டிருக்கம். வேறு என்னம்மா?'' என்று கேட்டான் சந்திரன்.

''வேற ஒன்டுமில்லே. மாப்பிள்ளையைக் கூட்டிக்கு போறதான் பாக்கி '' என்று நகைச் சுவையாகக் குறிப்பிட்டாள் விசாலாட்சி.

''அப்ப இனி வறப் போறம் '' என்றார் மூர்த்தி.

''இருங்க... இருங்க... டீ கொண்டு வாறன் '' என்று சொல்லி உள்ளே போனாள் விசாலாட்சி.

தட்டு நிறைய வாழைப்பழம், கேக், பிஸ்கட்டுடன் வந்தான் ராஜகோபால் சிறிது நேரத்தில் ஆவி பறக்கும் பால் தேனீருடன் வந்தாள் விசாலாட்சி. உண்டு, குடித்து விட்டு விடை பெற்று போய் விட்டார்கள்.

நாட்களின் நகர்வை யார்தான் நிறுத்தி விட முடியும்? முன்னரை விட மிக கலகலப்பாக காணப்பட்டாள் வதனா. சந்தோஷ மிகுதியினால் முகமே ஒரு கவர்ச்சியாக காணப்பட்டது.

15525



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரன் அலுவலக ஊழியர்களிடம் வெளிப்படையாகச் சொன்னான். ''நண்பர்களே... நான் வருஷக் கணக்கிலே திருமணம் செய்யாம இருந்த போது திருமணம் செய்யிறல்லியா என்று சில நண்பர்கள் கிண்டலாக கேட்டாங்க. இப்ப சொல்றன் மூணு மாசத்திலே திருமணம் நடக்கும். இன்னும் ரெண்டு மாசத்திலே தங்கையின் திருமணம். அதன் பிறகு எனது திருமணம். பெண்ணை உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்'' என்று கூறினான் சந்திரன்.

அப்போது முகத்தை கைகளால் மூடிக் கொண்டு சிரித்தாள் வதனா.

''துணிவுள்ளவன் சொல்ல வேண்டியது கடமை. முகத்தை மூடிச் சிரிக்கும் எழில் வதனா என் காதலி. விரைவில் என் மனைவி '' என்றான் சந்திரன்.

அவனது எதிரிகளுக்கு இது செருப்பால் அடித்தாற் போலிருந்தது. வதனாவை அடைய கற்பனை பண்ணியவனுக்கு தேள் கொட்டினாற் போலிருந்தது. சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் மௌனமாக இருந்தார்கள். வதனா ஆனந்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தாள்.

''எப்பவோ திருமணம் செஞ்சி பிள்ளையோட இரிக்க வேண்டியவ. முத்திப் பழுத்து இப்பதான் கல்யாணம் முடிக்கப் போறா. முத்தி கல்யாணம் முடிச்சவங்க எத்தனையோ பேர் பிள்ளை பெற ஏலாம செத்திருக்குகள். இவட வாழ்க்கையும் ஸுவர் இல்லே'' என்று நினைத்தான் வதனாவுக்கு கடிதம் வரைந்தவன்.

யார் என்ன நினைத்தாலும் இறைவன் என்ன நினைக்கிறானோ அதுதான் செயலாகும்!

முகாமையாளர் சந்திரனை அழைத்தார். புதிதாக வந்து சேர்ந்த முகாமையாளர் ஒரு முஸ்லிம். பெயர் இஸ்ஹாக். அவர் இங்கு வந்து நான்கு மாதங்கள் ஆகின்றன.

பய பக்தியோடு போய் நின்றான் சந்திரன்.

''உட்காரு தம்பி '' என்று கூறி முன்னால் இருந்த நாற்காலியை சுட்டிக் காட்டினார் முகாமையாளர். மெதுவாக அமர்ந்தான் சந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்னிடம் மட்டும் சொல்லல்லே. ஆனா... வாழ்க்கை ஆயிரம் காலத்து பயிர் என்பாங்க. இப்ப காலம் வேற. பஞ்சம் இல்லாத பண்டம் பெண்கள் தான்! எப்படிப் பட்ட அழகியையும் மணம் முடிக்கலாம்....'' என்று நிறுத்தினார் இஸ்ஹாக்.

மேலதிகாரி பேசுகிறார் என்பதற்காக எதுவும் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தான் சந்திரன். பீயூன் புத்தகம் ஒன்றுடன் வந்தான்.

''சரி நீ போ... சந்திரனோட கொஞ்சம் பேசிறன். அவங்களை வெளியே கொஞ்சம் நிற்கச் சொல்லுங்க '' என்றார் இஸ்ஹாக். மீண்டும் கதைக்க தொடங்கினார்.

''இந்தக் காலத்திலே பணம் முக்கியம். சீதனம் இல்லாம முடிக்கப் போற என்கிறாய். நல்லது. ஆனா... சீதனம் வேணும் தம்பி. இல்லாட்டா வாழ முடியா. பிறக்கிற புள்ளையளை படிப்பிக்க முடியா. எதுக்கும் பணம் அவசியம். கொஞ்சம் யோசிச்சி செய்யுங்க '' என்று அறிவுரை கூறினார் இஸ்ஹாக்.

''சேர்...! சீதனம் வாங்காமத்தான் முடிக்கப் போறன். சீதனம் வாங்கியவர்களை விட சிறப்பா வாழப் போறன். இருந்து பாருங்க நல்லவங்க எத்தனையோ பேர் வாழ்ந்திருக்காங்க. இது வருஷக் கணக்கிலே யோசிச்சு எடுத்த முடிவு. நான் போய் வேலையை கவனிக்கன் '' என்று கூறி தனது ஆசனத்தில் அமர்ந்து வேலைகளை கவனித்தான் சந்திரன்.

சரியான பிடிவாதக் காரனாக இருக்கிறான் என்று நினைத்துக் கொண்டார் முகாமையாளர் இஸ்ஹாக்.

சந்திரனுக்கு வேலையே ஓடவில்லை.

''புதிதாக வந்த முகாமையாளர் நல்லவர் என்றல்லவா எண்ணியிருந்தேன். வேளை தவறாமல் பள்ளி சென்று தொழுகின்றார். நீதி நியாயம் பேசுகிறார். தீயவற்றைப் பார்த்து கொதித்தெழுகிறார். அடிக்கடி போதனை செய்கிறார். உள்ளம் அல்லவா குள்ளமாக இருக்கின்றது. ஏழைப்பெண்ணுக்கு வாழ்வளிப்பதை எதிர்க்கும் தீயவர் என்பது தெரிந்துவிட்டதே, இவர்களெல்லாம் போலிகள். உலக மேடையில் நடிக்கும் சினிமா நட்சத்திரங்கள்'' என்றெண்ணினான் சந்திரன். அவன் முகாமையாளரைப்பற்றி வைத்திருந்த நல்லெண்ணம் காற்றில் கலந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI

காலை, தேனீர் அருந்தும் வேளை வந்தது. வதனா சாப்பிடுவதற்கு ஏதும் கொண்டுவந்திருக்கவேண்டும். சிற்றுண்டிச் சாலைக்குள் நுழையும்போது சந்திரனுக்கு வருமாறு சைகை கொடுத்தாள். காந்தம் போல பின்னால் சென்றான் சந்திரன். இனி யாரும் எதுவும் சொல்லமுடியாதே!

தேனீர் அருந்தியவர்கள் தங்கள் தங்கள் இருப்பிடங்களில் அமர்ந்து கடமைகளை செய்தார்கள்.

சந்திரனும் வதனாவும்தான் இருந்தார்கள் ''இந்தாங்க உங்களுக்கென்று செய்த செமன் கட்லட்'' என்று கூறி சந்திரனிடம் கொடுத்தாள் வதனா.

''ஆ... உங்க கைபட்டா என்ன ருசி, இதுபோல கட்லஸ் நான் தின்டதில்லையே! மனேஜர் மிச்சம் மிச்சம் பொல்லாத ஆளா இரிக்காரே'' என்று சொல்லி கதையை நிறுத்தினான் சந்திரன்.

'' நல்ல மனிசனா? நடிப்பு. எல்லாம் நடிப்பு. போலி வேஷங்கள். என்ன சொன்னார் தெரியுமா? ஏன் இப்படி கல்யாணம் முடிக்கப்போறாய். சீதனம் வாங்கி வேற இடத்தில் முடிச்சிருக்கலாமே! சீதனம் இல்லாம கல்யாணம் முடிச்சி கஷ்டப்படபோறாய் என்றார். நான் சொன்னேன் இப்பதான் உங்களைப்பத்தி தெரிஞ்சுகிட்டேன். நான் வாழ்ந்து காட்டுறன் என்று சவால்விட்டேன்'' என்றான் சந்திரன்.

''அப்படியா? நல்ல மனுஷன் என்றுதானே நினைத்திருந்தேன் நாகபாம்பு. பாதிப்பேர் வெளியே வேடம் போர்ராங்க. இனி நானும் அவரை மதிக்கமாட்டேன். நாம கல்யாணத்துக்கே சொல்லப்போடா'' என்றாள் வதனா.

இருவரும் வந்து அவரவர் ஆசனத்தில் அமர்ந்து கடமையை கவனித்தார்கள்.

●

''இப்ப என்ன சொல்றா செல்வராணி?'' மனைவி லட்சுமியிடம் கேட்டார் ராகவன்.

''அவ லேசுப்பட்ட ஆளில்லையாம். உத்தியோக காரன் என்று நடப்புக்காட்டுற அஞ்சு ஆறாயிரம் சம்பளம் எடுக்கிறவர்களையே அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிக்கமாட்டாவாம். ஒழுங்காக சாப்பிடவே போதாதாம். என்ன நடப்பு. கல்யாணம் முடிக்கமுன்ன உத்தியோககாரன் வெளிநாட்டுக்கு போய் வந்தவளை நெனைச்சும் பார்ப்பானா? சவூதியிலே அரபி ஒருத்தன் முடிக்க விரும்பினானாம்." என்றாள் லட்சுமி.

"அரபிக்காரனைப்பற்றி இவக்கு என்ன தெரியும்! தங்கி இருக்கிற வீட்டுக்காரன் இருபது முப்பதினாயிரத்துக்கு நகையை கொடுத்தா ஏமாந்திடுவா. திருமணம் முடிக்கன் இங்கேயே இரு என்பான் அரபி. நம்பிருவா. அரபிர பொண்டாட்டிக்கி தெரியாமத்தான் இவ வைப்பாட்டியா இருக்கணும். இரண்டு வருசம் போனா வேற ஆளை பார்ப்பான். இவ ஏமாந்து இலங்கைக்கு வருவா. அதுக்குப்பொறகுதான் தாய்நாட்டுட மவுசு தெரியும். பிச்சைக்காரனையாவது முடிக்க நெனப்பா" என்றான் ராகவன்

"செல்லமுத்துட மகன் சின்னையா அவவ பாத்து சிரிக்கானாம். இந்த சிரிப்பையெல்லாம் வேறு யாரிட்டையும் வெச்சுக்க. இனி என்வீட்டுக்கு முன்னுக்குவந்து பல்லைக் காட்டினா செருப்புத்தான் வரும் என்றாவாம்." என்றாள் லட்சுமி.

"அவன் இளம்பொடியன். இவட கிளுக்கு மிளுக்கப்பார்த்து சிரித்திருப்பான். சாரி உடுத்திருந்தவ சௌதிபோய் குட்டான் சட்டையோட நிப்பதைப்பார்த்து சிரித்திருப்பான். இல்லாட்டி வெளியே தெரியும் அரைகுறை அங்கங்களை பார்த்து ஏமாந்திருப்பான். அவதானே பொடியன்களுக்கு படங்காட்டுறாவாம். இளம் பொடியன்கள் பார்ப்பானுகள்தானே! அதுக்காக அவனுகள் கூட இவவை முடிக்கப்போறல்ல. மார்புக்கு சீலைத்துண்டுமில்லாம கௌனோட மட்டும் நிக்கிறா. புடைத்திருக்கிற தேங்காய் மார்புகளை பார்த்து ரசித்து சிரித்திருப்பானுகள். பெண்ணென்று அடக்கமா இருந்தா யாரும் பார்க்கப்போறல்லியே. இப்படியான பெண்களைக் கண்டால்தானே கற்பளிக்கிற எண்ணமும் வரும்." என்றான் ராகவன்.

"ஓம் இப்ப பெண்கள்தான் ஆண்களைக் கெடுக்கிறாங்க மறைக்கவேண்டியதைக்காட்டி போதையூட்டுறாங்க." என கணவரிடம் கூறினாள் லட்சுமி. கணவன் ராகவன் சும்மா இருப்பாரா?

"இப்ப பெண்கள்ள பாதிப்பேர் மிச்சம் மோசமான நடத்தை உள்ளவளாக இருக்காங்க. சின்னத்துரை எவ்வளவு வசதி உள்ளவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொண்டாட்டிக்கு எந்தக்குறையும் வைக்காதவன். அவனும் எந்த உடல் குறைபாடுகளும் இல்லாதவன். ஏழை முத்துலிங்கத்தின் அழகுமகள் ராணியோட இரகசியத்தொடர்பு வைத்து அவள் பிள்ளைபெற காரணமாகவும், இருந்தவன்தான் சின்னத்துரை இப்படிப்பட்ட கணவனை வைச்சுக்கொண்டு அவன் கொழும்புக்குப்போற நேரம் பக்கத்துவீட்டு அழகையாவை தன் படுக்கைக்கு அழைத்து காமப்பசி தீர்த்துக்கொள்வாள் சின்னத்துரையின் பொண்டாட்டி பவளம்.

''களவும் எத்தனை நாளைக்கு? அழகையாவோடு ஒருவருஷம் தொடர்பு வைத்திருப்பாள். மூன்று நாள் கழிச்சி வருவன் என்று கூறிச்சென்ற கணவன் சின்னத்துரை ரெண்டுநாள் முடிந்து ராவோடு ராவாக வந்துவிட்டான். இதை எதிர்பார்க்காத மனைவி பவளம் அன்றிரவும் பக்கத்துவீட்டு அழகையாவை படுக்கையறைக்கு அழைத்து கதவைப்பூட்டியிருந்தாள். சின்னத்துரை வந்து பார்த்தான். பவளம் ஒன்பது மணிக்கெல்லாம் படுக்கைக்கு செல்லமாட்டாளே! சுகமில்லையோ என்று நினைத்தான். கேத்தை ஓசை வராமல் திறந்திருக்கிறான். வெளியே வாலிபன் ஒருவனின் பாதணி தென்பட்டது. இரவு ஒன்பது மணிக்குப்பிறகு யாருக்கு இங்க என்ன வேலை என்று நெனச்சான் சின்ன துரை. படுக்க அறையில் மின்சாரம் எரிந்தது. மனைவி பவளம் மீது சந்தேகம் அவனுக்கு ஏற்பட்டது. வெளிப்புறமாக வந்து படுக்கையறை அருகே நின்றான். மனைவி பவளமும் ஒரு வாலிபனும் உள்ளே இருந்து பேசுவதும் சிரித்து கும்மாளம் இடுவதும் கேட்டது.

''சிறிது நேரம் மௌனம். கட்டில் சத்தம்கேட்டது அதற்குமேல் நின்றுகொண்டிருக்க சின்னதுரையால் முடியவில்லை."

பொல்லை எடுத்து கண்ணாடி ஜன்னலை சின்னதுரை உடைத்தான். உள்ளே அவனது மனைவியை கட்டியணைத்து முத்தமிட்டுக்கொண்டிருந்தான் அழகையா. ''அடியே! வேசை. எனக்கு மனைவியா நெடுக நடிச்சி இருக்கலாம் என்டா நெனச்சாய்? என்று கூறிய சின்னத்துரை முன்புறம் வந்து உடைச்சி கதவை திறந்தான். பின்புறம் கதவை திறந்து மதிலால் ஏறி ஓடினான் அழகையா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்துரை அவண்ட பொருட்களை அள்ளிக்கொண்டு அன்று போனவன்தான்; மனவியை டிவோஸ் பண்ணி மறுநாளே ஏழைப் பெண்ணொருத்தியை முடிச்சி சந்தோஷமாக ஆயுள்வரை வாழ்ந்து மறைந்தான். இப்ப பிச்சை எடுத்து திரிகிறாளே அவள்தான் அந்த பவளம் ''என்று கூறினான் ராகவன்.

தனது மகள் வதனா வேலை முடிந்து வந்துகொண்டிருந்ததினால் இருவரும் உரையாடலுக்கு ஓய்வு கொடுத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 09

சந்திரனின் தங்கை உமாவின் திருமணத்துக்கு இன்னும் ஒருமாதம்தான் இருந்தது! அதற்குரிய ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

வயதுவந்த ஒருபெண்ணுக்கு திருமணம் நிச்சயமாக்கப்பட்டால் அந்த பெண்ணின் பெற்றோருக்கே அதிக சந்தோஷம் இருக்கமுடியும்! அதைவிட சந்தோஷம் அண்ணன் சந்திரனுக்கு! தங்கையின் திருமணம் முடிந்தபின் அடுத்தமாதம் தனது திருமணம். சந்தோஷம் இருக்காதா.?

உமா சந்தோஷத்தினால் இரண்டு மாதங்களுக்குள் கொழுத்துவிட்டாள். கன்னத்தில் சதைவேறு பிடித்திருந்தது. உமாவும் கவர்ச்சியுள்ள பெண்ணாகி தெரிந்தாள்.

வேலை முடிந்து வீட்டுக்கு வந்த சந்திரன் நேராக அம்மா மலர்விழியிடம் ''வேறு என்ன செய்யனும் அம்மா'' என்று கேட்டான்.

''எல்லாம் சரி சந்திரன் இந்த ஜனங்களை நம்ப முடியா. எத்தனை கல்யாணம் எழுத்தின்போது பிரிஞ்சிருக்கு. அப்படியான நஞ்சுமரங்கள் நிறைஞ்சிருக்கு. ஜாக்கிரதையா இரிக்கணும் நாம. யாருக்கிட்டேயும் கதைக்கிறதை கவனமா கதைக்கனும். ஒன்றை பத்தாக்கி சொல்லுவாங்க'' என்றாள் தாய் மலர்விழி.

''அதென்டா உண்மைதான் அம்மா. அப்படியான கால கட்டத்திலே பொறந்திட்டம். என்ன செய்யிற? கல்யாணத்துக்கு கேக், பழம், பெட்டீஸ் இவற்றுடன் ரிங்ஸ் கலந்துகுடுத்தா சரிதனே அம்மா'' சுந்தரம் கேட்டாள்.

''அது போதும். அதுவும் கொடுக்காட்டா சரியில்லே. தோரணம் சருகையென்று செலவளித்தது போதும். அதுக்கெல்லாம் காசை கரியாக்காதே. வீண் செலவு. பிரயோசனமில்லாத வேலை'' என்றாள் மலர்விழி.

''வாற என் பிரன்ஸ்மார் என்னை ஒரு மாரியா நெனப்பார்களே.. வெளிக்கேற்றுப் பக்கம் கல்யாணத்துக்கு கிட்டே தோரணம் அமைச்சு இருபது முப்பது லைட் பூட்டணும். அவ்வளவுதான்'' என்றான் சந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அதுவும் சரிதான். டீ கொண்டுவாறன்'' என்று கூறி சமையலறைக்குள் புகுந்தாள் மலர்விழி.

சந்திரன் உடைமாற்றினான்.

●

''வீட்டுக்கு வந்து சேரமுதல் பல்லைகாட்டுற. பல்லும் எல்லாமில்லையே! என்ன விஷயம்? என் பொண்டாட்டி சிரிச்சா ஏதும் இருக்கும்'' என்றான் வதனாவின் அப்பா ராகவன்.

''நீங்க சொன்னதெல்லாம் சரியப்பா! நீங்க சொன்ன படியே எல்லாம் நடக்குது. உங்கட அறிவு முதிர்ச்சி வழுக்கத்தலையிலே தெரியுதே'' என்றாள் ராகவனின் மனைவி லட்சுமி.

''லட்சுமி பகிடியைவிட்டுப்போட்டு விஷயத்தை சொல்லுடி'' சற்று அழுத்தமாக சொன்னார் ராகவன். மகள் வதனா வீட்டில் இல்லாவிட்டால் இருவரின் உரையாடலும் சுவாரஸ்யமாக இருக்கும்.

''வெளிநாடு போய்வந்த மேனாமினுக்கி செல்வராணிர இப்ப நிலை என்ன தெரியுமா? ரெண்டு மாசத்துக்குள்ள நீங்க சொன்னநிலைக்கு வந்திற்றா. இப்ப நடப்பு, செண்டுவாசம், விதவிதமான உடுப்பு எல்லாம் பெயித்து. திரும்ப வெளியே போறத்துக்கு காசில்லாம சாமானையும் உடுப்புகளையும் வித்திருக்கா. அதுவும் போதாமபோக முந்திகேட்ட ஆட்களிட்டே கேட்டிருக்கா. மனிசன் எண்டு மதிச்சு நடக்க தெரியல்லே. உனக்கு காசா? வெளிநாட்டுக்கு போய் கஷ்டப்பட்டு ரெண்டுசாமானும் நாலுகாசும் சம்பாதிச்சுக்கு வந்தா கண்தெரியாம நடக்கிறதா? இனி இஞ்ச வராதே எண்டு ஏசி இருக்காங்க. போறதுக்கு வழியில்லாம செல்வராணி வெறும் ராணியா இருக்கா. மிச்சம் கவலையோட இரிக்கா. கூத்து வளவளத்த மூச்சு எல்லாம் முடிஞ்சி'' என்று கூறினாள் லட்சுமி.

''லட்சுமி இதெல்லாம் ஆட்கள்ட நடத்தையை பார்த்தா சொல்லலாம்தானே! வெளிநாட்டுக்கு போய் முன்னேறியவங்க ரெண்டொரு பேர்தான். மத்ததெல்லாம் சீரழியிற கேஸ்தான். வெளிநாட்டுக்கு போன அனேக பெண்கள் கணவன் பிள்ளையென்று சேர்ந்து வாழ்றாங்களா? வாழ்க்கையை பத்திய எண்ணமே இல்லாம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரிக்கு. ஆளுக்கொரு பக்கம் மேஞ்சி திரியிறாங்க. இப்பவும் வெள்ளைக்காரி போலயா உடுத்திருக்கா? " சொல்லி விட்டு கேட்டார்.

''இப்ப சாரிதான் உடுத்திருக்கா. கழுத்திலே கையிலே நகை ஒன்டும் இல்லே! பளபளக்கிற மணிதான் கழுத்திலே போட்டிருக்கிறா " என்றாள் லட்சுமி.

''வாழத்தெரிஞ்சவன் நம்ம தாய் நாட்டிலே ஏதாவது செய்து வாழ்வான். வாழத்தெரியாதவங்க எங்க போயும. உருப்பட போறல்லே. நமக்கு இனி அவள்ள கதை தேவல்லே. அடுத்த மாசம் சந்திரனின் தங்கச்சிக்கு கல்யாணமாம். அடுத்தது நம்முட புள்ளட கல்யாணம்தான்" என்று சொல்லி சந்தோஷப் பட்டார் ராகவன்.

''எப்படியோ சந்திரன் வதனாவை விரும்பினதாலே தப்பிற்றீங்க. இல்லாட்டி நாம சந்தோஷப் பட முடியுமா?" என்றாள் லட்சுமி.

''பேப்பர் படிக்கப் போறன். தேனீர் கொஞ்சம் தாங்க. புதினம் இருந்தா வாசிச்சி சொல்றன் " என்றார் ராகவன்.

சிறிது நேரத்திலே ஆவி பறக்கும் தேனீருடன் வந்தாள் லட்சுமி. ராகவன் வாங்கிக் கொண்டான். அவருக்கு தேனீரில் இருக்கும் விருப்பம் உணவில் இல்லையென்று சொல்லலாம். மடக் மடக்கென குடித்தார்.

''பேப்பரிலே ரெண்டு பக்கம் படமும் விளம்பரமும் தான் போட்டிருக்கானுகள். பணக்காரனுகள் விளம்பரத்துக்கு காசு கொடுப்பதாலே செய்திகளும் இல்லாம போகின்றன. அரசியல் வாதிகள் கட்சி மாறுவது பெஷனாகிற்று. தன்ர கட்சி தோத்தா வெண்ட கட்சியிலே சேர்ரானுகள். அப்பதானே மந்திரி பதவி கிடைக்கும். தோற்ற கட்சியிலே இருந்தா அதிகாரமில்லாத எம். பி பதவியோட பின் வரிசையில் இருக்க வேண்டியுதுதானே! பொது நலத்தை விட சுய நலத்தைத் தானே விரும்புறானுகள் " என்றார் ராகவன்.

''பேப்பரை படிச்சி விஷயங்களை சொல்லுங்க'' என்றாள் ராகவனின் மனைவி லட்சுமி.

''பேப்பரை அப்படியே படிச்சா உனக்கு சில விஷயம் விளங்க மாட்டா என்டுதானே படிச்சி விளக்கத்தை மட்டும் சொல்றன். அரசாங்கமும் புலியும் பேச்சுவார்த்தையில் இறங்கப் போகுதாம். லட்சுமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ என்ன நெனைக்கிறாய்? சொல்லிவிட்டு கேட்டார் ராகவன்.

''அரசாங்கமும் புலியும் பேச்சுவார்த்தையில் இறங்கினால் நான் சொல்வதுக்கு என்ன இரிக்கி? '' என்று கேட்டாள் லட்சுமி.

''ஏ...மண்டு! அரசும் புலியும் எத்தனையோ முறை பேச்சுவார்த்தையில் ஈடு பட்டாங்க. முடிவு தோல்வி. யுத்தம் தொடர்கதை. இந்த முறை பேச்சுவார்த்தையாவது தோல்வியில் முடியாம வெற்றியில் முடிஞ்சா எவ்வளவு நல்லா இரிக்கும். நாடு முன்னேறும். மீண்டும் ஒரு முறை யாழ்ப்பாணத்துக்கு போய் பார்க்க ஆசை.'' என்றார் ராகவன்.

''உங்களுக்கு எல்லாத்துக்கும் ஆசைதான்'' என்றாள் லட்சுமி.

''ஐம்பதிலும் ஆசை வரும். தெரியாதா? அந்த.... நேரம் இன்னும் உனக்கு ஆசை வரும். எனக்கும் வரும். இந்த வயசிலும் நாம...'' என்றார் ராகவன்.

''ஐயோ... மகள் வாற நேரமாகுது. தேவை இல்லாத கதை கதைக்காதீங்க'' என்றாள் லட்சுமி.

''நான் உண்மையைச் சொன்னன். அதிருக்கட்டும். இன்னொரு செய்தி இரிக்கு. சொல்றதுக்கே வெட்கமா இரிக்கி. இவனுகளெல்லாம் என்ன தகப்பன்மார்? பெற்ற பிள்ளைகளிடமே உடற் பசியை தீர்த்துக் கொண்ட மனித மிருகங்கள். மனிதனுக்கும் மிருகத்துக்கும் என்ன வித்தியாசம்? இப்படியானவனுகளை விடப் போடா. ஆயுள் கால சிறையிலே போடனும்.'' பாவம் பதினாறு வயது குமர்! பச்சைப் பயிரை அழிச்சுப் போட்டானே! இப்படி மிருகத்தனமான செய்திகள்தானே இந்த நாளிலே அதிகமா வருது. இதைப் பார்த்த உடனே எனக்கே அவனை கொல்லனும் போல இருக்கு. பேப்பர் பார்த்தது போதும்'' என்று கூறி பத்திரிகையை சுருட்டி நாற்காலியில் போட்டு விட்டு சுருட்டை பற்ற வைத்தார் ராகவன்.

●

சந்திரனும் வதனாவும் திருமணம் செய்து கொள்ளப் போகிற விடயம் எல்லோருக்கும் தெரிந்த பின் இருவரும் மிக நெருக்கமாக பழக முனைந்தனர். எவரும் எதுவும் சொல்ல முடியாதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரன் ஏழையான வதனாவை திருமணம் செய்யப் போகும் விடயம் அறிந்து, முகாமையாளர் இஸ்ஹாக் அதற்கு எதிர்ப்புக் காட்டிய பின் அவருடன் உரையாடுவதை குறைத்துக் கொண்டான் சந்திரன். நல்லவர் போல வேடமிட்டாலும் நச்சுப்பாம்பு இதயம் கொண்டவர் அவர்.

''இப்போதெல்லாம் சந்திரனும் வதனாவும் ஒன்றாகவே சிற்றுண்டிக்கு செல்வார்கள். ஒரு சில கண்களுக்கு இது வருத்தமாக இருக்கும். நல்ல உள்ளங்களுக்கு இந்த உறவு பொருத்தமாக இருக்கும். யார் என்ன நினைத்தாலும் சந்திரனுக்கும் வதனாவுக்கும் அதைப்பற்றி கவலையில்லை!

''என்ன வதனா... டீ குடிக்கிறல்லியா? " என்று கேட்பான் சந்திரன். அப்போது பிளாஸ்கையும் சிற்றுண்டியையும் எடுத்துக் கொண்டு சந்திரனோடு சிற்றுண்டிக்கு செல்வாள்.

இன்னும் சில மாதங்களுக்குள் திருமணம் செய்து கொள்ளப் போகும் சந்திரனை தற்போதும் கணவனாக நினைத்து நடக்க வேண்டியது முறையான செயல்தான்! சந்திரனுக்கும் சேர்த்து சிற்றுண்டிகள் கொண்டு வருவாள் வதனா. அத்துடன் மிக பணிவாகவும் நடப்பாள். இருவரும் அமர்ந்து சிற்றுண்டி சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது சக ஊழியர் சிவராஜா வந்தான்.

''இனி எங்கே எங்களை கவனிக்கப் போறீங்க. பரவாயில்லை! நீங்க நல்லா இருந்தா சரிதான்! கல்யாணத்துக்காவது சாப்பாடு போடாம விட்டுராதீங்க" என்றான் சிவராஜா.

''கல்யாணத்துக்கு பிறகாவது சாப்பாடு போடுவம்" என்றாள் வதனா.

''நான் இன்னும் நிற்கிறது உங்களுக்கு டிஸ்டொப்பாக இரிக்கும். நான் போறன். பேசி பேசி சாப்புடுங்க" கிண்டலாக சொல்லி விட்டு போனான் சிவராஜா. நாணிக் கோணினாள் வதனா. சிரித்துக் கொண்டான் சந்திரன். இரு உள்ளங்களுக்கிடையில் உறவு உணர்வுகளை மதித்து தொடரப் படுமானால் அங்கு பிரிவிற்கு இடமில்லை. என்பதற்கு சந்திரன் வதனா உறவு சான்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உங்களுக்கு என்ன கறிவகை பிடிக்கும்?'' கேட்டாள் வதனா.

''உங்க கை பட்டால் எல்லா கறியும் சுவைக்கும். எனக்கு விருப்பம் இறால், சிறு கடல் மீன்கள், குளத்து சள்ளல், விரால் மரக்கறியென்டு கோவா, கரட், தக்காளி இதுகளை இப்ப அறிந்து கொள்றதும் நல்லதுதான்'' என்றான் சந்திரன்.

''என்ன எழும்புறீங்க? இன்னொரு கட்லீஸ் சாப்பிடுங்களன்'' என்றாள் வதனா.

''பகலுக்கு நான் சாப்பிடக் கூடா என்று விரும்புறீங்களா?'' கேட்டான் சந்திரன்.

''அப்ப... போங்க.'' என்றாள் வதனா. அலுவலகத்தை சுற்றி வந்த முகாமையாளர் இஸ்ஹாக் வதனாவும் சந்திரனும் உரையாடி சிற்றுண்டி அருந்துவதை உற்று பார்த்து விட்டு ஏதும் பேசாமல் போய் விட்டார். சந்திரன் வதனாவுக்கு கண்ணைக் காட்டினான். சிறிது நேரம் இருவரும் பேசவில்லை.

''நல்லவர் வேடம் போடும் நரிகள் என்று நாடகம் ஒன்று எழுதலாம். நல்லா இரிக்கும். நம்மட வேலையை நாம முடிச்சிற்று போக வேண்டியதுதான். அவரிட்ட எந்த கதையும் தேவல்ல.'' என்றாள் வதனா. அதனை ஏற்று தலையாட்டிக் கொண்டான் சந்திரன்.

இருவரும் வந்து அவரவர் வேலையை ஆரம்பித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 10

காலை நேர இளங்காற்று மேனியை தழுவிச் சென்றது. காகங்கள் ஆரோகனத்தில் இசை எழுப்பின. தூங்குகின்றவர்களை எழுப்புவதில் காகங்கள் பெரும் பங்கு பெறுகின்றன.

சந்திரனின் தங்கை உமா விழித்தாலும் படுக்கையை விட்டெழவில்லை. குளிர்காற்றுக்கு இழுத்து போர்த்திக் கொண்டாள். எண்ணங்கள் விரிந்தன.

''என் அண்ணன் எவ்வளவு நல்லவர். சிலர் இருக்கிறாங்க. தொழில் கிடைச்சா திருமணம் செஞ்சிடுவாங்க. சகோதரிகள் கண்ணீரில் மிதப்பாங்க. தகப்பன் தொழில் செய்ய ஏலாத ஆளாக இருந்தா சாப்பாட்டுக்கே கஷ்டப்பட வேண்டிய நிலையில் இரிப்பாங்க. என் திருமணத்துக்காக எவ்வளவு கஷ்டப்பட்டார். கஷ்டப்படுகிறார். என் திருமணத்துக்கு பின்னர்தான் அவர் திருமணம் செய்வதாகவும் இரிக்கிறார். என் அண்ணனுக்கு சந்தோஷ வாழ்க்கையை கடவுள்தான் கொடுக்கனும்.

பாக்கியவதி டீச்சர் இவ்வளவு காலமும் திருமணம் செய்யாம இரிப்பதற்கு அவட அண்ணன் தான் காரணம். அவன் உத்தியோகம் கெடைச்சவுடன் திருமணம் செஞ்சிக்கு பெய்த்தான். போனதோட நிக்காம அம்மா பெயரிலே இருந்த மூனு ஏக்கர் காணியையும் அம்மாவை பயம் காட்டி எழுதி வாங்கிட்டான். அதனால இன்று வரை வாழ்க்கைப் பட முடியாம கண்ணீரில் காலம் தள்ளுறா பாக்கியவதி டீச்சர்.

அந்த மூன்று ஏக்கர் காணியாவது இரிக்கும் என்டா யாரும் மாஸ்டராவது மணம் முடிச்சி இரிப்பான். அவள்ட கண்ணீர் அவர்ர வாழ்க்கையை என்றைக்காவது பாதிக்கும். இப்படியான அண்ணன்மாரும் இரிக்கானுகள். என்ர அண்ணன் தங்கம்.

அப்பா தொழில் செய்ய ஏலாம வீட்டிலே இரிக்ககுள்ளே நெனச்சேன். நானும் பாக்கியவதி டீச்சர் போல் இரிக்க வரும் என்டு. ஆனா... அண்ணன் அமைஞ்சதாலே தப்பினேன். ''பாக்கியவதி டீச்சர் கூலி வேலை செய்யிறவனை மணம் முடிச்சி கஷ்டப்படுறதை விட அவட நெலைக்கு சும்மா இரிக்கிறதுதான் சரி '' எனப் பல உமா எண்ணிக் கொண்டிருக்கும் வேளை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''படுத்துக்கு என்ன யோசிக்கிறாய்? யோசிக்க வேண்டிய காலம் பெயித்து. இனி உன்ட சந்தோஷமான காலம். எண்ணி பதினைந்து நாள் தானே இரிக்கு உன் திருமணத்துக்கு. எழும்பு. வேலை கிடக்கு'' என்றாள் உமாவின் தாயார் மலர்விழி.

கைகளை உதறி விட்டு எழுந்தாள் உமா. ஒரு வீடு சில வாரங்களுக்குள் கல்யாண வீடாகப் போகின்றதென்றால் நாற்பது வயதுக்கும் ஐம்பது வயதுக்கும் உட்பட்ட பெண்கள் அங்கு போய் பார்ப்பதும் துருவித் துருவி ஆராய்வதும் தங்கள் எண்ணத்தை எடுத்துச் சொல்வதும் ஒரு மரபாகி விட்டது.

ஒரு மாது உமாவை நாடினாள். ''உன்னை முடிக்கப் போற மாப்பிள்ளை என்ன தொழில் பார்க்கிறார்.'' அம்மாது கேட்டாள்.

''ஆசிரியர்'' என்று மட்டும் சொன்னாள் உமா.

''அப்ப என்ன! நீ அதிர்ஷ்ட காரிதான். பொறுத்தத்தையும் பொறுத்து உத்தியோக காரனை முடிக்கப் போறியே! நல்லா இரும்மா'' என்று வாழ்த்தி விட்டு சென்றாள் அம்மாது.

இரண்டு நாட்களின் பின்னர்தான் தெரிய வந்தது. அப்படிச் சொன்ன அதே பெண் மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்று ''சீதனம் குறைய தரும் இடத்திலே ஏன் தம்பி முடிக்கப் போறே'' என்று கேட்டிருக்கிறாள். இப்படி இரட்டை வேடம் போடும் பெண்களும், ஆண்களும் நிறைய பேர் இருக்கிறார்கள்.

மாப்பிள்ளை ராஜகோபால் நல்ல பதில் கொடுத்திருக்கிறான். ''இது என்ர சொந்த விஷயம்'' என்றிருக்கிறான்.

இதையெல்லாம் நினைத்து பார்த்து பெருமூச்சு விட்டாள் உமா.

''சந்தோஷமாக இரிக்க வேண்டிய நீ ஏண்டி பெருமூச்சு விடுற?'' தாய் மலர்விழி கேட்டாள்.

''கல்யாணத்தை தடை பண்ணத்தான் மாப்பிள்ளை வீட்டுக்கு போய் சொல்றாங்க. அதைத்தான் நெனைச்சு பார்த்தன்.'' என்றாள் உமா.

''கடவுள் முடிவு கட்டினார். உனக்கும் அந்தப் பொடியனுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY KALMUNAI

கல்யாணம் நடந்தே தீரும். கவலையை விடு. ஒவ்வொரு வேலையா முடிக்கனுமே! கதவு ஜன்னலுக்கு சீலையை தைச்சி போடு" என்றாள் அம்மா மலர்விழி.

"ஓமம்மா. தைச்சி போட்டிட்டு முன்னுக்கு பூக்கண்டை அழகு படுத்தனும் " என்றாள் உமா.

அம்மா, மகள், தந்தை என்று ஆளுக்கொரு வேலையை செய்து கொண்டு வந்தார்கள். வீடு கவர்ச்சியாக தெரிந்தது. வாழ்க்கையை ஆரம்பிக்க முதல் இளம் பெண்ணுக்கு எதை எண்ணினாலும் கற்பனை வளரத்தானே செய்யும்! உமா விதி விலக்கல்லவே!

செய்கின்ற வேலை சொற்பம். நினைவுகள் நீண்ட தூரம் போய் விடும். மாலை நேரம் நெருங்க முதல் சந்திரனும் வந்து சேர்ந்தான்.

கைநிறைய பொதிகள். என்னவாக இருக்கும் என்று கற்பனை பண்ணினாள் உமா. சந்திரன் இப்போதெல்லாம் வரும் போது பொதிகளும் சுமைகளுமாகவே வருவான். தங்கையின் வாழ்வுக்காக சிரமத்தை ஏற்ற அண்ணன் என்று அவனை சொல்லலாம்.

பொதி பிரிக்கப் பட்டது. கல்யாணத்தன்று உமா அணிவதற்காக அழகிய சாரி உடுதுணிகள் வாங்கி வந்திருந்தான். அம்மா அப்பாவுக்கு வேறாகவும் உடை எடுத்து வந்திருந்தான்.

"என்ன மகன். எல்லாருக்கும் உடுப்பு வாங்கிற்றாய். உனக்கு வாங்கலியா? " தந்தை மூர்த்திதான் கேட்டார்.

"கல்யாணத்துக்கு இன்னும் ஏழு நாட்கள் இரிக்குத்தானே. அதுக்குள்ள வாங்குவன்." என்றான் சந்திரன்.

சந்திரனை நான்கு பேர்கள் நல்லவன் என்று சொன்னாலும் கெட்டவன் என்று சொல்கின்ற தீயவர்களும் உலகில் உண்டு. அவனது ஊரவர்களை பொறுத்தவரை பலர் அவனை தீயவன் என்றே சொல்கிறார்கள்.

சீதனம் பெற்று உயர்ந்த இடத்தில் அடிமையாகி வாழவில்லை என்ற கோபமா? மற்றவர்களைப் போல் குடியும் கும்மாளமும் என்று தெரு வழியே திரியவில்லை என்ற கோபமா? அல்லது கௌரவமாக இருக்காது காட்டுமிராண்டி போல பழகவில்லை என்ற கோபமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களிடம் வீணாக பேசி சண்டை சச்சரவு செய்யவில்லை என்ற கோபமா? அல்லது படித்து பட்டம் பெற்று பணி புரிகிறான் என்ற பொறாமையா? இதில் எதுவாகவும் இருக்கலாம்.

அவன் யாருக்கும் எந்த அநியாயமும் செய்தவனில்லையே! எந்த கெட்ட பழக்கத்திற்கும் அடிமையாக நடந்தவனில்லையே! அப்படி இருக்கும் போது சந்திரனோடு கோபப்படுவதற்கு முக்கிய காரணம் பொறாமை என்பது எல்லோருக்கும் தெரிந்த கதை!

சந்திரன் இதைப்பற்றி சிறிதும் கவலைப் படுவதில்லை. வேலை முடிந்தால் வீடு. ஏதாவது தேவையென்றால் மட்டும் சிறிது நேரம் வெளியே போய் வருவான். ஒரு சில நண்பர்களின் உறவு இவ்வளவுதான் சந்திரனின் நாட்கள் நகர்வின் செயற்பாடுகள்.

அதிகம் பேரின் உறவு இல்லா விட்டாலும் வாழ்க்கைக்கு பலமான அத்திவாரத்தை இட்டுக் கொண்டான் அவன்.

மாப்பிள்ளையின் உறவினர்கள் பெண்ணுக்கு கூறை, நகை நட்டு எடுத்துக் கொண்டு இன்றிரவு வருவதாக தூது அனுப்பி இருந்தார்கள்.

அவர்களுக்கு தீண்பண்டங்களும், பழ வகைகளும் கொண்டு வந்தான் சந்திரன்.

உமா அலங்கரிக்கப் பட்டாள். அழகு தேவதையோ என அங்கலாய்க்கும் வண்ணம் தோன்றினாள். அண்ணன் சந்திரனே உமாவின் அழகை புகழ்ந்தான்.

''இப்படி அழகான தங்கையை எவன்தான் திருமணம் செய்ய விரும்பாமல் இரிப்பான்'' என்றான். இரவு எட்டு மணியாகியது. அலங்கரிக்கப்பட்ட மின்சார பல்புகளை ஒளிர விட்டான். கண்ணை பறித்தது. வீடு அழகுக் கோலம் காட்டியது.

வீட்டுக்கு முன்புறம் வான் ஒன்று நிறுத்தப் படும் ஓசை கேட்டது. மாப்பிள்ளை வீட்டார் பெட்டி, பார்சலுடன் வந்து கொண்டிருந்தார்கள். மாப்பிள்ளையின் அம்மா விசாலாட்சியும் அவர்களோடு இருந்தாள்.

சந்திரனும் அவனது அம்மா அப்பா உறவினர்கள் மாப்பிள்ளை வீட்டாரை வரவேற்று உட்கார வைத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ர... மகன் இந்த கல்யாணத்தை முடிச்ச பொறகுதான் நிம்மதி. அதுக்குப் பிறகு செத்தாலும் பரவாயில்லை. திருமணம் செய்யிறல்லே என்டவனல்லவா! சந்திரன் வந்து அடிக்கடி கதைச்சதாலே இணங்கிற்றான் " என்றாள் விசாலாட்சி.

''அது போலதான் எனக்கும். என்ர மகள்ர கல்யாணம முடிஞ்ச பொறகுதான் எனக்கு சந்தோஷம்" என்றாள் மலர்விழி."

''ஒரு கிழமையிலே எல்லாருக்கும் சந்தோஷம்தான். எல்லரையும் விட சந்தோஷம் உமாவுக்கும் ராஜகோபாலுக்கும் " என்றான் சந்திரன்.

வீட்டுக்குள் அலங்கரித்திருந்த உமா வெளியே வர நாணிக் கோணினாள்.

''உமா வாம்மா" தந்தை மூர்த்தி அழைப்புக் கொடுத்தார். முகத்தை கவிழ்த்த படி வந்து நின்றாள் உமா.

''இதிலே உட்காரும்மா" என்று நாற்காலி ஒன்றை சுட்டிக் காட்டினார் தந்தை மூர்த்தி. மெதுவாக அமர்ந்தாள் உமா.

''அழகு ராணியல்லவா என் மருமகள். நீ நல்லா இரிம்மா. சந்தோஷமாக வாழுங்க. ராஜகோபால் ஊதாரித்தனமா செலவு செய்யப் போவான். இனி அதுக்கெல்லாம் விடக் கூடா. நான் சொன்னா... கேட்கமாட்டான். இனி நீ சொல்லி திருத்தும்மா" என்றாள் ராஜகோபாலின் அம்மா விசாலாட்சி.

வந்தவர்களில் ஒருமாது உமாவின் இருவிரல்களிலும் மோதிரம் போட்டாள். கையில் இரு காப்புகள் போட்டாள். பெட்டி நிறைய ஆடை அணிகள் இருந்தன. சென்ட், பவுடர், சோப், கிறீம், என வாசனைத் திரவியங்களும் நிறைய இருந்தன.

ராஜகோபாலின் சகோதரி முறையாம். உமாவை கிண்டலால் உரித்தாள். உமா முகத்தை கைகளால் மூடினாள்.

''அழகு ராணியே! பளபளக்க இருக்கும் பட்டுப் பூச்சியே உன்னை பந்தாட வருவானடி. இரு கண்களிலும் தருவானடி. பூப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல மேனியெல்லாம் புண்ணாக வைப்பாண்டி." என்றாள் ராஜகோபாலின் சகோதரி முறையுள்ளவள்.

''வாற ஞாயிறு இருள் படும் வரை இருக்காம பின்னேரம் நாலு மணிக்கெல்லாம் மாப்பிள கூட்ட வந்திரனும். சுணங்கப் போடா. நாலு பேர் வருவாங்க. குடிக்க தின்க குறையில்லாம கொண்டரனும் " என்றாள் விசாலாட்சி.

''எத்தனை ஆயிரம் பேர் வந்தாலும் நாங்க சப்ளை பண்ணுறம். பயப்படாதீங்க" என்றான் சந்திரன்.

ஊர் ஜனங்கள்ட வதந்திகளை ஒரு நாளும் நம்பாதீங்க. யாரு என்ன சொன்னாலும் கல்யாணத்தை முடிச்சி வைக்கிற என்ற முடிவோடு இரிங்க. தைரியம் வேணும்" என்றார் சந்திரனின் அப்பா மூர்த்தி. அதை ஏற்றுக் கொண்டாள் விசாலாட்சி.

அவள் தனது மருமகளாக வரவிருக்கும் உமாவை அணைத்து முத்தமிட்டுக் கொண்டாள்.

உமா எல்லோருக்கும் சிற்றுண்டிகளை எடுத்து பரி மாறினாள். சூடான பால் தேனீரும் கொடுத்தாள். சந்தோஷமாக எல்லோரும் கலைந்து சென்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 11

உமா உருண்டு புரண்டாள். தூக்கம் வரவில்லை. தனிமையில் கடைசி நாள் உறக்கம். அடுத்த நாள் கணவனோட உறக்கம் கொள்ளப் போவதை நினைத்து களிப்புற்று தூக்கத்தை தூர விட்டுடிருந்தாள். நினைவுகளுக்கு ஏது அணை?

இன்பமான காரியம் நிகழப் போவதை நினைத்தாலும் மகிழ்ச்சி தூக்கத்தை சற்று தள்ளி வைக்கும். இந்நிலைக்கு உட்பட்டிருந்தாள் உமா.

''ஐயோ... நெனைச்சாலே எனக்கு வெட்கமா இரிக்கு. அவரோட அவருக்கு பக்கத்திலே எப்படி இரிப்பேன்? ஒரு கட்டிலிலே ரெண்டு பேரும் உறங்கனுமே...! அதை நெனைச்சாலே கூச்சமா இரிக்கு. ரெண்டு மூனு நாள் போனா... சரி வெட்கம் போயிரும் அது வரை ஐயோ...'' என உமாவின் மனம் நினைத்துக் கொண்டது.

எந்நேரம் உறங்கினாள் என்பது அவளுக்கே தெரியாது. கண்களை விழித்துப் பார்க்கும் போது நேரம் ஆறு மணியை காட்டியது. வானொலியில் டி. எம். எஸ்ஸின் பழைய கானம் போய்க் கொண்டிருந்தது. கண் விழித்தவுடன் புரண்டு இன்னொரு குட்டித்தூக்கம் போடும் உமா இன்று தூங்காமல் உடன் எழுந்து விட்டாள். ஆம் இன்று அவளின் திருமண நாள் அல்லவா?

சந்தோஷத்தினால் வேகமாக காலைக் கடன்களை நிறைவேற்றினாள். தாயார் மலர்விழி முழு மூச்சாக வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள்.

''உமா... கேக்கை துண்டு துண்டா வெட்டி எடு. வெட்டி முடிஞ்ச பொறகு. ஒரு பெட்டிஸ், ஒரு துண்டு கேக், ஒரு பழம், ரெண்டு டொபி போட்டு பார்சல் பண்ணு. வாற ஆட்களுக்கு தூக்கி தூக்கி கொடுக்க லேசா இரிக்கும்.'' என்றாள் அவளின் அம்மா மலர்விழி.

உமா உடனே பணி தொடர்ந்தாள். எவ்வளவு விரைவாக செய்ய முடியுமோ அவ்வளவு விரைவாக செய்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரன் வாசலில் தோரணம் அமைத்துக் கொண்டிருந்தான். கொண்டு வந்திருந்த கலர் பல்புகளை பூட்டி அழகு படுத்தினான்.

சந்திரனின் தந்தை மூர்த்தி கடற் கரை மணலை வீட்டு வாசலில் கலைத்துப் போட்டுக் கொண்டிருந்தார். எல்லோரும் மூச்சு விடாது வேலை செய்தார்கள். நேரம் போவதே தெரியாமலிருந்தது. இரண்டு மணிக்குத்தான் மதிய போசனம் உண்டார்கள்.

மிகுதியாக இருந்த வேலைகளை விரைவாக செய்தார்கள். நான்கு மணி போல் மாப்பிள்ளை வீட்டுக்கு போவதற்குரிய ஆயத்தங்களை செய்தார்கள். மாப்பிள்ளையை ஏற்றுவதற்கு நண்பன் ஒருவனின் புது மொடல் காரை ஏற்பாடு செய்திருந்தான் சந்திரன். ஒரு வானில் சந்திரனும் பெற்றோரும் உறவினர்களும் ஏறிக் கொண்டார்கள். பொதிகளும் ஏற்றப்பட்டன. ராஜகோபாலின் வீடருகே சென்றதும் பஸ் ஒன்றும் சொல்லி வைத்த நேரத்துக்கு வந்து நின்றது. பணத்தை கொடுத்தால் பணி புரியத்தானே வேண்டும்!

ராஜகோபாலின் வீடு ஜனத்திரளால் விம்மிப புடைத்திருந்தது. இப்படியொரு ஜனத்திரளை இதற்கு முன் அந்த வீடு கண்டிராது.

உறவினர்களின் சிறுவர்களைத் தவிர வந்து கூடிய சிறுவர்களுக்கு 'உட்பிரவேசம்' அளிக்கப் படவில்லை. வெளியே கூடி நின்று வேடிக்கை பார்த்தார்கள்.

பேச்சு வார்த்தைகளுடன் கல்யாணப் பதிவு நிறைவாகிற்று. உண்டிகள் வழங்கப்பட்டன. சிறுவர்களும் முன்னுக்கு வந்து வாங்கிச் சாப்பிட்டார்கள். சில சிறுவர்கள் காற்சட்டைக்குள்ளும் அமர்த்திக் கொண்டார்கள்.

ராஜகோபால் கோர்ட் சூட்டுடன் ஒரு மகாராஜா போல தோற்றமளித்தான்.

பெண் வீட்டு, மாப்பிள்ளை வீட்டு உறவினர்கள் பஸ்ஸில் ஏறி அமர்ந்தார்கள். பெண்ணின் பெற்றோர்களும் மாப்பிள்ளையின் நெருங்கிய உறவினர்களும் வேன் ஒன்றில் அமர்ந்தார்கள். சந்திரன் மாப்பிள்ளையான ராஜகோபாலை அழைத்துக் கொண்டு காரில் ஏறினான். பஸ் புறப்பட்டது. வேன் புறப்பட்டது. இறுதியாக காரும் வெளிக்கிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்பகல் நேரம் ஐந்து மணியை தாண்டியது. நேரம் செல்ல செல்ல உமாவுக்கு பரபரப்பும் நடுக்கமும் ஏற்பட்டன. ஆண்களோடு நெருங்கி பழகாதவள். படிக்கின்ற காலத்திலும் கட்டுப்பாடாக வளர்ந்தவள். பரபரப்பு வரத்தானே செய்யும்!

மாப்பிள்ளை வந்தவுடன் கொழுத்துவதற்கு பட்டாசுகளுடன் நின்றார்கள் உமாவின் சொந்தக்கார பையன்கள். பஸ் வந்து நின்றவுடன் பட்டாசு பட படவென பொரிந்து தள்ளியது. பெண்கள் உள்ளே சென்று உட்கார. ஆண்கள் வாசலில் போடப் பட்டிருந்த நாற்காலிகளில் அமர்ந்தார்கள். மாப்பிள்ளையை ஏற்றிய கார் வந்ததும் அதிகமான பட்டாசுகள் வெடித்தன. சந்திரன் மாப்பிள்ளையை அழைத்துச் சென்று மணவறையில் மணப் பெண்ணான தனது தங்கை உமாவின் அருகே உடகார வைத்தான். மாப்பிள்ளை ராஜகோபாலும் சிறிது தயக்கத்துடன் காணப்பட்டான்.

பெண்கள் அதிகளவில் கூடி மாப்பிள்ளையையும், பெண்ணையும் பார்த்து ரசித்தார்கள். உண்டிக்கு பின்னர் ஆண்களும், சிறுவர்களும் கலையத் தொடங்கினார்கள். பெண்கள் கலைய விருப்பின்றி சுற்றிச் சுற்றி நின்றார்கள். வேண்டா வெறுப்பாகவே மெல்ல மெல்ல கலையத் தொடங்கினார்கள்.

ராஜகோபால் சிறிது தைரியத்துடனும், புன்னகையுடனும் காணப்பட்டான். ராஜகோபாலை துணிந்து பார்க்கும் சக்தியற்று தலை குனிந்த வண்ணம் இருந்தாள் உமா. பெண்ணல்லவா! பேசா மடந்தையானாள்.

ராஜகோபாலின் நண்பர்கள் அவனை வாழ்த்தி விட்டு சென்றார்கள். ''சாப்பாடு போட மறக்க வேணாம்'' என்று ஒரு போடு போட்டு விட்டு சென்றார்கள். நேரம் நகர நகர ஆட்கள் குறைந்து கொண்டு வந்தார்கள்.

கணவன் ராஜகோபால் கட்டிய தங்கத்தாலியை பார்த்து மகிழ்ந்து கொண்டாள் உமா. இருவரையும் உள்ளே போய் அமருமாறு ஒரு முதியவர் கூறினார். இருவரும் தனியாக ஒரு அறைக்குள் போய் அமர்ந்தார்கள். அவர்கள் உள்ளே போய் அமர்ந்ததும் வெளியே இருந்தவர்கள் கதவை சாத்தி விட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமாவின் முகத்தை உற்று நோக்கினான் ராஜகோபால் அழகின் வடிவாக தெரிந்தாள். ''பேச வெட்கமென்டா முகத்தையாவது கொஞ்சம் பார்க்கிற இல்லியா? " ராஜகோபால் கேட்டான். அதற்கும் மனைவி உமா பேசவில்லை. வெட்கத்தினால் தலை குனிந்தாள்.

மெதுவாக கையினால் அவளது கரத்தை பற்றினான். அவள் தடுக்கவில்லை. கூச்சப்பட்டாள்.

''புதுப் பொண்ணுக்கு கூச்சம் இரிக்கும் போகப் போக எல்லாம் சரி வரும். " என்றான் ராஜகோபால். இருவரும் மௌனமானார்கள். மௌனம் எதிர்காலத்தையும் நிகழ்காலத்தையும் எண்ணி கற்பனை பண்ண வைத்தது.

●

தங்கையின் திருமணம் நிறைவேறி மூன்று நாட்களின் பின்னர்தான் அலுவலகத்திற்கு சென்றான் சந்திரன்.

நிலவைக் கண்ட அல்லி போல சந்திரனைக் கண்டு மலர்ந்து காணப்பட்டாள் வதனா. சந்தோஷத்தினால் இருப்புக் கொள்ளவில்லை அவளுக்கு எழுந்து சந்திரன் அருகே சென்றாள்.

''தங்கைச்சிர கல்யாணத்துக்கு வருவீங்க என்டு எதிர் பார்த்தன்" என்றான் சந்திரன்.

''வரப்பார்த்தன். ஜனங்க ஏதும் சொல்லுமென்டுதான் வரல்லே. நல்ல படியா முடிஞ்சதாலே சந்தோஷம்." என்றாள் வதனா.

''இனி நம்ம கல்யாணத்துக்கு நாள் நெருங்குதே " என்று மெதுவாக சொன்னான் சந்திரன். உதட்டை கடித்து கண்ணை சிமிட்டினாள் வதனா.

''முக்கியமான விஷயம் பேசணும். யாருமில்லாத நேரம் பார்த்து கண்டீனுக்கு போய் பேசுவோம். மறக்காதீங்க" என்று நவின்று விட்டு வேலையை கவனித்தான். சந்திரனுக்கு வேலை அதிகமாகத்தான் இருந்தது.

''முக்கிய விஷயம் என்ன என்பதை அறிந்த கொள்ள தேனீர் வேளையை எதிர் பார்த்திருந்தாள் வதனா. எதிலும் பெண்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரம் கூடத்தான்! வேலையில் மனம் ஓடவில்லை. கஷ்டப் பட்டே கடமை புரிந்தாள்.

எல்லோரும் தேனீர் பருகி வந்த பின்னர் இருவரும் இறுதியாகச் சென்றார்கள். அதுதான் மனம் விட்டு பேசுவதற்கு சந்தர்ப்பமாக அமைந்தது.

''மணப் பெண்ணாகப் போகின்ற என்னாசை வதனா என்றவாறு அமர்ந்தான் சந்திரன்.

''என்ன முக்கிய விஷயம்'' எனக் கேட்டாள் வதனா.

''முக்கிய விஷயம் ஏதுமில்லே. அப்படிச் சொல்லி ஆசை காட்டுவதிலும் இன்பம் இரிக்கே. எவ்வளவு சந்தோஷமாக இரிந்திருப்பீங்க. துடிச்சிக் கொண்டிருப்பீங்களே...! '' என்றான் சந்திரன்.

''இடைக்கிடை நரி விளையாட்டும் விளையாடுவீங்க. என்னென்ன சொல்லி ஏமாத்துவீங்களோ?'' என்று கூறினாள் வதனா.

வடையைச் சாப்பிட்டவாறு ''இன்னும் சில வாரங்கள்ள திருமணம் செய்துக்க போறம் அல்லவா! திருமணத்துக்குப் பொறகு ஏமாத்த மாட்டேன். அதுக்கு முதல் சின்னச் சின்ன ஜோக் இரிக்கத்தானே வேணும்.'' என்று சொன்னான் சந்திரன்.

''போதும் நீங்களும் ஒங்குட ஜோக்கும்'' என்றாள் வதனா.

இருவரும் பசுப்பால் பருகினார்கள். வதனா வாங்கி வந்திருந்தாள்.

''கோபப் படாதீங்க. பாலெண்டா ருசியாகத்தான் இரிக்கு. நீங்க கொண்டந்த பால் அல்லவா. உங்க விரலை கொஞ்சம் நீட்டுங்க பார்ப்பம்'' என்றான் சந்திரன். விரலை நீட்டினாள் வதனா. காற்சட்டை பையிலிருந்த மோதிரத்தை மெதுவாக எடுத்து வதனாவின் மோதிர விரலில் அணிவித்தான் சந்திரன். களிப்புற்றாள் வதனா.

''பேச்சு வார்த்தை இல்லாம, சீதனம் இல்லாம செய்யப் போற கல்யாணம் என்டாலும் நான் உங்களுக்கு மோதிரம் ஒன்று பரிசளிக்க வேணும்தானே! என்றுரைத்தான் சந்திரன்.

''எனக்கு வேலை நெறைய இரிக்கு. வாறன் '' என்றவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையை கவனித்தான். வதனா மோதிரத்தை பார்த்தாள். கவர்ச்சியாக செய்யப் பட்டிருந்தது. ''ஸீ '' அடையாளமிடப்பட்டிருந்தது.

''சந்திரன் என்மேல உயிரை வச்சிருக்கார். உடுப்பு தொடக்கம் என்னவெல்லாம் வாங்கி தந்திட்டாரு. எங்கட கல்யாணத்துக்கும் நாள் நெருங்குது. நானும் ஒரு அழகிய மோதிரம் செஞ்சி கொடுக்கணும். என் கணவனாகப் போகிற கண்ணியமுள்ளவர் அல்லவா'' என்று வதனாவின் உள்ளம் நினைத்தது; தீர்மானித்தது.

சந்திரனின் நெருங்கிய நண்பன் சிவா 'சந்திரன் எப்ப உன் திருமணம்? எனக்கேட்டான்.

''இன்னும் நாலு கிழமையிலே செய்வம் என்டிருக்கன் தங்கச்சிட வாழ்க்கை எப்படிப்போகுது என்டத்தை ஒரு மாசமாலும் பார்க்கணுமே உனக்குத் தெரியும்தானே!. இந்தக் காசி பணத்திற்கு ஆசைப்பட்டவன் நானில்லே!. உள்ளம் இரண்டும் ஒன்றுசேர்ந்து இணைவதுதான் வாழ்க்கை. அவள் ஏழைப்பெண்ணாக இருந்தாலும் கைப்பிடிக்கவேணும். இஸ்ஹாக் மனேஜர்ர தம்பிர மகளை சீதனத்திற்கு அடிமையாகி முடிச்சிருக்கானே ஏழையா பொறந்த ரமீஸ்டீன் ரோஷம் இல்லாதவன்'' என்றான் சந்திரன்.

''ஏன் அப்படி சொல்றாய்?'' சிவா கேட்டான்.

''அந்தப்பெண்ணு இருக்காளே வேலைக்காரப் பையனோட எங்கோ ஓடிப்போய் ரெண்டு மூணு மாசம் குடும்பம் நடத்தினாளாம். சொந்தக்காரங்க கேள்விப்பட்டு பொடியனுக்கு உதைச்சிப்போட்டு அவளை இழுத்து வந்து ரமீஸ்டீனுக்கு முடிச்சி வைச்சாங்களாம். சீதனத்திற்காக இன்னொருத்தனோட வாழ்ந்தவளை முடிச்ச அற்பப்பயல்'' என்றான் சந்திரன்.

''அப்டியா?'' வினா எழுப்பினான் சிவா.

''இது போல நம்ம சாதியிலும் இரிக்காங்க. எல்லா சாதியிலும் இரிக்காங்க. சீதனத்துக்காக மானம் ரோஷம் இழந்து வாழுறாங்க. இவங்கட வாழ்க்கை பணத்தை குறி வைச்சதாக இரிக்கும். உள்ளம் ஒருமித்த வாழ்க்கையா இரிக்காது'' என்றான் சந்திரன். முகாமையாளர் வருவதைக் கண்டு கொண்டே கதையை நிறுத்தினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 12

வருடக் கணக்கில் திருமணத்தை எதிர் பார்த்து காத்திருந்து ஏமாந்தவளுக்கு காதலனாக சந்திரன் கிடைத்து, இன்பமாக நாட்கள் நகர்ந்து, இன்னும் சில வாரங்களில் திருமணத்தையும் காணப் போகின்றாள் என்றால் வதனாவிற்கும் மகிழ்விற்கும் தடையுண்டா?

சந்தோஷத்தினால் அவளது முகம் வெளுத்து அழகு விளையாடியது. கன்னங்கள் பளபளப்பு காட்டியது. இடையழகு கோடி அர்த்தங்களை கோடு போட்டு காட்டியது.

வீட்டுக்கு சென்றவள் மோதிரத்தைக் கழற்றி அம்மாவிடம் கொடுத்தாள்.

''அவரா தந்தார்? அழகா இரிக்கு ஒரு பவுனுக்கு கூட இரிக்கும். ஆறேழாயிரம் இரிக்கும்.'' என்றாள் வதனாவின் அம்மா லட்சுமி.

''நானும் சம்பளத்திலே ஒரு மோதிரம் செய்து கொடுக்கணும். ஒரு மாசத்துக்குள்ளே திருமணம் நடக்கும் என்றார்'' வதனா சொன்னாள்.

''எவ்வளவோ சந்தோஷப் பட வேண்டிய விஷயத்தை சிம்பிளா சொல்லுறே! எவ்வளவோ உத்தியோகம் பார்க்கிற பொண்ணுகள் சீதனம் இல்லாதினால சில்லறைகளை முடிச்சி தொல்லைப்படுதுகள். நீ தப்பிற்றாய் வதனா. எங்கட காலம் பெயித்து. நீங்க சந்தோஷமா வாழுங்க. சந்திரனும் நல்ல மனசுள்ளவன். இல்லாட்டி சம்மதிப்பானா'' என்றாள் வதனாவின் தாய் லட்சுமி.

மனதார சந்திரனை மேலும் புகழ்ந்து கொண்டாள் வதனா.

''அம்மா எங்கட மனேஜருக்கும் நாங்க திருமணம் செய்வது பிடிக்கல்ல. சீதனம் வாங்கி வேற இடத்திலே முடி என்டு சந்திரனுக்கு சொன்னவர்தானே! சந்திரன் இதுக்கு மசியல்லே.'' என்றாள் வதனா.

''நீங்க நல்லா இரிக்கப்போறீங்க என்டு தெரிஞ்சுதான் பொறாமைப்பட்டு சொல்லி இரிக்கார். பணக்காரங்க மட்டும்தான் நல்லா இரிக்க முடியுமா? நீங்களும் நல்லா இரிக்க முடியும் தானே'' என்றாள் தாய் லட்சுமி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்று சந்திரனிட்ட சொல்லி இரிக்கார். நீ விரும்புற படியால கல்யாணம் முடிச்சி சந்தோஷமா வாழப்பார் என்று. குள்ள நரிகள் சொல்ல தேவையா? " என்றாள் வதனா.

வதனாவின் தந்தை ராகவனும் வந்து சேர்ந்து கொண்டார்.

''மகள் நாம மெல்ல மெல்ல கல்யாணத்துக்குரிய ஆயத்தங்கள செய்யணும். வீட்டுக்கு பெயின்ட் பண்ணனும்" என்றார் ராகவன்.

''கல்யாணத்துக்குரிய வேலைகளை இனி செய்யணும். யாருக்கிட்டேயும் ஏதும் சொல்லப்படா. கேட்டா சொல்ற யாரும் நல்ல மாப்பிள்ளை அணைஞ்சா முடிக்கிற என்டு" என்றாள் அம்மா லட்சுமி.

●

கணவன் ராஜகோபால் வீடு வரும் நேரம் நெருங்கியது. சாப்பாட்டு மேசையில் உணவு தொடக்கம் தண்ணீர் வரை வைத்து மூடியிருந்தாள் உமா. கணவனின் வருகையை எதிர் பார்த்து முன் விறாந்தையில் உட்கார்ந்திருந்தாள்.

''தாமதித்து திருமணம் நடந்தாலும் அன்புள்ள அருமையான கணவன் எனக்கு கிடைத்திருக்கிறார். ஒவ்வொரு நாளும் பொழுது இன்பமாக கழிகிறது. கவலையே தெரியாமல் வைத்திருக்கிறார். கேட்பதெல்லாம் எனக்கு கிடைக்கிறது. ஒரு பெண்ணுக்கு அன்புள்ள கணவன் கிடைப்பதை விட வேறு என்ன பாக்கியம்?" என நினைத்து களிப்புற்றாள் உமா.

வெளிக்கேற்று திறக்கப்படும் ஓசை. எட்டிப் பார்த்தாள் உமா. கணவன் ராஜகோபால்தான் கையில் ஒரு பார்சலுடன் வந்தார். வேலைக்கு போய் வரும் போது வெறும் கையுடன் வந்ததே கிடையாது.

அமர்ந்திருந்த உமா எழுந்து நின்று கொண்டாள். அவள் நடக்கும் முறை ராஜகோபாலின் உள்ளத்தில் தேன் வார்த்தாற் போலிருக்கும். 'மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்' என்று மகிழ்ந்து கொள்வான்.

''இதிலே ரெண்டு லேட்டஸ் நைட்டியும், ரெண்டு லதர் செருப்பும் இருக்கு" என்று கூறி உமாவிடம் பார்சலை கொடுத்தான் ராஜகோபால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களுக்கு இருக்கும் ஆவல் ஆண்களுக்கில்லையே! உடன் பிரித்தாள்.

''அழகான லைட் புளு, ரோஸ் கலர், நல்ல பெஷன். அழகா இரிக்கு. செருப்பும் கவர்ச்சியா இரிக்கு'' என புகழ்ந்து கொண்டாள் உமா. அவளுக்கு இருக்கும் நல்ல பழக்கம் கணவன் எதை வாங்கி வந்தாலும் விருப்புடன் அதை ஏற்றுக் கொள்வாள். சில பெண்கள் இருக்கிறார்கள் கணவன் ஆசையுடன் விலையுயர்ந்த சேலை வாங்கி வந்தாலும், எதை வாங்கி வந்தாலும் 'கூடாது' என்று தட்டி விடுவார்கள். அடுத்த வீட்டுக்காரன் பணவசதி குறைந்தவனாக இருந்து ஐனூறு ரூபாவுக்கு சாரி வாங்கி அவனின் மனைவிக்கு கொடுத்தால் அதை புகழ்வாள்.

இப்படிப்பட்ட பெண்கள் கணவனுடன் வெறுப்பு கொண்டவர்களாக இருப்பார்கள். கணவனை மதித்து நடக்க மாட்டார்கள். ஆனல் ராஜகோபாலின் மனைவி உமா பெண்ணுக்கு ஒரு இலக்கணமானவள்.

''உடுப்ப மாத்திட்டு வாங்க. பசியோட இருக்கீங்க'' என்று கூறியதுடன் நில்லாது கணவன் உடை மாற்ற உதவியாகவும் இருந்தாள்.

புதுயுகத்தில் இருக்கும் சில பெண்கள் கணவனின் உடைகளை கழுவவும் விருப்பின்றி இருக்கின்றார்கள். கணவனால் தனது அனைத்து தேவைகளையும் அடைந்து அவனை மதிக்க வில்லையானால் அவளும் ஒரு பெண்ணா? பேய்.

சாப்பிட அமர்ந்தான் ராஜகோபால் உமா கைகழுவ தண்ணீர் ஊற்றினாள். பாத்திரத்தில் சோறு, கறி, பொரியல் போட்டு கொடுத்தாள். அவளும் பக்கத்தில் இருந்து சாப்பிட்டாள். கணவன் வீட்டுக்கு வந்து சாப்பிடாத வரை உமா சாப்பிடமாட்டாள். சில பெண்கள் இதைப் பற்றி கவலைப் படாமல் சாப்பிட்டு விடுவார்கள். அன்பு இறுக்கமாக இருந்தால் தனியாக சாப்பிட மனது வராது.

சாப்பிட்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்தான் ராஜகோபால். குசினியை துப்பரவு செய்து விட்டு கணவனுக்கு அருகே சென்றாள் உமா.

''உமா இன்று ராவைக்கு அம்மாவின் வீட்ட போய் வருவம். என்ன?'' ராஜகோபால் கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அதுக்கென்ன போவமே. எனக்கும் மாமியை பாரக்கனும் போலதான் இரிக்கு. உங்களுக்கு வருத்தமா இரிக்கும் என்டுதான் இருந்தன்.'' என்றாள் உமா.

''இப்படி தங்கமான குணமுள்ள மனைவி அமைய கொடுத்து வைத்திருக்க வேண்டும்'' என்று மனதுள் உமாவை புகழ்ந்து கொண்டான் ராஜகோபால்.

அவர்கள் திருமணம் செய்து இரண்டு வாரங்கள் கடந்தன. இருவரும் மிக அன்பாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்து வந்தார்கள். வெளியே போய் வருவதற்கு இரவு ஏழெட்டு மணியானால் பதறிப் போய் விடுவாள் உமா. அதே போல ராஜகோபாலும் வெளியே அலுவலாக போனால் விரைவாக முடித்து விட்டு வீடு வரவே பார்ப்பான். முன்னரைப் போல தேவையில்லாமல் திரிவதில்லை. வீணாக நண்பர்களுடன் கூடி அரட்டை அடிப்பதில்லை.

இரவானது. மனைவி உமாவை அழைத்துக் கொண்டு தாயாரின் வீட்டுக்குப் போனான் ராஜகோபால்.

அம்மாவுக்கு தேவையான பொருட்களும் சில வாங்கி இருந்தான். அத்துடன் மாமியாருக்கு தன் கைப்பட செய்த பலகாரங்களையும் எடுத்துக் கொண்டு போனாள் உமா. வீட்டுக்குச் சென்றதும் மாமியின் கால்களை தொட்டு வணங்கிக் கொண்டாள் உமா.

''சந்தோஷமா இரும்மா...'' என்று கூறி மகனையும் மருமகளையும் உட்கார வைத்தாள். விசாலாட்சி. எழுந்து செல்ல முனைந்தாள் விசாலாட்சி.

''நீங்க இருங்க மாமி. நாங்க இப்பதான் சாப்பிட்டு வாறம். போகக்குள்ளே ஏதாவது போட்டு குடிக்கம்.'' என்றாள் உமா.

''நீங்க சந்தோஷமா வாழ்றதிலேதான் என்ர நிம்மதி இருக்கு. பத்து மாசத்திலே பேரப் பிள்ளையை பெத்து தாங்க'' என்றாள் விசாலாட்சி.

''மாமி நீங்க தனிய இருக்கிற எனக்கு விருப்பமில்லே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணன் கல்யாணம் முடிச்சி போனப் பிறகு நீங்க எங்கிட வீட்ட வந்திருங்க'' என்றாள் உமா.

''அது சரி. எப்ப அண்ணனுக்கு கல்யாணம்?'' விசாலாட்சி கேட்டாள்.

''இன்னும் மூணு கிழமையிலே முடிக்கிற என்கிறாரு. அவர் புரட்சிவாதிதானே...! சீதனம் இல்லாம அவர்ர ஒபிஸிலே வேலை செய்யிற வதனாவைத் தான் முடிக்கப் போறாரு. அவவும் நல்ல குணமுள்ளவதான்'' என்றாள் உமா.

''சந்தோஷமா வாழ்ந்தா சரி. இந்த உலகத்திலே கொஞ்ச நாள் வாழப் போறம். அதுவும் சந்தோஷ வாழ்க்கை அமையாட்டி பிரயோசனம் இல்லியே! காசு பணத்தாலே என்னத்தை காணப் போறம்'' என்றாள் ராஜகோபாலின் தாய் விசாலாட்சி.

''தனிய இருந்து சமைச்சு கஷ்டப் படாதீங்க. நான் மூணு நேரமும் சின்னத்தம்பிக்கிட்ட சாப்பாடு கொடுத்தனுப்புறன்'' என்றாள் உமா.

''எனது அம்மாவிடம் கூட எவ்வளவு அன்பாக இருக்கிறாள் உமா. இப்படியான மனைவி கிடைக்க கொடுத்து வைத்திருக்க வேண்டும். அம்மாவுக்கு தினமும் சமைத்து அனுப்பப் போகிறாள். நவீன யுகத்தில் கணவனுக்கே வேளைக்கு சமைத்து கொடுப்பவர்கள் அரிதாக இருக்கின்றார்கள். அந்த வகையில் உமா எவ்வளவோ மேல்'' என சிந்தித்து மகிழ்ந்தான் ராஜகோபால்.

''கற்பனைக் கோட்டை கட்டாதீங்க... கவிஞனாகி விடுவீங்க.'' என்று உமா சொன்னதும் சுய நினைவிற்கு வந்தான் ராஜகோபால்.

''மனிதன் என்டா சிந்திக்கத்தானே வேணும். மனிதனுக்கும் மிருகத்துக்கும் உள்ள வேறுபாடு அதுதானே'' என்றான் ராஜகோபால்.

கொண்டு வந்திருந்த ஹோர்லிக்ஸ் மூவருக்கும் தயாரித்தாள். கணவனுக்கும் மாமிக்கும் கொடுத்து விட்டு அவளும் பருகினாள்.

''அம்மா நாங்க போயி வாறம் அம்மா'' என்று கூறி எழுந்தான் ராஜகோபால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மாமி... வாறன் மாமி. நாளையிலே இருந்து சமைக்காதீங்க. நான் அனுப்புறன். ஒரு பிடி சாப்பாடு நீங்க சமைக்கணுமா! சும்மா இருங்க. நாங்க போய் வாறம்'' என்று கூறி வெளிக்கிட்டாள் உமா.

ராஜகோபாலும் மனைவி உமாவும் அவர்களது வாழ்க்கை விடயமாக பற்பல பேசிக் கொண்டு போனார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 13

வதனாவுக்கு தலைகால் புரியாத சந்தோஷம். சில வேளைகளில் பசி எடுப்பதுமில்லை. இன்னும் இரு வாரங்கள் கடந்ததும் அவளுக்கு திருமணம். காதலன் கணவனாகப் போகின்றான். சந்தோஷம் இருக்காதா பின்னே!

அலுவலகத்திலும் சக ஊழியர்கள் கிண்டலும் கதையுமாக இருந்தார்கள். சில வேளைகளில் வெட்கம் அவளை வாட்டி எடுக்கும்.

டைப்பிஸ்ட் சுஹானா. ''அடேயப்பா. ஜோடி ரெண்டு சேரப் போகுதே! அடுத்த வருஷம் குழந்தையும் பொறக்கப் போகுதே'' என்று நகைச் சுவையாகக் கூறினாள்..

''அதெப்படி? கல்யாணமே ஆகவில்லை. எப்படி குழந்தை பிறக்கும்? நந்தினி கேட்டாள்.

''இந்தக் காலம் காதலிக்கக்குள்ளேயே அத்திவாரத்தையும் போட்டு விடுவாங்களே! அத்திவாரம் போட்டதோ இல்லியோ வதனாவுக்குத்தானே தெரியும். நமக்கென்ன தெரியும்? என்றாள் சுஹானா.

''சும்மா தேவல்லாம கதையாதேங்கடி. கிண்டல் பண்ண எவ்வளவு விஷயங்கள் இருக்கு. திருமணத்துக்கு முன் அப்படி நடக்க நாங்க தமிழ்ப் பண்பு தெரியாதவங்கல்லே'' என்றாள் வதனா.

''சொல்லி தப்பிக்க! கல்யாண சாப்பாடு மட்டும் போடாம தப்பிக்க ஏலா! விடமாட்டோம். நக்கல் அடிப்போம். திருமணம் முடிஞ்சி தேனிலவுக்கு போகாட்டியும் பரவாயில்லை சாப்பாடு போடனும். அதுக்குப் பொறகு எங்கென்டாலும் போங்க'' என்றாள் சுஹானா.

''நாங்க கல்யாணம் முடிச்சா மொதல் வேலை உங்களுக்கு சாப்பாடு போடுறதான். இப்ப சந்தோஷமா? '' என்றாள். ஊழியர்கள் எல்லோரும் சந்தோஷப் பட்டுக் கொண்டார்கள்.

முகாமையாளர் இஸ்ஹாக் மட்டும் வதனாவோடு முன்னரைப் போல பேசுவதில்லை. தள்ளி நின்று பார்த்து விட்டு போய் விடுவார். இதனால் வதனாவிற்கு கவலையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சந்திரனிடம் கூறிய கதைதான் வருத்தத்தை ஏற்படுத்தியது. ''அவர் சொன்னது போல சீதனத்துக்கு திருமணம் செய்ய சந்திரன் அவரைப் போன்ற போலி இல்லியே! என்று வதனா நினைத்துக் கொண்டாள்.

இன்று மாலை தம்பியை அழைத்துக் கொண்டு கடற் கரைக்கு வருமாறு சொல்லி இருந்தான் சந்திரன். அதனால் வதனாவுக்கு சின்னப் பூரிப்பு ஏற்பட்டாலும் தெரிந்தவர்கள் கண்ணில் சிக்கக் கூடாதென பயந்து கொண்டாள்.

தம்பியை அழைத்துக் கொண்டு வதனா கடற் கரைக்குச் சென்றாள். அவளது பத்து வயதுத் தம்பி தோணிகளையும், மீனவர்களையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

வதனா... இதமான காற்றுக்கு சுகமான சிந்தனையில் இருந்தாள். ''இரு வாரங்கள் கடந்தால் நான் மணப் பெண். என்னுயிர் காதலன் கணவனாகி, குடும்ப பந்தத்தில் குதூகலிக்கப் போகின்றோம். சிலர் எங்களைப் பார்த்து மூக்கில் விரல் வைக்க போகின்றார்கள். எனக்கு வாழ்க்கை அமைய மாட்டாது. அமைவதென்றால் கூலி வேலைக் காரன் கிடைப்பான் என்றெல்லாம் சொன்னவர்களுக்கு செருப்பால் அடித்தாற் போலாகிவிடும். கடவுளே மேல்'' என நினைத்தாள்.

ஆறு மணிக்கெல்லாம் வந்து விட வேண்டும் என்று சொன்ன சந்திரன் ஆறு மணி பதினைந்து நிமிடமாகியும் வரவில்லை!

காதல் ஜோடிகள் கடற் கரையில் கூடத் தொடங்கின. கணவன்-மனைவிமாரும் குழந்தைகளுடன் வந்திருந்தார்கள். கடற்கரை சூழலில் களைத்து மகிழ்வதை விரும்பியே வந்திருந்தார்கள். துவிச்சக்கர வண்டியை நிறுத்தி விட்டு சந்திரன் வருவதை வதனா கண்டு கொண்டதும் உவகை கொண்டாள். வதனா பார்க்கும் திசையை அவளது தம்பியும் நோக்கினான். சந்திரன் வருவதைக் கண்டு அவனும் மகிழ்ந்தான்.

நீலநிற காற்சட்டை. வெள்ளை டீ சேட் சந்திரனுக்கு மிக எடுப்பாக இருந்தது.

''என்னை ஆறு மணிக்கு வரச் சொல்லி அரை மணி சுணங்கி வாறீகளே! என்னை காக்க வைச்சிட்டீங்களே'' என்றாள் வதனா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''காக்க வைப்பதில் இன்பமுண்டு என கண்ணதாசனே சொல்லி இருக்காரே.'' என்றான் சந்திரன்.

''போகப் போக நீங்களும் பாட்டெழுதுவீங்க போலிருக்கு'' என்றாள் வதனா.

''தம்பி வாங்க. இதுக்கு சுடச்சுட அவிச்ச கடலை வாங்கியாங்க. போனா முதல் வாற கடையிலே இரிக்கு. கொஞ்சம் உறைப்பும் போட்டு வாங்கியாங்க.'' என்று கூறி இருபது ரூபா காசை வதனாவின் தம்பியிடம் கொடுத்தான் சந்திரன். வதனாவின் தம்பி மெதுவாக ஆடி அசைந்து போய்க் கொண்டிருந்தான்.

சந்திரன் சந்தர்ப்பத்தை பயன் படுத்தி சுற்றி வளைத்து பார்த்து விட்டு வதனாவின் இடையை திடீரென தொட்டு அணைத்து விட்டு கையை எடுத்தான். வதனாவின் உடலெங்கும் இன்பம் பொங்கி எழுந்தது. சந்திரனை பொய்க் கோபத்துடன் முறைத்துப் பார்த்தாள்.

''இவ்வளவு காலமும் நல்ல பிள்ளையாக இருந்தீங்க. ரெண்டு கிழமை பொறுங்களன்.'' என்றாள் வதனா.

''நான் உங்களுக்கு ஏதும் செய்யல்லியே! கை கொஞ்சம் பட்டிச்சி. இதை பெரிசு படுத்துறீங்களே. தாராள மனசு தேவைதானே! உங்கட கணவனாகப் போறவன்தானே. இதுக்கெல்லாம் கோபப் படலாமா?'' என்றான் சந்திரன்.

''கோபமில்லே! திருமணத்துக்கு பொறகு எதுவும் செய்யுங்க. முன்னுக்கு ஆயிரம் கண்கள் இருக்கு. யாரும் கண்டா கண்ணும் மூக்கும் வைத்து இல்லாததும் பொல்லாததும் சொல்லுவாங்க. அதுக்குத்தான் சொன்னன்.'' என்றாள் வதனா.

''நான் எந்த ஆடம்பரமும் இல்லாமத்தான் செய்யப் போறன். என் நண்பன் சிவா சொல்லுவான் என்ர கொள்கைக்கு நான் ஒரு எழுத்தாளனா இருந்தா தரமான புத்தகங்களை எழுதி இருப்பேன் எண்டு. திருமணத்துக்கு பொறகு கவிதை தொகுதி ஒன்றை வெளியிடத்தான் போறன்'' என்றான் சந்திரன்.

''நான் சொல்லி இருக்கன்தானே. நெறைய புத்தகங்களை வாசிச்சதாலோ என்னவோ உங்களுக்கு கவி எழுதும் ஆற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கெண்டு. கணவனாகும் நீங்கள் கவிஞனுமானா எனக்கு சந்தோசம் இருக்காதா?" என்றாள் வதனா.

''எந்த தோரணமோ பல்பு சோடனையோ, இருக்கக்கூடா. ஊருக்கு சொல்லப்படா எதையும் கிண்டல் பண்ணும் சவுக்கு நாக்கு நெறைய பேருக்கிட்ட இருக்கு. சொந்தக்காரங்களும் நண்பர்களும் போதும். நண்பர்களுக்கு திருமணம் செஞ்சி ரெண்டாவது நாள் சாப்பாடு போடுவம். கோயிலுக்கு போய் திருமணம் செஞ்சி வீட்டுக்கு வரவேண்டியதுதான். வேறென்ன?" கூறினான் சந்திரன்.

அப்போது கடலை பொதியுடன் வதனாவின் தம்பி வந்து சேர்ந்தான். கொஞ்சம் எடுத்துக்கொண்டு வதனாவுக்கு நீட்டினான். வதனா கொஞ்சம் எடுத்துக்கொண்டு பொதியோடு தம்பிக்கு கொடுத்தாள். அவன் வாங்கி சாப்பிட்டவாறு கடல் அலையில் கால்கழுவி விளையாடினான்..

''தம்பி தூரத்துக்கு போயிராதே'' என்று சகோதரனை எச்சரித்தாள் வதனா."

'' என் அப்பாக்கும் ஆடம்பரமில்லாம செய்யத்தான் விருப்பம் திருமணத்துக்குப்பிறகு நீங்க சொன்னாப்போல நண்பர்களுக்கு விருந்து கொடுப்பம். என்ர ஒரு விருப்பம் இரிக்கு. உங்களுக்கு எப்படியோ?" என்று நிறுத்தினாள் வதனா.

''என்னவென்று சொல்லுங்களன். சொன்னாத்தானே தெரியும் என்றன் சந்திரன்."

''இப்ப பணக்காரங்க செய்யாத ஒன்று. நடுத்தரமான நாம கட்டாயம் செய்யனும். திருமணம் செஞ்சி ஏழு நாளைக்குப் பொறகு ஏழைக பத்து பேருக்கு அன்னதானம் செய்வம் என்ன சொல்றீங்க.?" கூறிக்கேட்டாள் வதனா.

''கட்டாயம் செய்வோம். ஆடம்பர செலவு எதுவும் இல்லாம செய்யிற நாம இப்படி நல்லகாரியம் செய்தா கடவுளும் கருணை காட்டுவார்." என்றான் சந்திரன்.

இருவரும் இருநிமிடங்கள் பேசாமல் கனவுலகில் சஞ்சரித்தார்கள். ''நல்லது செய்யத்துடிக்கும் சந்திரன் எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனாக வர நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்'' என்று மனதார புகழ்ந்து கொண்டாள் வதனா.

''வேறு... என்ன செய்யணும்? இனி சந்திச்சு பேச நேரமிருக்காது. சொல்லவேண்டியதை சொல்லுங்க'' என்றான் சந்திரன்.

''இனி ஏதுமில்லை. பதினாலு நாள்முடிவிலே என்னை திருமணம் செஞ்சாசரி அதுக்குபிறகு அதை இதை கேட்டு தொல்லை படுத்துறன். வீட்டிலே நான் ஏதும் விசேஷமா செய்யனுமா? சொல்லுங்க'' என்றாள் வதனா.

''நீங்க ஏதும் செய்யத்தேவல்ல. பெயின்டும் அடிச்சிட்டீங்க. வீட்ட கொஞ்சம் அழகுபடுத்துங்க. கல்யாணத்துக்குப்பிறகு மற்றதை நான் பார்த்துக்கிறேன்'' என்று கூறி பல்லை கடித்தான் சந்திரன். புன்னகைத்தாள் வதனா.

''இனி வேறொன்றும் இல்லை. பிறகு குளப்பபோடா சொல்லுவதை சொல்லிப்போடுங்க.'' என்றாள் வதனா.

''கல்யாணத்துக்கு பொறகு சொல்றதை இப்ப சொல்லமுடியுமா அதெல்லாம் பொறகு'' என்றான் சந்திரன்.

''அப்போ... இனி போகட்டா?'' வினாவெழுப்பினாள் வதனா.

''என்ன அவசரப்படுறே? கொஞ்சம் நில்லுங்களன். உடை உடுத்தி நடைநடந்து வந்தீங்க கொஞ்சம் நின்டு போங்களன். நான் என்ன கட்டியணைச்சு முத்தமிட போறேனா? இல்ல அங்க இங்க தொடப்போறேனா? பயப்படாம நில்லுங்க. மௌனமாக அருகருகே நிற்பதிலே சந்தோஷம் உங்களுக்கு இல்லியா?'' கூறிவிட்டு கேட்டான் சந்திரன்.

''ஆக்கள் அதிகம்பேர் பார்த்தா நம்மை பத்தித்தான் கதைப்பாங்க. விபச்சாரம் செய்யிறவங்களை விட்டிடுவாங்க. நம்மைத்தான் பேச்சாலே சித்திரவதை செய்வாங்க'' என்றாள் வதான.

''இன்னும் ஐந்து நிமிஷம் நின்டு போவம்'' என்றான் சந்திரன். மௌனமாக நின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு திசையில் அடிவானம் கடலை முத்தமிட்டுக் கொண்டிருந்தது. கடலும் தலைசாய்த்து கற்பனை உலகில் களிநயம் புரிந்தது. கடலின் குழந்தைகளான அலைகள் துள்ளி துள்ளி விளையாடின. உயரப்பாய்ந்து தரைசாய்ந்தன.

வதனா தம்பியை அழைத்துச் சென்று, ஐந்து நிமிடங்கள் கடந்த பின்னர், சந்திரனும் வீடு நோக்கிப்போனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 14

''என் புள்ளைக்கு அருமையான வாத்தியபார்த்து புருஷனாக எடுத்திருக்கான் என் மகன். அலசி பார்த்துத்தான் எடுத்திருக்கான். என் மகள் உமாவோட உசிரயல்லவா அவன் வைச்சிருக்கான். தங்கமான புள்ளை. எங்கட பக்கத்திலே சில வாத்திகள் இருக்கானுகள் தலையிலே கொம்பு. அவங்களுக்கு ராஜாதிராஜா என்ட நெனைப்பு. யாரையும் மதிக்க மாட்டானுகள். அந்த வகையிலே பார்த்தா என் மருமகன் ராஜகோபால் எவ்வளவு உசத்தி. அவனுக்கு நோய் நொடி ஆபத்து வராம கடவுள் தான் காப்பாத்தனும். '' என எண்ணிக் கொண்டார் உமாவின் அப்பா மூர்த்தி.

மீண்டும் அவரது சிந்தனை தொடர்ந்தது.

''தங்கைக்கு வாழ்வளித்த என் மகன் சந்திரன், அவன் விரும்பும் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளத்தான் வேண்டும். சீதனத்தை விட என் மகனின் சந்தோஷம், நிம்மதி, மேல். இன்னும் ஒரு வாரம் தான் இருக்கிறது, அவனின் திருமணத்திற்கு. கடவுள் அவர்களுக்கும் அருள்புரிய வேண்டுகிறேன்'' என்று நினைத்துக் கொண்டார் மூர்த்தி.

அன்று சனிக்கிழமை. விடு முறை ஆதலால் அதிகாலை எழாமல் ஆறு மணி போல் எழுந்தான் ராஜகோபால்.

அதற்கு முதல் எழுந்து தேனீர் தயாரித்து பிளாஸ்கில் ஊற்றி வைத்திருந்தாள் உமா. விடுமுறை நாள்தானே! தூங்கட்டும். எழுந்த பின் தேனீரை கொடுப்போம்! என்று பார்த்திருந்தாள். அன்பான கணவனை நினைத்து பெருமைப் பட்டுக்கொண்டாள்.

'எதற்கெடுத்தாலும் என் விருப்பு வெறுப்பை கேட்டே நடக்கிறார். எனது விருப்பில்லாத எதையும் அவர் செய்வதே இல்லை. சிறிய விடயமாக இருந்தாலும் நான் விரும்பினால் தான் செய்கிறார். எங்கும் போவதாக இருந்தால் நான் விரும்பினால் அழைத்துப் போகிறார். இல்லையானால் விட்டு விடுகிறார். இப்படியான கணவர்தான் பெண்களுக்கு தெய்வம். அந்நிய பெண்களிடம் தேவையில்லாமல் பேசமாட்டார் அதிகமாகவும் பேசமாட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ பெண்கள் என்னிடமே கேட்டிருக் கிறார்கள். உன் கணவர் பெண்களிடம் பேச ஏன் கூச்சப் படுகிறார்? என்று. அவர் அப்படித்தான் என்பேன் நான். பக்கத்து வீட்டு பவளம் கணவனோடு உயிரையே வைத்திருந்தாள். கணவனுக்காக காணியையும் விற்று கொடுத்திருக்கிறாள். அந்த அயோக்கியனோ அனிதா என்ற பெண்ணை மணம் முடித்து ஓடிப் போய்விட்டான். மனைவி பவளமோ காணியும் இல்லாமல் கணவனும் இல்லாமல் கண்ணீரோடு போராடுகிறாள். ஆனால் கணவனை இழிந்து ஒரு சொல் பேச மாட்டாள்.

இப்படியான ஆண்களுக்கு மத்தியில் என் அன்புக் கணவர் ராஜகோபால் தெய்வப் பிறவி. மனித தெய்வம்.

என் கணவர் எனக்குக் கிடைத்த பெரும் சொத்து. என் கணவர் இப்படியொரு தெய்வமாக இருக்கும் போது கண்ட இடத்திலெல்லாம் கல்யாணம் முடித்து திரியும் பவளத்தின் புருஷனை புகழுகின்ற கண்ணிருந்தும் குருடர்களும் உண்டு. என் அன்புக் கணவர் நோயற்று நீண்ட காலம் வாழ இறையருள் தர வேண்டும். முத்துலிங்கம் தனது மனைவியை கைவிட்டுவிட்டு வெளிநாடு சென்று எவளோ பிற நாட்டு பெண்ணை திருமணம் செய்து நான்கு வருடங்கள் வாழ்ந்து, கசந்து கைவிட்டு வந்திருக்கிறான். சில ஆண்களுக்கு காலத்துக்கு ஒரு கல்யாணம் தேவை. அப்படிப் பட்ட முத்துலிங்கம் இறுதியாக முதல் மனைவியிடம் வாரத்தில் இரு நாட்கள் சேர்ந்து வாழ தொடங்கினான். நிரந்தரமாக வாழ்ந்தால் அல்லது முதல் மனைவியோடு சேர்ந்து வாழ்வது தெரிந்தால் இரண்டாவது மனைவியாக சீதனம் கொடுத்து முடித்தவள் விடுவாளா? மறைமுகமாக உறவு விரிந்தது. முதல் மனைவியை காலங் கடந்த பின் எவன்தான் மணம் செய்ய மனம் விரும்புவான்? அதனால் அவளுக்கும் ஆசையை தணிக்க வேறு வழியில்லை. இப்படிப் பட்ட மேய்ந்து திரியும் கணவனையும் புகழும் தரம் கெட்ட பெண்களும் இருக்கிறார்கள்.

''என் கணவர் தங்கம்'' என நினைத்து பெருமை பட்டுக் கொண்டாள் உமா.

''மகள்... சிந்திச்சுகொண்டிருக்கிற காலமில்லே. நீ சந்தோஷமா இரிக்க வேண்டிய வேளை. அவரு வந்திருவாரு. சாப்பாட்டை ரெடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணி வை" என்று மகளின் சிந்தனையை கலைத்தார் தந்தை மூர்த்தி.

''அப்பா... கவலையோட வந்த சிந்தனை இல்லப்பா. எதிர்காலத்தையும் நிகழ்காலத்தையும் நினைச்சு வந்த சிந்தனையப்பா" என்றாள் உமா.

''அடுத்த கிழமை அண்ணன் திருமணம் முடிச்சி போயிருவான். சந்தோஷமான செய்தி. ஆனா... என் பிள்ளை என்னை விட்டு போறது எனக்கென்னவோ துக்கம் தான். எவ்வளவு கஷ்டப் பட்டு படிச்சி வேலைக்கு சேர்ந்தான. பணமில்லாத வேளையிலே வேலை செஞ்சி படிச்சான். தரமான உத்தியோகத்திலே சேர்ந்தான். ஊரிலே உள்ள பணக்காரனும் அவனோட பொறாமைப் பட்டாங்க. காரணம் அப்படியொரு உத்தியோகம் அவங்களுக்கு கிடைக்கல்லியே! மகன் சந்திரனைப் பற்றி பெருமைப் பட்டுக் கொண்டார் தந்தை மூர்த்தி.

''அது மட்டுமில்லியே அப்பா ஒழைக்க முடியாம ஒதுங்கினீங்க. அண்ணன் ஒழைச்சி என்னை கரை சேர்த்தாரு. சும்மா கரை சேர்க்கல்லே. அன்பான பண்பான உயிருக்கு உயிரான ஒரு உத்தமரை தேடி தந்தாரு." என்றாள் உமா.

''ஆமா... உமா! அவன் எனக்கு அப்பாவாகிற்றான்" என்று உளம் பூரித்தார் மூர்த்தி! வெளிக் கதவு திறக்கும் ஓசை கேட்டது. உமாவின் அன்புக் கணவர் ராஜகோபால் தான் வந்தார்.

உட்கார்ந்திருந்த உமா எழுந்து நின்றாள். ''இன்றைய காலத்தில் கணவனுக்கு எழுந்து மரியாதை செய்யா விட்டாலும் பரவாயில்லை. கணவனைப் பற்றி உறவினரிடம் இழிவாக கூறி அவமானப் படுத்துகின்ற கூட்டம் ஒரு புறம். கணவன் வந்தால் அவனைப் பொருட் படுத்தாமல் தன் பாட்டில் இருக்கும் கூட்டம் மறு புறம். இவர்களுக்கு மத்தியில் என் மனைவி உமா என்னுயிரேதான்" என நினைத்து மகிழ்ந்தான் ராஜகோபால்.

உடைகளை மாற்றி விட்டு நாற்காலியில் அமர்ந்தான். ''உங்க அண்ணன் திருமணத்துக்கு இன்னும் ஏழு நாட்கள்தான் இரிக்கு. நம்மள சேத்து வைச்சவரு அல்லவா! அவரையும் அவர்ர மனைவியையும் எடுத்து ஒரு கெழமைக்காவது சாப்பாடு போடனும்." என்றான் ராஜகோபால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நான் நினைத்ததை அவர் சொல்லி விடுவார். என் இதயமல்லவா' என்றெண்ணி மகிழ்ந்தாள்.

''பிறகு பேசலாம். வாங்க சாப்பிட'' என்று கூறி கணவனை சாப்பாட்டு மேசைக்கு அழைத்துச் சென்றாள் உமா.

பெரும்பாலும் நல்லுள்ளங்களின் விருப்பு வெறுப்பு ஓன்றாகவே இருக்கும். இது ராஜகோபால் உமா இரு வருக்கும் பொருந்துவதாக இருந்தது. இதனால் அவர்களுக்குள் சிறு பிரச்சினை உருவாவதற்கும் இடமில்லாமல் போனது.

பாடசாலை கடமை நேரம் தவிர்த்து மற்ற நேரமெல்லாம் வீட்டிலே இருப்பான். ஏதாவது தேவை ஏற்பட்டால் மாத்திரம் சென்று வருவான். சிலர் இருக்கிறார்கள் மனம் போன போக்கில் திரிவார்கள். தூக்கம் கண்ணை மறைக்கும் வேளையில் வீட்டுக்கு வந்து சேர்வார்கள்.

''இன்டைக்கு சரியான மௌனமாக இரிக்கீங்க. என்ன விஷயம்?'' உமா கேட்டாள்.

''இந்த பிள்ளைகளோட கத்துற வேலை இரிக்கல்லா உயிர் போற வேலை. சில பிள்ளைகளுக்கு ஆயிரம் தடவை சொன்னாலும் தலைக்குள் ஏறிது இல்லை. இப்படியான பிள்ளைகள் பெற்றோர ஏமாத்தாம தொழில் ஏதும் செய்து பழகுற நல்லம்'' என்றான் ராஜகோபால்.

''நாம நம்மட கடமையை செய்ய வேண்டியது தான் ஏறாதவங்களுக்கு கரைச்சு ஊத்த முடியுமா?'' என்றாள் உமா.

கணவனோடு சாப்பிட்டு கணவனோடு வந்து உட்கார்ந்தாள் உமா.

மதிய நேரத்து வெயில், நிலத்தை எரித்து உஷ்ணத்தை கக்கியது. குட்டித் தூக்கம் போடுவதற்கு தயாரானான் ராஜகோபால். கதவைச் சாத்தி விட்டு கூடவே உமாவும் உறங்கினாள். கணவனின் மனநிலைக்கேற்ப இயங்கும் உத்தமி அல்லவா!

ராஜகோபால் களைப்பினால் தூங்கி விட்டான். உமா கண் விழித்து படுத்திருந்தாள். கணவன் தூக்கத்தில் மூச்சு விடுவதை பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள். அரை மணி நேரத்திற்குள் ராஜகோபால் விழித்துக் கொண்டான். கணவன் விழித்தவுடன் உமா எழுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாள்.

"உமா... பின்னேர கிளாஸ் இரிக்கு. போகணும்" என்று சொல்லி சோம்பல் முறித்துக் கொண்டான். உமா தேனீர் தயாரித்து கொடுத்தாள்.

பருகி விட்டு வெளிக்கிட தயாரானான். வெள்ளை றவுஸர், சிவப்ப டீ சேட் எடுப்பாக இருந்தது.

"இந்த ட்ரஸ்ஸில் மிச்சம் பைனா இரிக்கீங்க" என்றாள் உமா.

"அப்படியா... உமாக் கண்ணு. நான் போய் வாறன் கண்ணு" என்று கூறி கன்னத்தை கிள்ளி விட்டு போனான் ராஜகோபால்.

LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 15

ராஜகோபால் புறப்பட்டு போய் இருபது நிமிடங்கள் தான் கடந்திருக்கும். பாடசாலை மாணவனொருவன் வியர்க்க விரு விருக்க ஓடி வந்தான். மேல் மூச்சி கீழ் மூச்சி வாங்கியது அவனுக்கு.

''அன்ரீ... ஹாஹா'' என்றான் மாணவன்.

''ஹா.. ஹூப் போடாம விஷயத்தை சொல்லு'' என்றாள் உமா.

''ராஜகோபால் சேர்... பாடசாலை கேற்றடியை கடந்து வரும் போது கார் ஒன்று மோதிற்று. தலையிலே பலமா அடிபட்டு ரெத்தம் சொட்டு சொட்டென கொட்டிச்சு. பிரின்சிபல் ஒஸ்பிடலுக்கு அதே காரில கொண்டு போறாரு. போய் பாருங்க'' என்றான் அம்மாணவன்.

''ஐயோ... கடவுளே. என் தெய்வத்தை காப்பாற்று. அவரில்லையென்றால் நான் இருந்து என்ன பயன்? அவருக்கு ஏதும் நேராம காப்பாற்று பழனி மலை முருகா'' என ஒப்பாரி வைத்தாள் உமா.

''என்னம்மா'' எனக் கேட்டுக் கொண்டு வந்தார் உமாவின் அப்பா மூர்த்தி.

''எப்படியப்பா அதை நான் சொல்வேன். நுளம்பு கூட கடியாத அவரை கார் மோதி ரெத்தம் ஆறா ஓடுதாமப்பா...! ஒஸ்பிடலுக்கு கொண்டு போறாங்களாம். அவருக்கு ஏதும நடந்திச்சென்டா நான் இருந்து என்ன பயன் அப்பா? அப்பா... வாங்க ஒஸ்பிடலுக்கு போவம்.. ஆ..'' என்று அழத் தொடங்கினாள் உமா.

''எவ்வளவு கஷ்டப் பட்டு எடுத்த மாப்பிள்ளை. தங்கத்திலே வார்த்தெடுத்த பிள்ளை..! வாம்மா. முன் கடை ஆட்டாவை எடுத்திற்று போவம்'' என்றார் மூர்த்தி.

உலகமே தலையில் விழுமாப் போலிருந்தது உமாவுக்கு! பைத்தியம் பிடித்தவள் போலானாள். புலம்பியவாறு புறப்பட்டாள். வைத்தியசாலை நெருங்க நெருங்க துடித்தாள். துவண்டாள். கண்ணீர் தண்ணீர் போன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேறியது.

ஆட்டோவை விட்டு இறங்கினார்கள். அண்ணன் சந்திரன் வைத்தியசாலை முகப்பிலே நிற்பதை கண்டு கொண்டாள். முகத்தை தொங்கப் போட்டு நின்றான் சந்திரன்.

''அண்ணா. அவரை பார்த்தீங்களா?'' அதற்கு மேல் உமாவால் பேச முடியவில்லை.

''நான் பத்து நிமிஷங்களுக்கு முன்ன வந்திற்றன். அன்பு மச்சானை விட வேறு என்ன பெரிசு?'' என்றான் சந்திரன். உமாவை எப்படித் தேற்றுவதென தெரியாது நின்றான். எப்படியாவது சொல்லித்தானே தீர வேண்டும்!

''விதி நம்ம வாழ்விலே விளையாடுது தங்கச்சி. நாமே என்ன செய்ய முடியும்?'' என்று நிறுத்தினான் சந்திரன்.

''நாம பார்க்க முடியாதா? அவருக்கு என்ன நடந்திச்சு சொல்லுங்க அண்ணா'' என்று விடாப் பிடியாக கேட்டாள் உமா.

''அவர் போயிட்டாரும்மா...! விதி அவர்ர உயிர விளையாடிற்று. காலம் முழுக்க நம்மை அழவைச்சிற்று போயிட்டாரும்மா. என் மனம் நெறைஞ்ச மச்சானே... உங்க மீது நாங்க ஆசை வைச்சோமே! கண்ணில்லாத கார் சாரதியே என் தங்கையின் வாழ்விலா விளையாடணும்'' சந்திரனே ஒப்பாரி வைத்தான். இனி அப்பா மூர்த்தியை கேட்க வேண்டுமா?

''மருமகனே... உன்னைப் போல மாமாவை மதித்த மாப்பிள்ளை யாரும் இரிக்க மாட்டாங்க. என் எதிரே உட்காரவும் மாட்டாரே. எதைச் சொன்னாலும் கேட்டுக்குவாரு. என் மகளின் வாழ்வும் அல்லவா இருண்டு போச்சு. நான் என்ன செய்வேன்?'' தலையில் கை வைத்து அழத் தொடங்கினார் அப்பா மூர்த்தி.

''அழாதேங்க அப்பா...! நான் அடுத்த கிழமை திருமணம் செய்துக்க போறல்ல. என் தங்கைக்கு வாழ்க்கை ஒன்றை அமைச்சு கொடுத்த பொறகுதான் என்னைப் பத்தி யோசிப்பன்'' என்றான் சந்திரன்.

''அண்ணா... பாவம் வதனா. எவ்வளவு ஆசையோட இரிப்பா. அவளும் என்னைப் போல ஒரு பெண்தானே...! அன்புக் கணவனோட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த சொற்பகால நினைவுகளே போதும். அவரின் நினைவாக என் வயிற்றில் வளரும் செல்வக் குழந்தையும் எனக்குப் போதும். நீங்க மணம் முடிச்சு சந்தோஷமாக வாழுங்க அண்ணா" என்றாள் உமா.

"என் தங்கை வாழ்வை இழந்து தனி மரமா நிக்கிறப்போ எனக்கு என்ன கல்யாணம் வேண்டிக் கிடக்கு! நல்லவங்க பெரியவங்க என்ன சொல்வாங்க. எனக்கு கல்யாணம் தேவல்ல. சவத்தை கொண்டு போய் அடக்கம் செய்யிற வேலையை பார்க்கணும். இன்னும் அரை மணித்தியாலத்திலே வரச் சொன்னாங்க." என்றான் சந்திரன்.

சிறிது நேர மௌனம். மீண்டும் சந்திரனே பேசினான். "தங்கச்சி அப்பாவை கூட்டிற்று வீட்ட போங்க. நான் எல்லாத்தையும் முடிச்சிற்று சவத்தை கொண்டுவாரன்" என்றான் சந்திரன். விம்மி விம்மி அழுதவாறு ஆட்டோவில் போனாள். கூடவே தகப்பனும் ஏறிக்கொண்டார்.

"ஐயோ... மகனே... உனக்கு நல்ல வாழ்வு அமைச்சித்தந்த கடவுள் உன் உசிரை பறிச்சிக்கொண்டாரே, என் பிள்ளை இல்லாம எப்படி இரிப்பேன்." என ஒப்பாரி வைத்துக் கொண்டு ராஜகோபாலின் தாய் விசாலாட்சி உமாவின் வீடு வந்து சேர்ந்தாள்.

சிறிது நேரத்தில் உமாவும், தந்தை மூர்த்தியும் ஆட்டோவில் இருந்து இறங்கி வந்தார்கள்.

"என் மகனைப் பார்த்தியா மகன் நிம்மதியாக கண்ணை மூடிற்றான். நாம எப்பிடிம்மா இரிக்கிற? சீதேவி போயிற்றார்" என்று கூறி மீண்டும் அழுதாள் ராஜகோபாலின் அம்மா. விசாலாட்சி.

"அழாதேங்க மாமி விதியை மதியால் வெல்லலாம் ஆனா கடவுளின் செயலை எவராலும் தடுக்க முடியாது. நான் விதியோடு போராடி வாழப்போறன் மாமி. அவரோடு வாழ்ந்த சொற்ப கால நினைவுகள் எனக்குப் போதும். வயிற்றில் வளர்ற அவர்ர பிள்ளையை படிப்பிச்சி ஆளாக்கிறதான் என் வாழ்வின் அர்த்தம்" என்றாள் உமா.

ராஜகோபாலின் உயிரற்ற வெறும் உடல் வந்து சேர்ந்தது. பெண்களின் அழுகுரல்கள் உமாவின் வீட்டில் மாறி மாறி ஒலித்துக் கொண்டே இருந்தன. ஆண்கள் பலர் ஆறுதல் சொல்லியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனற்றுப் போயின. பெண்களுக்கு அழுவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

●

சொன்னது போல் திருமணத்திற்கு நான்கு நாட்கள் தான் இருந்தன. அவ்வேளையில்தான் சந்திரனது தங்கையின் கணவன் இறந்து விட்டான். இன்னும் திருமண நாள் நீளப் போகிறது. அடுத்த மாப்பிள்ளை பார்த்து திருமணம் செய்து வைக்கும் வரையும் வருடமோ, வருடங்களோ காத்திருக்க வேண்டி வந்துவிட்டதென வருத்தப்பட்டாள் வதனா.

தங்கை இருக்கத் தான் திருமணம் செய்யக் கூடாதென நினைத்தவன் விதவையாக விட்டுவிட்டு திருமணம் செய்யமாட்டான். என்று உறுதியாக நம்பினாள் வதனா. நாட்களை எண்ணி எண்ணி இருந்து மகிழ்ந்தவளுக்கு ஏக்கமும் மனச்சுமையும் கூடின. முகம் சோர்ந்து வாடியது.

''மகள்! கவலைப்படாதே மகள். சந்திரன் ஒரு மாதமாவது இருந்து மனத்துயரை தீர்க்கட்டும். அதுக்குப்பொறவு கட்டாயம் முடிப்பாரு. அவர்ர தங்கச்சிம் இனித் திருமணம் தேவல்ல எண்டு சொலலுராவாம். புருசண்ட பென்சன் எடுத்து புள்ளைய பெத்து வளர்க்கப் போறாவாம். நல்ல பெண்கள் இன்னொரு திருமணம் செய்ய விரும்ப மாட்டாங்க. காத்திருந்து திருமணம் செஞ்சி இலவு காத்த கிளியின் நிலைக்கு வந்து விட்டாள் உமா: ஐயோ.. பாவம்'' என்றார் வதனாவின் அப்பா ராகவன்.

''உமா மட்டுமல்ல. நானும் இலவு காத்த கிளியின் நிலையில் தான் இருக்கிறேன். உமா சொற்ப காலமாவது வாழ்ந்து விட்டாள். அந்த நினைவே போதும் நீண்ட காலம் வாழ. ஒரு நாளாவது நான் வாழ்ந்து பார்க்கலியே...! எனக்கு வாழ்வு நீண்டு போகிறது...! எனக்கு வாழ்வென்பது இல்லை போல தெரியுதே!'' என்று சொன்ன வதனா பெரு மூச்சு விட்டாள்.

சின்னப்பிள்ளை போல அழுதாள் கண்ணீர் சொரிந்தாள், ''அழாதே வதனா. நாம் நினைக்கிற ஒண்டு நடக்கிற ஒண்டு. தைரியமா அனுபவிச்சு வெற்றி காணணும்'' என்றார் ராகவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இனி நான் என்ன வெற்றி காணப்போறேன்'' என்று கூறிய வதனா படுக்கை அறையை நாடினாள். நெஞ்சு வெடிக்கும் போல கனத்தது. மனம் சிந்தனையில் ஆழ்ந்தது.

''உயிருக்கு உயிரான சந்திரன் என்னைக் கைபிடிக்க நெனச்சார். இடையிலே விதி விளையாடிற்று. அவர் தங்கை உமா விதவையாகிற்றாள். உமா திருமணம் தேவல்ல என்கிறாள். உனக்கு திருமணம் செய்து போட்டுத்தான் நான் திருமணம் செய்வேன் என்றிருக்கிறார் சந்திரன். இதிலே எது நடக்கப் பேகுதோ? ரெண்டுமே நடக்காமல் இருக்கலாம். ஆ.... கண் இருட்டுதே! அம்மா.. அம்மா... வாம்மா! என்று அலறினாள் வதனா.

ஓடி வந்தாள் அம்மா லட்சுமி.

''என்ன வதனா... என்ன உனக்கு?'' லட்சுமி கேட்டாள்.

''மயக்கமாய் இருக்கு நெஞ்சு வலிக்குது ஆ... தண்ணீ... கொஞ்சம் தாமா.'' என்றாள் வதனா. ஓடிப்போய் வேகமாக வந்தாள் லட்சுமி.

''இந்தாம்மா... குடி'' லட்சுமி கூறியதும் அதனை வாங்கி அருந்தினாள். வதனா மூச்சு இழுத்தாள்.

''அம்மா... ஏழையாகப் பொறந்தா கண்ணீருக்கு சொந்தக்காரங்கதான்! எவரும் வாழ்வு தர முன்வராத போது சந்திரன் துணிந்தார். அவரது தங்கையின் வாழ்வு கண்ணீர்க் கதையாகிவிட்டது. தங்கை தனிமரமாக நிற்பதை எந்த அண்ணன் விரும்புவான்? எனது நிலை காத்திருக்கும் நிலைதான்! காலம் முழுக்க கற்பனையும் கதையும் கண்ணீரும்தான் மாறி மாறி வருகின்றன...! தலைவிதி... நான் தூங்கப் போறேன் அம்மா...'' என்று கூறி கட்டிலில் சாய்ந்தாள் வதனா...

தலை சுற்றுமாப் போலிருந்தது. கண் இருளானது. தூக்கம் கண்ணை மூட வைத்தது.

வெகு நேரமாகியும் வதனா எழாததினால் தாய் லட்சுமிக்கு சந்தேகம் எழத்தொடங்கியது.

இரவு சாப்பிடுவதற்கு கொஞ்ச நேரம் முன்பாக படுக்கையறைக்குள் நுழைந்தாள் லட்சுமி. வதனா ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது போல தெரிந்தது. உடம்பு நூலும் அசைய வில்லை. வதனாவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI

REFERENCE

நெருங்கினாள் மூச்சு விடும் அடையாளமோ இதயத்துடிப்போ இருக்க வில்லை.

கையைப்பிடித்து ''வதனா... வதனா...'' என்று எழுப்பிப் பார்த்தாள் லட்சுமி. வதனா அசைய வில்லை முகத்தைத திருப்பினாள் குளிர்திருந்தது. சில நிமிடங்களுக்கு முன்னர்தான் அவளின் உயிர் பிரிந்திருக்க வேண்டும்.

'காத்துக் காத்து இருந்த உனக்கு மேலும் காக்க வந்ததினால் ஏற்பட்ட அதிர்ச்சி, உன் மனதைத் தாக்கி உன் உயிரை அல்லவா பிரித்து விட்டது. உன் வாழ்வைப் பார்த்து நிம்மதி மூச்சு விடலாம் என்றிருந்த எங்களை கண்ணீர் விட வைத்து நீ போய்விட்டாயே' என்று அழத்தொடங்கினாள் லட்சுமி. போதாக்குறைக்கு அப்பா ரகவனும் வந்து அழத்தொடங்கினான்.

'இனித்திருமணம் நடக்குமா?' என்ற வினாவுக்கு விடை கிடைக்காத காரணத்தினால் 'ஏக்கம்' வதனாவின் இதயத்துடிப்பை நிறுத்தியிருக்க வேண்டும். அவள் நினைத்தது நடந்ததா? இலவு காத்த கிளியாகவே அவளும் இருந்தாள்.

வதனா இறந்த செய்தி சந்திரனின் வீட்டுக்கு போய் சேர்ந்தது.

''அண்ணா.. நான் சொன்னா நீங்க கேட்கமாட்டீங்களே.! நான் திருமணம் செய்தவள். அவர் இறந்திற்றார். என்னால தனிய வாழமுடியும். உங்களுக்காக வதனா இருந்தாள். இன்னும் மேலதிகமா ரெண்டுநாள் சென்றாவது முடிச்சிருக்கலாம். இப்ப முடிக்க மாட்டேன் என்று சொன்னீங்க ஆசையோடு இருந்தவளுக்கு உங்கட பேச்சு ஏக்கத்தை ஏற்படுத்தி இதயத் துடிப்பை நிற்பாட்டிருக்கு. நடக்கிற எல்லாம் நடந்து முடிந்திருக்கு இனி அழுது என்ன பயன்?'' என்றாள் உமா.

''கடவுளே.. என்னுயிர் தங்கையின் வாழ்வையும் முடித்தாய் கவலை மறைந்த பின் கல்யாணம் செய்வோம் என்றிருந்தோம். காதலியின் உயிரையும் கைப்பற்றினாய். என்னை வாழ்வில்லாத வெறும் ஜடமாய் ஆக்கிவைத்தாய் இனி எனக்கு வாழ்வு எதுக்கு? இறப்பு வரும் வரைக்கும் ஏதோ மனிதனாக இருக்கிறேன்'' என்றான் சந்திரன்.

வாழ ஆசைப்பட்டவர்களின் நிலை இப்படியாகி விட்டதே! வாழத்தெரியாதவர்களின் நிலை எப்படி உள்ளது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15525

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகமானவர்



1976ல் எழுதத் தொடங்கிய ''ஒலுவில் அமுதன்'' அக்கால கட்டத்திலே 'புதுக்குரல்' சஞ்சிகையையும் வெளியிட்டுக் கொண்டு வந்தார்.

கவிதை மூலம் இலக்கிய உலகிற்குள் புகுந்த அவர் கதை, கட்டுரை, பாடல், நாடகம் என சகல வடிவங்களிலும் இலக்கியம் படைத்துள்ளார்.

அவரது நாலாவது வெளியீடுதான் இந்த நாவல்!

நிச்சயம் இன்னும் பற்பல வெளியீடுகளை இவர் மூலம் எதிர்பார்க்கலாம்.

என் அன்பிற்கு பாத்திரமான கவிஞரும் எழுத்தாளருமான ''ஒலுவில் அமுதன்'' நோயற்று நீண்ட காலம் இலக்கிய பணி புரிய வாழ்த்துகிறேன்.



**கவிஞரும் எழுத்தாளருமான**
**மருதூர் வாணர்**
(சமாதானம் சஞ்சிகை ஆசிரியர்)
**ஈழபாரதி, இசைவாணர், புரட்சிக் கவி)**
**326, பிரதான வீதி,**
**மருதமுனை (இலங்கை)**

செலக்ஷன் ஒப்செற் பிறின்டர்ஸ் - அக்கரைப்பற்று - 06, தொ.பே.067-78219

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org